1658
... No. 2569
1658

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

மலர் 4

இதழ் 9

செந்தமிழ் மாதசஞ்சிகை

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1352 ஜமாதுல்அவ்வல் மீ 1933 செப்டம்பர்

OFFICE OF THE REGISTRAR OF ... 21 SEP 1933 MADRAS

உள்ளடக்கம்

1. ஸூரயே அபஸ் ... 321
2. நாயக வாக்கியம் ... 322
3. இஸ்லாத்தின் சிறப்பு ... 324
4. சன்மார்க்கம் நாகரீகத்துக்கு முரணானதா? 325
5. இஸ்லாமிய சரிதை ... 328
6. தஞ்சை ஜில்லா முஸ்லிம்மகாநாடுகள் ... 336
7. தஞ்சை ஜில்லாவில் யான்கண்டகாக்ஷி ... 345
8. வேலூர் மத்ரஸாவில் பரபரப்பு ... 351
9. விருதுநகரில் 144 யாருக்கு? ... 356

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3 0 0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு ...	,,	4 0 0
தனிப் பிரதி ...	,,	0 4 0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்பட மாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,
43-A, போஸ்டாபீஸ் தெரு,
G. T., மதராஸ்.

حفاظة الاسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 4	ஹிஜ்ரி 1352 ஜமாதுல்அவ்வல் மீ 1933 ௵ செப்டம்பர் மீ	இதழ் 9

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 SEP 1933
MADRAS

ஸூரயே அபஸ்

(சென்ற மாதத் தொடர்)

அல்லாஹ்தஆலா, குர்ஆன் ஷரீபின் மேன்மைகளைக் குறிப்பிடுங்கால் அதன் இரு உன்னதங்களையும் இவ்வத்தியாயத்தின் 13, 14, 15, 16-வது வாக்கியங்களின் மூலம் தெரிவித்து, அவ்விருமேன்மைகளின் காரணமாய் குர்ஆன்ஷரீபானது இதர வேதங்களைப் பார்க்கினும் சிறந்து விளங்குகிறதென்றும், அதில் எவ்வகையான மாறுதலோ கூடுதல் குறைவோ, புறட்டல் திரித்தலோ ஏற்படாமல் அல்லாஹ்த ஆலாவால் இறக்கிவைக்கப் பட்டவாறே இலங்கிக் கொண்டிருக்கிறது என்றும் அறிவிக்கின்றான். சுருங்கக் கூறுமிடத்து, இவ்வுலகில் அனுப்பப்பட்ட சகல வேதங்களிலும் பிற்காலத்தில் மாறுதலேற் பட்டுப்போயிருப்பதை நிதான அறிவு படைத்த யாவரும் நன்கெடுத்துக் கூறுவதுடன் குர்ஆன்ஷரீபில் அவ்வாறான எவ்வித புறட்டலும் திரித்தலும், கூடுதல் குறைவும் கிடையாதென்பதை பஹிரங்கமாய் ஒப்புக் கொள்கின்றனர்.

இதன் 21-வது வாக்கியத்தில் மானிடனை மரிக்கச்செய்து பின்னர் புதை குழியில் வைக்கச் செய்கிறான் எனக் கூறப்பட்டிருக்கிறது. அதாவது, மானிடன் எவ்வாறு தமது விருப்பப்படி இவ்வுலகில் ஜனிக்கவில்லையோ அவ்வாறே அவன் மரணமடைவதும் அவனது சம்மதத்தைப் பொருத்ததாக இருக்கவில்லை. எனவே மானிடன் மரணமடையாம லிருப்பதற்காகவும், அவனுக்கு வியாதி ஏற்படாமலிருப்பதற்காகவும், விருத்தாபிய திசையின் பலக்குறைவு ஏற்படாமலிருப்பதற்காகவும் இலக்ஷக் கணக்கான ஆலோசனைகள் புரிந்தபோதிலும், அவன் அவைகளை விட்டு ஒருக்காலும் தப்பித்துக் கொள்ள முடியாது. உலகின்கண் மாபெரும் நிபுணத்துவம் வாய்ந்த எத்துணையோ புத்திமான்கள் தோன்றி பற்பலவாறான நூதன ஆராய்ச்சிகள் புரிந்து மட்டில்லாக் கல்விகளைக் கண்டுபிடித்து பல்வகையான நூதனங்களை உற்பத்தி செய்திருக்கின்றார்கள். ஆனால் அன்னோரால் மரணத்தைத் தடுத்துக் கொள்வதற்குள்ள எவ்விதவழியும் கண்டுபிடிக்க முடியவேயில்லை. ஆகவே இதுவும் ஆண்டவனது அபார சக்தியை வெளிப்படுத்திக்காண்பிக்கும் ஓர் அற்புதமாகத் திகழ்கின்றது. மரணமானது மறு உலகினுக்குச் செல்

வதற்குள்ள தலைவாயலாக யிருக்கின்றது. எனவே, மானிடன் இவ்வுலக வாழ்க்கையின் வெள்ளாமையில் எதை விதைத்திருந்தானோ அதைத் தான் அறுவடை செய்வான்; எதனைப் பெற்றுக்கொள்வதற்கு உலகினில் கஷ்டப்பட்டானோ அதன் பிரதிப்பலனைத்தான் அடைந்துகொள்வான். ஆகவே, மானிடன் மரணமடைந்தபின் அவனை கபரில் கொண்டு சேர்த்துவிடுகின்றார்கள். அவன் பூமியில் புதைக்கப்படுவதற்கும், தண்ணீரில் மூழ்கிப் போய்விடுவதற்கும், நெருப்பில் எறிந்துபோவதற்கும், அவனது சரீரம் காற்றில் தொங்கிக்கொண்டிருப்பதற்கும் கபர் என்றே கூறப்படும். அதிலேயே அவன் நன்மை தீமைகளுக்குடைய கூலியை அடைகின்றான். அதற்குச் சிலகாலத்திற்குப்பின் அல்லாஹுதஆலா நாடியபொழுது அவனை கபரைவிட்டெழுப்பி, அவன் இப்பூஉலகின்கண் புரிந்துள்ள நன்மை தீமைகளுக்குத் தக்க கூலி அளிப்பான் என்பதை நன்கு தெரிவிக்கிறான் என்பதே.

பிறகு மானிடனது கபர் வாசத்திற்குப் பின் புதியதோர் மாறுதல் ஏற்படும் என்பதை இதன் 22-வது வாக்கியத்தின் மூலம் அறிவித்து, அல்லாஹுதஆலா தான் நாடிய பொழுது அம்மையித்தை கபரினின்று எழுப்பி இவ்வுலகினில் அவன் செய்த நன்மை தீமைகளுக்குக் கூலிகொடுப்பான் என்பதைத் தெரிவிக்கிறான். இவ்வளவு நீண்ட சம்பவத்திற்குப் பிறகுதான் மானிடன் தனது நாட்டத்தை அடைகின்றான். அதற்குப்பின் எங்கும் அவன் செல்லவேண்டிய தவசியமில்லை. இவ்விஷயங்களை அறிவித்து மறுமை நாளில் மானிடன் மேன்பதவி அடைந்துய்வதற்கான வழியைக் காண்பித்துக் கொடுப்பதற்காக உலகின்கண் நபிமார்கள் அனுப்பப்பட்டார்கள். மானிடன் அவர்களின் வார்த்தைகளுக்குச் செவிமடுக்காது ஆண்டவனது கட்டளையை மீறி நடக்க முற்பட்டுவிட்டான். (வல்லாஹு அஃலம்)

நாயக வாக்கியம்

"அகப்பெருமைகொண்டு அல்லாஹுதஆலாவைமறந்து உட்கார்ந்திருக்கும் அடியானும், தன்னை அடக்கி ஆள்வதற்குள்ள நாயனொருவன் இருப்பதைமறந்து, இதரர்கள் மீது அதிக்கிரமம் செய்துக்கொண்டிருப்பவனும், மறுமையை மறந்து உலகத்தின் அற்ப வாழ்க்கையின்மீது பராக்கா யிருப்பவனும், உலகின் ஆசாபாசங்களில் தமதுமுழுகவனத்தையும்செலுத்தி அதிலேயேபராக்காயிருப்ப தன்பயனும், தான் எங்கிருந்து வந்தான், மறுபடி எங்கு செல்லவேண்டும் என்பதை உற்றுணர்ந்து பாராது மறதிகேட்டிலிருப்பவனும், வழிகேட்டைப் பின்பற்றி நடப்பது கொண்டு சன்மார்க்கத்திற்கு தீங்கு விளைவிப்பவனும், பேராசையின் மிகுதியால் பலரிடமும் யாசகம் வாங்கித்திரிபவனும் மானிடர்களில்மிக மிக கெட்டவனாகயிருக்கும்" என்று எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் அறிவித்ததாக அஸ்மாஉபின்த் அமீஸ் அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

மேலே கூறப்பட்டுள்ள நல்லுபதேசங்கள், மானிடர்கள் இருபதியிலும் சிதேவித்தன மடைவதற்குள்ள அரும்பெரும் ஔடதங்களாய்த் திகழ்கின்றன. எனவே, எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்களினது இவ்வுபதேசங்களை ஒவ்வொரு நேரத்திலும் கவனத்திற்குக் கொண்டுவருவோமாகில் நாம் உண்மை முஸ்லிம்களாக—ஜெயசீலர்களாகத் திகழ்வோமென்பது திண்ணம். ஆனால் துர் அதிர்ஷ்டவசமாக நாம் அவைகளை உற்றுணர்ந்து பாராதவர்களாகவே இருக்கிறோம். ஹதீது என்னும் நல்லுபதேசங்களைக் கேட்டவுடனேயே முகத்தைத் திருப்பிக் கொள்வதற்கு முற்பட்டுவிடுகிறோம். உலகவிஷயங்களிலுள்ள அற்பசொற்ப பொய்க்கதைகளைக் கூட தக்கமுறையில் படித்து அதிலேயே நமது பொழுதைப்போக்கிக் கொண்டிருக்கிறோம். இந்நிலைமையில் நமது உயிரினும் அருமையான நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் அரும் உபதேசங்களில் சற்றுநேரம் கவனம் செலுத்துகிறோமில்லை.

OFFICE OF THE ... 21 SEP 1953 MADRA

"ஒருமனிதனுக்குத் தொந்திரவுகொடுத்து அவனை அடக்கி ஆள்பவன் சுத்தவீரியனல்ல. ஆனால் கோபம் அதிகரிக்கும் நேரத்தில் அதனை அடக்கி சமாளித்துக் கொள்பவன் தான் சுத்தவீரனாகும்" என எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

மானிடன் கோபம் அதிகரிக்கும் நேரத்தில் புத்தியை இழந்தவனே போலாய்விடுகின்றான்; அந்த நேரத்தில் தனக்கு ஏற்படும் இலாப நஷ்டங்களை சற்றேனும் ஆராய்ந்து பார்ப்பதே கிடையாது; சிலகால் கோபம் அதிகரிக்கும் நேரங்களில் புரியும் காரியாதிகளினால் பின்னர் வெட்கமடையும்படியும் நேரிட்டுவிடுகிறது. இதற்காகத்தான் உலக சீர்திருத்தகராய எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள், கோபம் அதிகரிக்குங்கால் அதனை அடக்கி ஆள்பவனே மகா சிரேஷ்டமானவனாகுமென்று தக்கமுறையில் எடுத்துக் காண்பித்திருக்கிறார்கள்.

ஒரு மனிதர் எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்களிடம் வந்து, "யான் யாரிடம் ஒழுங்கான முறையில் நடந்துகொள்ள அதிகம் கடமைப்பட்டிருக்கிறேன்" என வினவியமைக்கு, உம்முடைய தாயாருடன் நடந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறீர் எனக் கூறினார்கள். மறுமுறையும் அவ்வாறே கூறிவிட்டு அதன்பின் உமது தந்தை உறவினர்களுடன் ஒழுங்கான முறையில் நடந்துகொள்ளக்கடமைப்பட்டிருக்கிறீர் எனக்கூறினார்கள்.

'அந்த மனிதனுடைய முகத்தில்மண் விழக்கடவது' என உலகதயாளர் சற்குணசீலர் (ஸல்.) அவர்கள், மூன்றுமுறை கூறினார்கள். அதுபொழுது அங்கு வீற்றிருந்த சஹாபாக்கள் யாவரும், யாருடைய முகத்தில் மண் விழும்படி கூறுகின்றீர்களென்று வினவவே, எவனொருவன் தன் தாய் தந்தை இருவரோ அல்லது அவர்களிலொருவரோ உயிருடனிருக்கும் நிலைமையில் அவர்களுக்குப் பணிவிடைசெய்து அதன்பொருட்டால் சுவனபதியடையவில்லையோ அன்னவன் நாசமாகப் போகக்கடவன் என்று கூறினார்கள்.

குர்ஆன் ஷரீபில், அடியான் அல்லாஹ்தஆலாவுக்குப் புரியவேண்டிய கடமைகளைக் குறிப்பிடுமிடங்களிலெல்லாம் தாய்தந்தையர்களுக்குத் தொண்டாற்றவேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தியே கூறப்பட்டிருக்கிறது. இந்நிலையில் சில வாலிபர்கள் தங்களது தாய் தந்தையர்களுடன் ஒழுங்கான முறையில் நடந்துகொள்ளாது, அவர்களின் ஒவ்வொரு வார்த்தைக்கும் கேலி பரிகாசமாய்க்கூறி வருவதுடன், அன்னோர்களை விர்த்தாப்பியர்களென்றும், புத்திக் குறைவானவர்களென்றும் கூறி அவர்களின் வார்த்தைகளை முதுகுக்குப் பின்னால் போட்டு விடுகிறார்கள். இஃது மானிடனை பாதாளத்தில் தாழ்த்திவிடும் கொடும் வியாதியாகுமென்பது திண்ணம்.

ஒரு மனிதர் உலக தயாளர் சற்குணநாதர் (ஸல்.) அவர்களது சமுகம்வந்து "அல்லாஹ்வின் ரசூலே! அல்லாஹ்தஆலாவின் பாதையில் யுத்தம் புரிய வேண்டுமென்னும் விருப்பம் எனக் கேற்பட்டிருப்பதால் அனுமதி அளிக்கும்படி கோருகிறேன்" என விண்ணப்பித்துக்கொண்டார். இதனை செவியுற்ற எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் "உமக்குத் தாய்தந்தையர்கள் இருக்கின்றார்களா" வென வினவியவைக்கு, ஆம் இருக்கின்றார்கள் என அம்மனிதர் கூறினார். உடனே சென்று அவர்களுக்குத் தொண்டுபுரியும்; அவர்களது பாதாரவிந்தத்திற்குத் தாழால் சுவர்க்கமிருக்கிறதென்று எம்பெருமானார் (ஸல்.) கூறினார்கள். அதாவது, அவர்களுக்குப் பலவகையிலும் பணிசெய்துகொள்; அவர்களுக்கு முன்பாக உயர்ந்த சப்தத்தோடு வார்த்தையாடாதீர்; தாம் சொல்வது அவர்களுக்குப் புலனாகவில்லையானால் யாதொன்றுங் கூறாமலிருந்துவிடு; அல்லது தக்கமுறையில் அவர்களுக்கு விளக்கமாகுந் தோரணையில் மறுமுறை கூறுவாயாக என்பதே. சோதரீர்! மேலே கூறப்பட்டுள்ளவைகளால், தாய் தந்தையர்களுக்கு வழிப்பட்டு நடப்பது எவ்வளவுதூரம் அத்தியாவசியமாகுமென்பதை நன்கு தெரிந்துகொண்டீர்கள். ஆனால், சன்மார்க்கத்திற்கு விரோதமான ஏதாகிலுமொரு செயலை தாய்தந்தையர்கள் புரியும்படி கூறுவார்களாயின், அவைகளைக் கேட்டு நடப்பது உங்கள்மீது கடமையாக மாட்டாது. ஆண்டவனது உத்திரவு, எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது கட்டளை ஆகியவைகளை முதன்மையாகக்கொண்டு அதற்கு முரணில்லாத விதத்தில் தாய் தந்தையர்களுக்கு வழிப்பட்டு நடப்பது பிரதானக் கடமையாகும்.

ஆகவே, மாதாப் பிதாக்களுக்கு வழிப்பட்டு நடப்பது நம்மீது முக்கியமாகும்.



இஸ்லாத்தின் சிறப்பு

இஸ்லாம் மார்க்கம் உலகினுக்குப் புரிந்த—புரிந்துவருகிற உயர்வும், தகவும் ஒன்றிரண்டல்ல ; அனந்தமாகும். ஏனைய மதங்களில் குருக்களும் பாதிரிகளும் மக்களைப் பொம்மை போல் ஆட்டிவந்தவரும் கோரக்காக்ஷி குறிப்பிடும் தரமன்று. இஸ்லாத்திலோவெனில், அவ்வாறான கோரக்காக்ஷி ஒருக்காலும் தலைகாட்டியது கிடையாது. எனவே, இஸ்லாம் மார்க்கமானது அரபியநாட்டு மக்களின் மிருக வாழ்வையும், ஆபாசங்களையும் போக்கி அறிவும், ஆண்மையும் ஊட்டிவளர்த்து வந்தது. இப்பெருமை இஸ்லாத்தையே சார்ந்ததாகும். மதுபானம் அறவே கூடாதென இஸ்லாம் ஆணையிட்டுநிற்கின்றது. நம்பிக்கையும் சகிப்புத்தன்மையும் தியாகமும் இஸ்லாம் மதபோதனைகளில் பிரதானமாகும். சுருங்கச்சொல்லின் உலகமுழுதையும் தூய்மைப்படுத்தியது இஸ்லாம் மார்க்கமேயாகும். எனவே சன்மார்க்கத்தை நாடுபவனே முஸ்லிம் ஆவன் என்பது அதன் அரிய கொள்கையாகும்.

ஐரோப்பா வெங்கும் அறியாமை என்னும் காரிருள் கவிந்திருந்தகாலை, நல்லறிவாம் ஜோதி தந்து நாகரீகம் என்னும் நற்கதிபயந்தது இஸ்லாமே. இஸ்லாம் எழுந்திராது போயின், ஐரோப்பாவின் பலபாகங்கள் இன்றைக்கும் மாயையில் மூழ்கிக்கிடக்க நேர்ந்திருக்கும். முன்னாளிலே மூடக்கொள்கையில் மூழ்கிக்கிடந்த அரபியர், பின்னாளிலே இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றியதும் எத்தகைய ஏற்றமுடையவர்களாய் விட்டனரென்பதை ஈங்கு கவனிப்போம். ஆதியிலே கிரேக்கரும் உரோமரும் கீழ்த்தேசங்களில் நலமும் பலமும் பெற பெரும்முயற்சி புரிந்தனர். அதுகாலை அரபியர்கள் ஐரோப்பா முழுதும் பரவி அரிய அறிவையும் ஆற்றலையுங்கொண்டு பற்பல தேசங்களைக் கைப்பற்றி ஸ்பெயின் தேசத்திலே நீண்டகாலம் நிலையாக நின்று, நாகரீகமும் நல்வாழ்வும் அளித்தனர். அவர்களின் எழுச்சி ஒன்றே இஸ்லாத்தின் ஏற்றத்தைக் காட்ட போதிய சான்றாகத் திகழ்கின்றது. அரபியர் ஐரோப்பாவுடன் நின்றுவிடவில்லை. இந்தியா, இலங்கை, சீனா முதலிய இடங்களிலும் தங்களது மார்க்கத்தின் மகிமையான உண்மையையும், உயர்வையும் ஓங்கிவளரச் செய்தனர். அன்னாரின் எழுச்சி காரணமாக, பாரசீக, உரோம, எகிப்திய, நாகரிக நயம்குலைந்து போகலாயிற்று என்றெண்ணுவோர் உண்மை உணராமக்களாவர். சமூக ராஜியவிஷயங்களில் மக்களுக்குப் பல்லாற்றானும் பண்புதரப் பரிவாக நின்றது இஸ்லாம் மார்க்கந்தான் என்னும் உண்மையை யாரே மறுக்கவல்லார். ஆதலினால் தான் இஸ்லாத்தை அனைவரும் அன்புடன் எதிர்கொண்டழைத்து இனிதாக ஏற்றுக்கொண்டனர்.

ஆப்பிரிக்கா, சீனா, மத்திய ஆசியா, ஐரோப்பா, பாரசீகம், இந்தியா ஆகிய எல்லாயிடங்களிலும் இஸ்லாத்தின் ஏற்றத்தை இன்றும் காணலாம். சீன முஸ்லிம்கள் இன்றும் ஆண்மையாளர்களாக விளங்குகின்றார்கள். பக்தாத் நகரிலே கலீபாக்கள் அரசுபுரிந்த காலத்தில், இஸ்லாம் இணையற்றுவிளங்கியது போல் எக்காலத்திலும் விளங்கியது கிடையாது. ஐரோப்பாவிலே கார்டோவா எனும் நகரில் ஏற்பட்ட இஸ்லாமிய சர்வகலாசாலையே ஐரோப்பியருக்கு அந்நாளில் கல்விக்களஞ்சியமாய், அறிவின் பொக்கிஷமாய்த் துலங்கி நின்றது. கலைஞானம், விஞ்ஞானம், வைத்தியசாஸ்திரம், கணிதநூல், ரஸாயனம், இயற்கைத் தத்துவ சாஸ்திரம், வேத தத்துவ ஆராய்ச்சி, சிற்பம் முதலியவற்றையும் ஐரோப்பாவுக்கு போதித்த புகழ்பெருமை இஸ்லாத்

தையே சாரவேண்டும். தவிர இஸ்லாம் ஓங்கி நின்றகாலத்திலே, ஸ்பெயின் தேசத்தில் பல வகையான கைத்தொழில்கள் நிரம்பியிருந்தன. கப்பல் கட்டுந்தொழில், பூஞ்சோலை வைத்துவளர்த்தல், கண்ணாடித் தொழிற்சாலை, இரும்பு பித்தளைப்பாண்டத் தொழில், வேலைப்பாடான ஜிகினுவேலை, பருத்தி நெசவுத்தொழில், வெள்ளிச்சுரங்கம், இரத்தனக் கம்பளம் நெய்தல் முதலிய எண்ணிறந்த தொழில்கள் தலை சிறப்பதற்குத் தட்டாது இஸ்லாம் மார்க்கமே பேருதவிபுரிந்தது.

இதுவன்றி இஸ்லாம், இந்தியாவுக்கும் எவ்வளவோ நன்மை புரிந்துளது. மக்களின்வாழ்வும், மனப்போக்கும் மாறும் வண்ணம் விருப்பம் தந்தது இஸ்லாமே. மக்கள் அனைவரும் சரிநிகர் சமானமாவர் எனும் உணர்ச்சியை ஊட்டியதற்கு இஸ்லாத்தை அனைவரும் போற்றவேண்டும். ஜனநாயகமும் ஆண்மையும் ஊட்டியது இஸ்லாமே யன்றி வேறில்லை. இத்தகைய சிறப்பினை அளித்த இஸ்லாத்தின் மேன்மைகளை எவர்தான் எடுத்துக்கூற முன்வராதிருப்பர்! ஆனால் இஸ்லாத்தின் சீரையும் சிறப்பையும் குலைக்க இக்காலை சில போலிகளேற்பட்டு மேனாட்டு நாகரீகத்தினைப் பின்பற்றி நடப்பதில்தான் மானிடர்கள் மேன்பதவி அடைவதற்காக வழி ஏற்பட்டிருக்கிறதென்று பினாத்தித்திரிகின்றனர். அன்னோரின் இக்கூற்றை மறுப்பதற்கு மேலே கூறப்பட்டுள்ள ஆதாரங்களே தக்க சான்றாகும் என்பதை அப்போலிகள் நன்குணரக்கடவர்.

சன்மார்க்கம் நாகரீகத்துக்கு முரணானதா?

(சென்ற மாதத் தொடர்)

இனி நமது சொந்த நிலைமையை உற்றுணர்ந்து பார்த்து நம் வாழ்வை நாமே சீர்திருத்திக் கொள்ளவேண்டியவர்களாயுள்ளோம். ஏனெனின், நம் முஸ்லிம்களுடைய வாழ்க்கைப் போக்கானது பிறவர்க்கத்தைக் குருட்டுத்தனமாக பின்பற்றிக்கொண்டு செல்வதிலேயே அவாக்கொண்டிருக்குமாயின், நம் கீழ் நாட்டு நன்னாகரிகமானது மேனாட்டாரின் விபரீத நாகரீகத்தில் ஆழ்ந்து மறைந்து போய்விடுதல் கூடும். அவ்வாறு ஐரோப்பிர்கள் பெருமையடைவதற்கு முன்போ, அல்லது கீழ் நாட்டை மேனாட்டாசாரம் அடையவளைந்து கொள்வதற்குமுன்போ நாம் ஒரு விஷயத்தை சிந்தித்துணரவேண்டும். அதாவது, மெய்யான சத்திய நன்னாகரிகமானது நம் முஸ்லிம் சமூகத்துக்குரித்தான இஸ்லாமிய ஆசாரமா? அல்லது ஐரோப்பியர்கள் அனுஷ்டித்து வரும் தான்றோன்றித்தனமான ஆசாரமா? என்பதேயாம்.

இவ்விரு வினாக்களுக்கு தகுந்த விடையை நாம் அடையப் பெறுவது பெரியதொரு சிரம காரியமல்ல. அதற்காக என்னசெய்ய வேண்டுமெனின், நம்மவர்களுடைய எந்த நடவடிக்கையானது இஸ்லாமிய நல்லாசார நன்னாகரிகத்துக்கு முற்றமுற்ற ஒத்தமைந்ததாயிருக்கிறதென்பதை உணரவேண்டும். இன்னும் நாம் பரிசுத்த குர்ஆன் ஷரீபின் போதனைகளில் எம்மட்டு தூரம் ஸ்திரமாயிருந்து நடந்து வருகின்றோமென்பதையும் அறிதல் வேண்டும். மேலும் நம்முடைய ஐக்கிய வாழ்வின்முறையில் முன்னேற்ற நிர்வாக அம்சம் எது இருக்கிறதென்பதையும் உய்த்துணரவேண்டும். இன்னும் நம்முடைய தன்மைகளில் நன்னாகரிகக்கேடோ, குண ஒழுக்க இழுக்கோ இல்லாமலிருக்கிறதா வென்பதையும் கண்டுணர்ந்து கொள்ள வேண்டும். இவற்றிலெல்லாம் நாம் நேர்மையும் உத்தமத் தன்மையுமுடையவர்களாய் விளங்கிவிடுவோமானல் அதுபோது நம்முடைய நடப்பு முறையானது இஸ்லாமிய நன்னாகரிகத்துக்கு முற்றமுற்ற இணங்கியமைந்ததாயிருக்கிறதென்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். அதனல் இவ்வித நன்னாகரிக நல்லாசாரமுறையை நாம் வேறெந்த மதத்தாராலும் கிடைக்கப்பெற்று விடாமல், சத்திய இஸ்லாத்தின் நற்பாக்கியத்தினு

லேயே கிடைக்கப்பெற்றோமென்ற திருப்தியும் நமக்குண்டாய்விடும்.

இரண்டாவது வினவுக்குரிய சமாதான விடையை நாம், ஐரோப்பியர்களுடைய சரித்திரங்களிலிருந்தே எளிதில் கிரகித்துக்கொள்ளலாம். அஃதெங்ஙனமெனின், ஆதிபூர்வத்தில் ஐரோப்பியர்களுடைய வாழ்வின் முறையானது காட்டுமிராண்டித்தனமானதாயிருந்தது. அப்படிக் கிடந்தவர்கள் முதன் முதலாக எந்த சாராரிடமிருந்து நாகரிக வாழ்வின் முறையை கற்றுக்கொண்டார்களென்பதை உணர்ந்துகொள்வதே போதுமானதாயிருக்கிறது.

ஸிஸ்லி, அந்துலூஸ் ஆகிய தேசத்துப் பண்டை முஸ்லிம்கட்கு, ஐரோப்பிய வர்க்கத்தினரெல்லோரும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளார்கள். இன்னும் ஷாம், எகிப்து தேசத்தாரின் பாலும் அவ்வைரோப்பியர்கள் நன்றி பாராட்டக் கடமை பட்டுள்ளார்கள். ஏனெனின், இன்னோர்கள் தான் சிலுவை யுத்தக்காலத்துக்குப் பின்னர் நாகரீக நல்லாசாரத்தை அவ்வைரோப்பிய நாட்டுக்கு சன்மானபாக்கியமாய் அருள் புரிந்தனர்.

உண்மை இங்ஙனமிருக்க, முஸ்லிம்கள் ஐரோப்பியர்களிடத்தி லிருந்துதானே இக்காலை நாகரிக ஆசாரங்கள் கற்றுக் கடைத்தேறுகின்றனர் என்று கூறப்படுவது எம்மட்டும் வெட்கக்கேடான பேச்சாயிருக்கிறதென்பதை உற்றுணர்ந்து பாருங்கள். சரி! அங்ஙனமே இதுகாலை ஐரோப்பியரின் ஒரு சில (அபத்தமான) நடையுடைப்பாவனைகளை முஸ்லிம்கள் பின்பற்றி நடப்பது வாஸ்தவமாயிருந்தபோதிலும், இதன் காரணமாய் முஸ்லிம் சமூகமனைத்தின் நாகரிக நல்லாசாரமானது ஐரோப்பியரின் நாகரிக ஆசார மயமாகவே போய்விட்டதென்று கூறிவிட முடியுமோ? ஒருபோதும் முடியாது. இப்போது ஐரோப்பியர் வெளி மக்களுக்கு கற்பித்து வைக்கும் நாகரிக இயக்கமானது நன்கு விருத்தியடைந்துள்ள ஒரு வியாபாரத்துக்கு ஒப்பானதாகும். அந்த வியாபாரத்துக்கு முதன் முதல் மூலதன ஞானம் அளித்தவர்கள் முஸ்லிம்களேயாவார்கள். அத்தகைய மூலதன ஞானம் யாதெனில், கல்வியபிவிருத்தி, சத்தியாபிமானம், ஸ்வதந்திரப் பான்மை, நியாயம், சத்தியம், தியாகம், மனஉறுதி, சகிப்புத்தன்மை முதலியவைகளாகும். இவைதான் மெய்யான நன்னாகரிகத்துக்கு அத்தியாவசியமாய் வேண்டப்படுவதான மூலதனப் பொருட்களாகும். அங்ஙனம் ஆதியில் முஸ்லிம்கள் அளித்த இந்த விவேக மூலதனத்தைக் கொண்டுதான் இக்காலை ஐரோப்பிய உலகமெல்லாம் தங்கள் செல்வாக்கெனும் நவநாகரிகத்தைப் பரப்பி, இந்தப் பெருமை தங்களுக்குத்தான் உரியதென்னும் மமதை கொண்டிருந்து வருகின்றார்கள்.

வாஸ்தவத்தில் ஆதியாக அவ்வைரோப்பியர்க்கு விவேகத்தை அருள்புரிந்தவர்கள் முஸ்லிம்களாகவே இருக்கின்றனர். அங்ஙனமிருக்க இப் பெருமை தங்களுக்குத்தான் முதன்மையாய் உரித்தானதாகும் என்று ஐரோப்பியர் கூறுவது அபத்தமான மொழியேயாகும். ஆதியில் அவ்வைரோப்பியர்க்கு இஸ்லாமும் இஸ்லாத்தின் மக்களும் நன்னாகரிக விவேகம் புகட்டவில்லை யென்று யாரேனும் நிரூபித்துக் கூறமுடியுமா?

பரிசுத்த இஸ்லாத்தின் உதயம், வனப்பு, அபிவிருத்திமுதலியவற்றின் சரித்தரவிஷயங்களை அறிந்திருப்பவர்கள், உலகத்துக்கு முதன் முதலாவதாக நாகரிகம் புகட்டிவைத்தது எந்த சமுதாயம் என்பதை தெள்ளத் தெளிய உணர்ந்தே இருப்பார்கள். முன் இஸ்லாமிய நன்னாகரிகம் உதயமானபோது அது, நவ்ஷேர்வானுடைய கோஷ்டியாரின் நாகரிகத்துடன் போட்டிபோட்டு நின்றிலங்கியதென்பதையும், அரஸ்தூ, அப்லாத்தூன் முதலியவர்களால் பரத்திவைக்கப்பட்ட நாகரிகங்களுடன் போராட்டம் புரிய நேரிட்டதென்பதையும், இன்னும் ஸோலன், ஸ்ஸ்ரோ முதலியோரின் நாகரீகத்துடனும் எதிர் நின்று போராடி நிலவியதென்பதையும், ஸினேகா, ஸக்ராத் முதலிய நாகரீகங்களுடனும் இஸ்லாமிய நாகரீகம் மோதி ஸ்திரமாய் நிலைபெற்று மேன்மைக்கு வந்ததென்பதையும் இஸ்லாமிய சரித்திர ஞானமுள்ளவர்கள் நன்கறிந்தே இருக்கின்றார்கள்.

அங்ஙனமெல்லாம் இஸ்லாமிய நல்லாசாரத்துக்கு பல்லோரின் எதிர்ப்பும் பலவர்க்கத்தின் தாக்குதல்களும் நேரிட்டுங்கூட இஸ்லாமே தன் சத்தியத்தின் காரணமாய் சிறந்தோங்கலாயிற்று. நவ்ஷேர் வானிய கோஷ்டியாருக்கோ, அரஸ்தூ அப்லாத்தூன்

ஆகிய இனத்தாருக்கோ, ஸோலன், ஸஸ்ரோ முதலியோருக்கோ ஒரு சிறிதும் வெற்றி ஏற்படவே இல்லை. அதைப்போலவே ஸக்ராத், மனுஸ்மிருதிக்காரர் முதலியோரும் இஸ்லாத்தின் ஆசாரத்தை தங்கள் ஆதிக்கத்துக்குள்ளாக்கிப்போட முயன்றனரெனினும் அபஜயமே அடைந்து போயினர். பரிசுத்த தீனுல் இஸ்லாத்தின் திவ்விய நாகரிகமானது தனிப்பெருஞ் சிறப்புடன் தனக்குத்தானே இணையானதாய் விளங்கி, எதிலும் கலந்து மறையாமல் மேன்மை ஸ்தானம் பெற்றுத் துலங்கி வந்தது.

இஸ்லாத்தின் மேன்மை அங்ஙனமிருக்க இக்காலை நம் இஸ்லாமிய மக்களில் ஒரு சிலர், மேனாட்டாரின் நவீன நவநாகரிகத்தைப் பின்பற்றித் கொண்டுழன்றுதான் வருகின்றனர். இதனை ஆதாரமாக வைத்துக்கொண்டு ஒருசிலர், "இஸ்லாத்தின் கோஷமெல்லாம் மேனாட்டு நாகரிகத்தினுள் அடங்கி மறைந்து வருகின்றது' என்று வீணே கூறுகின்றனர். உண்மை அங்ஙனமில்லை. ஆதியில் முஸ்லிம்கள் ஐரோப்பியர்க்கு தத்தம்செய்து விட்டிருந்த (இஸ்லாமிய போதனைப்படியான) நாகரிகச் செல்வத்தைத்தான் இப்போது தங்கள் பிதுரார்ஜித சொத்தாகத் திரும்பிப் பெறுகின்றனர். ஏனெனின், அல்ஹிக்மத்து லால்லதுல்முமீன் (நாகரிக விவேகமானது முஃமின்களுடைய இழந்துப்போன செல்வமாகும்) என்பது அதற்கு ஆதாரமான முதுமொழியாகும்.

விவேகமும் ஞானமும் எங்கிருந்தபோதிலும் அதனை அங்கு சென்று முஸ்லிமானவன் அடைந்துப்பெற்றுக்கொள்ள பாத்தியதை யுடையவனாகவே இருக்கின்றான். இதுகாலை கீழ்நாடானது மேனாட்டின் நாகரிகத்தைப் பின்பற்றி நடக்கத் துணிந்திருப்பதின் அந்தரங்க நோக்கம் அதிலுள்ள நன்மைகளையும் இதத்தையும் கைப்பற்றிக்கொண்டு முன்னேற்றமடையலா மென்பதேயாகும். இதுவே உண்மையல்லாமல் அந்நவ நாகரிகச் சேற்றில் அகப்பட்டு வீழ்ச்சியடைந்துப் போவதென்பது கருத்தன்று. இப்பிரசினையைப்பற்றி நாம் அதிகமான அபிப்பிராயங்களை வெளியிடவேண்டிய அவசியமில்லை. ஆனால் இக்காலை நாம் நமது, அந்தரங்க நிலைமையை உற்றுணர்ந்து பார்க்குமிடத்துநாமே நேரான வழியை விட்டு கோண வழியின் பக்கல் போய் திட்டாண்டத்தில் அகப்பட்டுக் கொண்டோமென்பது அறியப்படுகின்றது. அங்ஙனம் நாம், நம் ஆசார அநுஷ்டானத்தில் ஸ்திரமா யில்லாது கால் சருகிவிட்டதனால் தான், இக்காலை ஐரோப்பியர்கள் கூட, நம்மனோரையும் நம் நாகரிகத்தையும் இழிவாய்ப்பேசவும் ஏளனமாய்க்கூறவும் சந்தர்ப்பம் நேரிட்டுவிட்டது. நம்முடைய வீழ்ச்சியின் போக்கைக் கண்டுகொண்டு, அன்னோரும் நம் இஸ்லாமிய கீழ்நாட்டு நாகரிகத்தை தங்கள் விசித்திர நவ நாகரிகத்தில் ஆழ்த்தி மறைத்து விடலாமென்றும், ஒரே அடியாய் ஒழித்துப் போடலாமென்றும் தவறாய்க் கருதி வீணாய் உழைக்கின்றனர்.

ஆனால் அது விஷயத்தில் நம்முடைய உண்மை மனோநிர்ணயம் யாதெனில், இஸ்லாமிய நன்னாகரிகம் மறைக்கப்பட்டுப் போகும் என்பதற்கு பதிலாக மேனாட்டு நாகரிகம் தான் இஸ்லாமிய நன்னாகரிகத்தில் கலந்து மறைந்து போகும் என்பதாம். ஏனெனின், இதுகாலை இஸ்லாமிய ஆசாரம்தான் எங்கும் பரவி வியாபித்து வருகின்றது.

இஃதொருபக்கல் கிடக்க, நம் முஸ்லிம் சமூகத்துடைய நடைமுறைப் போக்கானது நாளுக்கு நாள் மாறுதலடைந்து கொண்டே போய் இறுதியில் விபரீதமாய் முடிந்துவிடுமென்று ஒரு சிலரால் கூறப்படுகிறது. இது எம்மட்டும் உண்மையாகுமோ தெரியவில்லை. முஸ்லிம்களாகிய நாம், சமூகங்களில் சிறந்தவர்களாகவும் நம்மவர்களுடைய ஆசாரமே நாகரிகங்களில் மிகச் சிறந்ததாகவுமிருக்க, நம்மவர்கள் பிற சமூகத்தினரையே பின்பற்றி உழன்றால் இறுதியில் நம் கீழ்நாட்டு நல்லாசாரம் எக்கதியாகுமோ வென்பது கவனிக்கவேண்டிய அம்சமாகும்.

இக்காலை ஐரோப்பா தேசம் முழுமையும் ஐரோப்பியரது நாகரிகம் என்னும் ஆசாரத்தின் வயப்பட்டு இருக்கிறது. ஆகையால் அந்த தேசம் இறுதிவரை அவர்கட்குரியதாகவே இருக்குமெனின் வியப்பில்லை. ஆனால் கீழ்நாடுதான் அடிக்கடி பிறநாட்டாரின் ஆசாரத்தைப் பின்பற்றி சீர்குலைந்து வருகின்றது. ஆகையால் கீழ்நாட்டு-மேனாட்டு விஷயங்களையே பற்றி பேசிக்கொண்டிருப்பது வீணேயாகும்.

நிற்க மதவிஷயத்தில் மட்டும் எந்த ஒரு தேசமானது ஸ்வதந்திரமுடையதாயிருக்கிற

தோ அது எப்போதும் ஒரேமாதிரியாயிருக்கிறது. வருங்காலத்தில் நமது கீழ்நாடு முழுதும் (ஒருகால்) கிறிஸ்துவ மயமாகி விடுவதாயிருப்பினும் ஒருபோதும் அது கிறிஸ்துவ ஆசாரமுடையதாகி விடமாட்டாது. அதேவிதமாக மேனாடு முழுமையும் இஸ்லாம் மதத்தை ஏற்றுக்கொண்டு முஸ்லிம் மயமாகிவிட்டபோதிலும் அதனுடைய நடையுடை பழக்க வழக்கமானது இஸ்லாமிய மக்களுடைய நடையுடையைப்போல் மாறிவிடமாட்டாது. ஆகையால், மேனாட்டு நாகரிகம்தான் சிறந்தது; கீழ்நாடு நாகரிகம் தாழ்ந்தது என்று ஐரோப்பியர்கள் விதண்டாவாதம் செய்வதில் சிறிதும் நியாயமும் தர்மமுங் கிடையாது. உண்மையான விதப்படி நாகரிகம் சிறந்து நல்லாசாரம் ஓங்கி வளர்வதாயின் அது சத்திய சன்மார்க்க சம்பந்தமான நல்லாசாரமாகவே தானிருக்கவேண்டும். தேச ஜன பழக்க வழக்கத்தை யொட்டிய ஆசாரமோ நாகரிகமோ சாஸ்வதமானதாக மாட்டாது. கட்டாயக் கட்டளையைபோல் அனுஷ்டான அவசியத்தை ஏற்படுத்த வல்லது மதாசாரமேயாகும்.

இஸ்லாமிய சரிதை

மிஸர் தேசம் ஜெயபேரிகை கொண்ட பொழுது நிகழ்வுற்ற அரும்பெரும் சம்பவங்கள்

முஸ்லிம்களின் வாளாயுதத்தில் மின்னலைப் போன்றுள்ள ஜொலி வீசிக்கொண்டிருந்தது. ஆனால் அப்பிரகாசத்திற்குள்ள உண்மைக் காரணம், அவர்களது சற்குணமேயாகும். எனவே சங்கைவான்களாகிய அருமை சஹாபாக்கள் யுத்தகளத்தில் கோபாவேசங்கொண்டு தங்கள் வீரபராக்ரமத்தைக் காட்டியபோதிலும், அவர்களது வாள் வீச்சைப்பார்க்கினும் சற்குணமே பிரதானமாய் விளங்கிற்றெனக் கூறுவது மிகையாகா. ஆகவே, மிஸர் தேசத்தின் ஜெயபேரிகைக்குள்ள சம்பவங்களில் வாட் பிரயோகத்தைப் பார்க்கினும் சற்குணப் பிரயோகமே அதிகப் பயனளித்திருக்கிற தென்பதை இதன்கீழ் குறிப்பிடுவாம்.

ஹஸ்ரத் அம்ரிப்னுல் ஆஸ் (ரலி.)

ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களின் கிலாபத்து ஆக்ஷி காலத்தில் முகவ்கஸ் என்பார் மிஸர் தேசத்தின் அதிபதியாக யிருந்து உரோமபுரியின் அரசரான கைஸருக்கு வரி செலுத்திக்கொண்டிருந்தார். இங்கிலைமையில் ஷாம் இராக் முதலிய இடங்களில் கைஸரிடம் முஸ்லிம்கள் யுத்தம் புரிந்து ஜெயபேரிகை கொண்டவுடன் உரோம அரசாங்கத்தின் இரண்டாவது அரசஸ்தானமாகிய மிஸர் தேசத்தின் பக்கல், அன்னோர் முன்னோக்கிச் செல்ல நாடினார்கள். முதன்முதல் ஹஸ்ரத் அம்ரிப்னுல் ஆஸ் (ரலி.) அவர்களது மனதில் அத்தேசத்தின்மீது படை எடுப்புச் செய்ய வேண்டுமென்னும் யோசனை தோன்றிற்றாயினும் ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் அந்த யோசனையை ஏற்றுக் கொண்டார்களில்லை. ஆனால் ஹஸ்ரத் அம்ரிப்னுல் ஆஸ் (ரலி.) அவர்கள் பன்முறையும் வற்புறுத்திக் கூறியதால் அந்த யோசனை அங்கீகாரமாயிற்று.

வற்புறுத்துதலின் காரணம்

ஹஸ்ரத் அம்ரிப்னுல்ஆஸ் (ரலி) அவர்கள் அவ்வாறு வற்புறுத்தியதற்குள்ள காரணம் யாதாகுமென்பதை மௌலானா ஷர்சாஹிப் மர்ஹூம் அவர்கள் விளக்கிக் காண்பித்திருக்கின்றார்கள். அதாவது, அம்ரிப்னுல்ஆஸ் (ரலி.) அவர்கள் வற்புறுத்தல் செய்ததற்குள்ள பிரதானம் காரணம் யாதெனில், அம்ர் (ரலி.) ஒருதடவை குரைஷ் வர்க்கத்தார் சிலருடன் வியாபாரத்திற்காக பைத்துல் முகத்தஸ் பக்கல் சென்றக்கால் தற்செயலாக அன்றையதினமே இஸ்கந்தரிய்யாவாசியான பாதிரி ஒருவர், ஆங்குள்ள மஸ்ஜிதை தெரிசிப்பதற்காக வந்து, அங்குள்ள மலைகளுக்குச் சமீபமாக அலைந்து திரிந்துகொண்டிருந்தார். ஹஸ்ரத் அம்ரிப்னுல்ஆஸ் (ரலி.) அவர்களும் தங்களுடனிருந்தவர்கள் சகிதம் அங்கு

ஒட்டகம் மேய்த்துக் கொண்டிருந்ததால், மலை அடிவாரத்தில் அப்பாதிரியார் ஹஸ்ரத் அவர்களை சந்தித்தபொழுது, அவர் தாகத் தின்மிகுதியால் உயிர்துறக்குந்தருவாயிலிருந் தார். உடனே ஹஸ்ரத் அவர்கள் தங்களிட மிருந்த தண்ணீரை, அப்பாதிரியாருக்குக் கொடுத்து தாகத்தைத் தீர்த்து வைத்தார் கள். அதுபொழுது அவர் அங்குள்ள ஒருவிரு க்ஷத்திற்குத் தாளால்படுத்துத் துயில்புரிய ஆரம்பித்தார். உடனே அம்மரத்திற்குச் சமீ பத்திலுள்ள துவாரத்திலிருந்து சர்ப்பமொ ன்று வெளிவந்து அப்பாதிரியாரை நோக்கிச் சென்றது. ஹஸ்ரத் அம்ருப்னுல்ஆஸ் (ரலி.) அவர்கள் இதனைக் கண்டவுடன் தங்கள் அம் பை வீசி அச்சர்ப்பத்தைக் கொன்றுவிட் டார்கள். அதற்குச் சற்றுநேரத்திற்குப்பின் அப்பாதிரியார் விழித்துப் பார்க்கவே, தமக் குச் சமீபத்தில் சர்ப்பம் கொல்லப்பட்டுக் கிடப்பதைக்கண்டு பயந்தவராய், ஹஸ்ரத் அவர்களிடம் அதன் விஷயம் யாதாகுமென வினவினர். ஹஸ்ரத் அவர்கள் நிகழ்வுற்ற சம்பவத்தைக் குறிப்பிடவே, பாதிரியார் ஹஸ்ரத் அவர்களின் நெற்றியை முத்தமிட்ட வராய் "தாங்கள் இருமுறை என் உயிரைக் காப்பாற்றியிருக்கின்றீர்கள். யான் தாகத் தால் உயிர்விடத் தயாராயிருக்கும்பொழு தும், சர்ப்பம் என் உயிருக்கு உலைவைக்க முற்பட்டபொழுதும் உதவி புரிந்திருக்கின் றீர்கள்" எனக்கூறிவிட்டு தாங்கள் இங்கு எதற்காக வந்தீர்களென்பதை அறிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

ஹஸ்ரத் அம்ருப்னுல் ஆஸ் :—வியாபார சம்பந்தமாக.

பாதிரியார் :—இம்முறை உங்களுக்கு எவ் வளவு இலாபம் கிடைக்குமென்னும் நம்பிக் கையிருக்கிறது ?

ஹஸ்ரத் : ஒரு ஒட்டகத்தின் கிரயம்.

பாதிரியார் : உங்கள் தேசத்தில் ஒரு மனி தனின் உயிருக்குப் பகரமாக எவ்வளவு தொகை கொடுக்கப்படுறது ?

ஹஸ்ரத் : நூறு ஒட்டகம்.

பாதிரியார் : எங்கள் தேசத்தில் ஒட்டக மில்லை ; அளவற்ற ஐசுவரியங்களிருக்கின்றது.

ஹஸ்ரத் : நாணயமாக மதிப்பிடுவதாயின் 100 ஒட்டகத்தின் கிரயம் சுமார் 1000 தீனு ராகிறது (தீனர் என்பது 2-8-0 ரூபாய்).

பாதிரியார் : யான் முஸாபிராக (வழிப் போக்கன்) இவ்விடத்திய மஸ்ஜிதை தெரி சித்து வணக்கம்புரிந்துபோக வந்திருக்கின் றேனுதலின் என்னிடம் காசுபணமில்லை, தாங்கள் என்னோடு வருவீர்களாயின் இரு உயிர்களுக்குப் பகரமான சன்மானமளிக் கின்றேன்.

ஹஸ்ரத் : தாங்கள் எங்கிருப்பவர்கள் ?

பாதிரியார் : மிஸர்தேசத்தில் இஸ்கந்த ரிய்யா என்று ஒரு ஊர் இருக்கின்றது. அது தான் என் சுயபதியாகும்.

ஹஸ்ரத் : இஸ்கந்தரிய்யா எங்கிருக்கின் றது ? எவ்வளவு தூரத்திலிருக்கின்றது ? எனக்குத் தெரியாது—ஒருபொழுதும் யான் அங்குசென்றது கிடையாது.

பாதிரியார் : தாங்கள் என்னோடு வருவீர்க ளாயின் அங்கு பற்பலவிதமான காக்ஷிகளைக் காண்பீர்கள்.

ஹஸ்ரத் : அங்குவந்தால் தங்கள் வாக்குறு தியை நிறைவேற்றுவீர்களா ?

பாதிரியார் : ஆண்டவன்மீது பிரமாணமாக நிச்சயம் வாக்குறுதியை நிறைவேற்றியேதீரு வேன் ; உங்களுடன் வந்திருப்பவர்கள் சகி தம் யாவர்களையும் வெகு ஜாக்கிரதையோடு பாதுகாத்து திரும்ப அனுப்பிவிடுவேன்.

ஹஸ்ரத் : இஸ்கந்தரிய்யா வந்து திரும்ப எத்தனை நாட்கள் செல்லும் ?

பாதிரியார் : போவதற்கு 10 நாள், திரும்ப வருவதற்கு 10 நாள், அங்கு தங்குவதற்கு 10 நாள்.

உடனே ஹஸ்ரத் அவர்கள் தங்களுக்குத் துணையாக ஒருவரை அழைத்துக்கொண்டு பாதிரியாருடன் மிஸர் தேசத்தின் பக்கல் புறப்பட்டுச் சென்றார்கள். அங்கு மிஸர் எல் லைக்குட் பிரவேசித்தவுடன் அவ்விடத்தில் உன்னதம்பொருந்திய மாபெரும் மாடமாளி கைகளையும், மானிடர்களின் செழிப்புவனப் பையுங்கண்டு பெரும் ஆச்சரியமுற்றவர்க ளாய் தன்னை அறியாது இத்தேசத்தைப் போல் வளம்பொருந்தியனவும் கெம்பீரத் தோற்றமுடையவுமான யாதொரு தேசத் தையும் யான்கண்டிலேன்என சப்தம்கொடுத் தார்கள்.

ஹஸ்ரத் அம்ருப்னுல் ஆஸ் (ரலி.) அவர் கள் என்றையதினம் இஸ்கந்தரியயாவினுள்

பிரவேசித்தார்களோ அன்று அவ்வூர்வாசிகளுக்குப் பெரும் பெருநாளாகயிருந்தது. எனவே அன்று அவ்வூரிலுள்ள தலைவர், செல்வந்தர் முதலிய யாவரும் ஒன்று சேருவர்; அதுபொழுது தங்கத்தினாலான ஓர் குண்டு எறியப்படுமாதலின் அக்குண்டை யாவரும் தங்கள் சட்டைக்கையில் பெற்றுக்கொள்வதை எதிர்பார்ப்பர்; யாருடைய சட்டைக்கையில் அக்குண்டு நுழைந்துகொள்கிறதோ அவர் தன் ஆயுள்காலத்திற்குள் ஒருமுறை மிஸர் தேசத்தின் பாதுஷாவாக ஆய்விடுவார் என்பது பூர்வீககாலந்தொட்டு அன்னோர் மனதில் குடிகொண்டிருக்கும் ஒரு செய்தியாகும். வெகுகாலமாய் அன்னோர் அதன்மீது மிக்க உறுதியும் கொண்டிருக்கின்றார்கள்.

இஸ்கந்திரியாவினுள் பிரவேசித்தவுடன் அப்பாதிரியார் ஹஸ்ரத் அவர்களுக்கு அளவற்ற மேதைமரியாதை செய்து விலையுயர்ந்த ஆடைகள் அணியும்படி செய்து தன்னுடன் அக்கூட்டத்திற்கு அழைத்துச் சென்றார். குண்டு எறியப்படுமிடத்தில் மகாஜனங்கள் திரளாக நின்றுகொண்டு, தங்கள் சட்டைக் கைக்குள் அக்குண்டைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சி செய்துகொண்டிருந்தார்கள். அதுபொழுது குண்டெறியப்படவே, அக்குண்டானது நேராக ஹஸ்ரத் அம்ர் (ரலி.) அவர்களது சட்டைக் கைக்குள் வந்து நுழைந்துகொண்டது. இதனைக்கண்டு அங்கிருந்தோர் யாவரும் பெரும் ஆச்சரியமுற்றனர். அதன்பின் ஹஸ்ரத் அவர்கள் சிலநாள் அங்கு தாமதித்து, பாதிரியார் தாம் கூறியிருந்த வாக்குறுதியை நிறைவேற்றிய பின் சுயதேசத்திற்குத் திரும்பினார்கள். அன்று முதல் மிஸர் தேசத்தைக் கைப்பற்றவேண்டுமென்னும் அவா ஹஸ்ரத் அவர்களின் மனதில் குடிகொண்டு, அதனை சதாவும் தூண்டிக் கொண்டிருந்தது.

மிஸர்மீது படையெடுப்பு

ஹிஜ்ரீ 20-ம் ஆண்டில் ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள், ஹஸ்ரத் அம்ர் (ரலி.) அவர்களின் தலைமையின்கீழ் 4 ஆயிரம் வீரர்களை மிஸர் தேசத்தின் பக்கல் அனுப்பி, மிஸர் எல்லைக்குள் நுழைவதற்குமுன் திரும்பி வந்துவிடவேண்டுமென்று உத்தரவு கிடைத்தால் திரும்பி வந்துவிடுங்களென்று கட்டளை பிறப்பித்திருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் மிஸர் தேசத்தின்மீது படை எடுப்புச் செய்வதை விரும்பாதவர்களாக யிருந்ததால் அவ்வாறு கூறியிருந்தார்கள். மிஸரின் ஜெயபேரிகைக்குக் காரணஸ்தராக யிருந்த ஹஸ்ரத் அம்ர் (ரலி.) அவர்கள் நடு இரவிலேயே புறப்பட்டு வெகுவேகமாய் மிஸர் தேசத்தின் எல்லைக்குள் பிரவேசித்துவிட்டார்கள். அதன் பின்பு தான் திரும்பி வந்துவிடுமாறு ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களால் வரையப்பட்டுள்ள கடிதம் ஹஸ்ரத் அவர்களிடம் கிடைத்தது. அதற்கு ஹஸ்ரத் அம்ர் (ரலி.) அவர்கள், "இதுபொழுது நாம் மிஸர் தேசத்தின் எல்லைக்குள் பிரவேசித்து விட்டதால், ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் ஏற்கனவே கட்டளை பிறப்பித்த பிரகாரம் திரும்பிச் செல்லவேண்டிய தவசியமில்லை" எனக் கூறிவிட்டார்கள்.

ஆரம்ப யுத்தங்கள்

ஹஸ்ரத் அம்ர் (ரலி.) அவர்கள் 4 ஆயிரம் வீரர்களோடு வெகு தைரியமாக முன்னோக்கிச் செல்வதைக்கண்டு அநேகர் ஆச்சரியமுற்றனர்; சிலர் மரணம் இன்னோரை இழுத்துச் செல்கிறதெனக் கூறினர். ஆனால் 'கிப்தி' வர்க்கத்திலுள்ள ஒரு மனிதர் மட்டும், இவர்கள் கோரிச்செல்லும் காரியத்தில் ஜெயமடைவார்கள் என்று கூறினார். முஸ்லிம் சிப்பாய்கள் ஆரம்பத்தில் 'புல்பீஸ்' என்னும் பட்டணத்தைத் தாக்க ஆரம்பித்தார்கள். ஒருமாத காலம்வரை மாபெரும் யுத்தம் நடைபெற்ற பின் அவ்வூர், முஸ்லிம்கள் வசமாயிற்று. அதற்குப்பின் 'பாபுல்யூன்' என்னும் பெயருடைய கோட்டையைத் தாக்க முற்பட்டார்கள். அக்கோட்டை மிக்க பலம் பொருந்தியதாகயிருந்தமையால், உதவி தேடவேண்டிய ஆவசியமேற்பட்டுவிட்டது. அதற்காக ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் 10 ஆயிரம் வீரர்களை அனுப்பி வைத்தார்கள். இவர்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து துயர்படியாக ஏழு மாதகாலம் வரை கடும்போர் நடத்தியும் முடிவேற்படாதேயிருந்தது. இந்நிலைமையில் ஹஸ்ரத் ஜுபைர் (ரலி.) மிக்க ஆக்ரோஷம் பூண்டு "இன்று யான் அல்லாஹ்வின் பாதையில் தியாகமாய் விடப்போகிறேன்" என்று உரக்க சப்தமிட்டவர்களாக வாளைக் கையி

லெடுத்துக்கொண்டு சில சஹாபாக்களுடன் கோட்டை மதில்சுவற்றின்மீது ஏணிவைத்து அதனுள் பிரவேசித்துவிட்டார்கள். அது பொழுது எழுந்த 'அல்லாஹ் அக்பர்' என்னும் தக்பீர் முழக்கத்தினுல் கோட்டையின் மதில்சுவர்கள் நடுக்கத்தில் வந்துவிட்டது. கோட்டைக்கு வெளியிலிருந்த முஸ்லிம்களும் தக்பீர் முழக்க ஆரம்பித்தவுடன் கோட்டைக்குள்ளாலிருந்த கிறிஸ்தவர்கள் யாவரும் தன்னுணர்வற்றவர்களாய் நாலு திசைகளிலும் விரண்டோட ஆரம்பித்தார்கள். அதன்பயனுய் கோட்டையின் கதவுகள் தானே திறக்கப்பட்டுப் போயிற்று.

இருசாராரின் சற்குணங்கள்

முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் எதிர்ப்பு ஏற்பட்டிருந்தகால், ஒருவருக்கொருவர் விருந்தளித்துக்கொண்டார்கள். எனவே, உரோம சிப்பாய்கள் முஸ்லிம்களை விருந்துக்கழைத்தபொழுது ஹஸ்ரத் அம்ர் (ரலி.) அவர்களும் மற்றும் சில தலைவர்களும் அங்கு சென்றிருந்தார்கள். அதுகாலை உரோமர்களால் முஸ்லிம்கட்கு எவ்விதத் தொந்திரவும் ஏற்படவில்லை. மறுநாள் முஸ்லிம்கள் அன்னோர்க்கு விருந்தளித்தனர். எனவே, அன்னோர்முன் உணவுப் பொருள்களை வைத்து யுத்த வீரர்களையும் ஒன்றாக உட்கார்ந்து கொள்ளும்படி செய்யப்பட்டது. எதிரிப் படையினர் உரொட்டியை குளம்பில் தோய்த்துச் சாப்பிடுங்கால், அரபிப் படையினரின் வஸ்திரங்களில் குளம்பு சிந்திக்கொண்டிருந்ததையும் அன்னோர் பொருட்படுத்தாமல் யாவரும் உல்லாசமாய்ப் புசித்தார்கள்.

சமாதானத் தூது

முகவ்கஸ் என்பார், ஹஸ்ரத் அம்ரிப்னுல் ஆஸ் (ரலி.) அவர்களிடம் ஒரு தூதரை அனுப்பி, நீங்கள் சொற்பமானவர்களாகயிருந்து வெகு நீண்ட காலமாய் யுத்தம் புரிந்துகொண்டிருக்கிறீர்கள்; இதுபொழுது எங்களுக்கு உதவியாக உரோம சிப்பாய்கள் வந்துகொண் டிருக்கின்றூர்கள்; அன்னோர் உங்களைவிட எண்ணிக்கையில் அதிகமாகயிருப்பதுடன் அபரிமிதமான ஆயுதபலமும் பெற்றிருக்கின்றூர்கள்; தவிர நீங்கள் நீல நதிக்குள் அகப்பட்டுக் கொண்டு நாலு பக்கமும் முற்றுகை இடப்பட் டிருக்கிறீர்கள்; ஆகவே இது சமயம் சமாதானஞ் செய்து கொள்வதுதான் உங்களுக்குச் சிலாக்கியமாகும்; உங்களிலிருந்து சிலரை சமாதானம் பேசி முடிப்பதற்காக இவ்விடம் அனுப்பி, முடித்துக்கொண்டு திரும்பச்சென்று விடுங்கள்; உரோம சிப்பாய்கள் வந்தபின் எவ்வித சமாதானமும் நடைபெறமாட்டாது எனத் தெரியப்படுத்தி இருந்தார். அத் தூதர் ஹஸ்ரத் அவர்களிடம் வந்துசேர்ந்ததும் அவரை இரண்டு தினங்கள்வரை அங்கேயே தங்கும்படி செய்து கொண்டார்கள். தூதர் இரண்டு தினங்கள்வரை திரும்பிவராதது கண்டு, ஒருக்கால் அவர் கொல்லப்பட்டுப் போயிருக்கலாமென்று கருதி தம்முடைய சிப்பாய்களை நோக்கி, எதிரிகள் நமது தூதரைக் கொன்றுவிட்டிருக்கலாம்; அல்லது சிறைபடுத்திவைத்திருக்கலாம்; அவ்வாறு செய்வது ஒருக்கால் அவர்கள் மார்க்கத்தில் ஆகுமாக்கப்பட்டிருக்கிறதுபோலும் என அரசர் கூறினர். அத்தூதர் இரண்டுதினம் வரை அங்கு தங்கியிருந்து முஸ்லிம்களின் நடைபாவனை முதலியவைகளை தக்கமுறையில்கவனித்துக் கொள்ளும்படி செய்து திரும்ப அனுப்பி வைக்கப்பட்டார். அவரிடம் அதுகாலை ஹஸ்ரத் அவர்கள் சமாதானத்திற்காக மூன்று நிபந்தனைகளைக் குறிப்பிட்டுத் தெரியப்படுத்தியிருந்தார்கள். அதாவது (1) நீங்கள்யாவரும் முஸ்லிம் களாய்விடவேண்டும். அவ்வாறு செய்வீர்களாயின் சகோதரர்களாய் விடுவீர்கள். (2) அவ்வாறு செய்ய விருப்பமில்லாது போயின் தலைவரிகட்டுவதை யேற்றுக்கொள்ளுங்கள். (3) இவ்விரு நிபந்தனைகளுக்கும் சம்மதிக்கவில்லையாயின் கடைசிவரை யுத்தம் நிகழ்ந்தே தீருமென்று குறிப்பிட்டிருந்தார்கள். அத்தூதர் முகவ்கஸ் அரசனிடம் சென்று முஸ்லிம்களின் நிலைமையை எடுத்துக்கூறினர். அதாவது, அவர்கள் அற்புதமான மனிதர்களாக இருக்கின்றூர்கள்; அன்னோர் உயிர்வாழ்வதைப் பார்க்கினும் மரணமடைவதையே அதிகம் விரும்புகிறவர்களாயிருக்கின்றூர்கள்; அன்னோர் உலகவாழ்க்கையை ஒருபொருட்டாக மதிக்கின்றூர்களில்லை; வாகனத்தின்மீது வீற்றிருக்கும்போதும், பூமியில் உட்கார்ந்திருக்கும்போதும் சாப்பிட்டுக் கொள்கிறூர்கள்; அவர்களின் தலைவருக்கும் சாதாரண சிப்பாய்க்கும் எவ்வகையிலும் வித்தியாசம் கண்டுபிடிக்க இயலாதிருக்கிறது; அவர்களில் தலைவர் யார்

வேலைக்காரர் யார்! என்று தெரிந்துகொள்வதற்குங் கூட இடமில்லாதிருக்கிறது; தொழுகை நேரம் வந்துவிடின் முகம் கைகால்களைச் சுத்திசெய்து கொண்டு தொழுகைக்குச் செல்லாதவர் எவரையும் அன்னோரில் கண்டுகொள்ள முடியாது என்பதே.

இதனைச் செவியுற்ற முகவ்கஸ் அரசர், எம்மைப்படைத்த கடவுளின்மீது பிரமாணமாக இவர்கள் மலையுடன் எதிர்ப்பு புரிந்தபோதிலும் அதனையும் அதன் இருப்பிடத்தைவிட்டு அப்புறப்படுத்திவிடுவார்கள்; எந்த சக்தியும் அவர்களுடன் எதுர்ப்புச் செய்யமுடியாது; ஆகவே இதுகாலை அவர்கள் நீல் நதியின் பக்கல் சிறைபட்டிருக்கும்போது சமாதான மேற்படாவிடின், அவர்கட்கு தக்கவசதி ஏற்பட்டபின் எவ்வாறு சமாதானத்தை விரும்பப்போகின்றார்கள்? எனக்கூறினர்.

சமாதானப் பேச்சு

முகவ்கஸ் என்னும் அரசர் முஸ்லிம்களுடன் சமாதானம் பேசுவதற்காக சில தலைவர்களைத் தேர்ந்தெடுத்தார். ஹஸ்ரத் அமருப்னுல் ஆஸ்(ரலி.) அவர்களும் சமாதானத்தை விரும்பி ஹஸ்ரத் உப்பாதிப்னுஸாமித் (ரலி.) அவர்களின் தலைமையின்கீழ் 10 பெயர்களை அனுப்பியிருந்தார்கள். ஹஸ்ரத் உப்பாத் (ரலி.) அவர்கள் அளவற்ற கறுப்பு நிறமுடையவர்களாகவும், 10 சாண் உயரமுடையவர்களாகவு மிருந்தமையால் அரசன், அவர்களுடைய நிறத்தைக் கண்டவுடன் பயந்துநடுக்கங்கொண்டு, இந்த கறும்நிறமுடையவரைப் பார்த்தவுடனே எனக்குப் பெரும் பயமேற்படுகிறது; ஆதலின் இவர் என்முன் வரவேண்டாம்; சமாதானம் பேசுவதற்காக வேறு யாரையாகிலும் முன்வரும்படி செய்யுங்கள் எனக் கூறினர். அதுபொழுது அங்கிருந்தோர் யாவரும், இவர் எங்களில் புத்திதீக்ஷண்யத்தில் மகா சிறந்தவராயும், எங்கள் தலைவராயும், எங்களில் மேன்பதவியுள்ளவராயு மிருப்பதுடன், நாங்கள் யாவரும் அவர்கட்டளைப்படி நடக்கிறவர்களாகவு மிருக்கிறோம் எனக்கூறினார்கள். இதனைச் செவியுற்ற அரசர் ஹஸ்ரத் உப்பாத் (ரலி.) அவர்களை நோக்கி தாங்களே முன்வந்து அமர்க்கையாகவும் மெதுவாகவும் வார்த்தையாடுங்கள்; உங்களின் கறுத்த நிறத்தைக் கண்டே யான் பயப்படுவதால், ஒருக்கால் கடினமான வார்த்தையைப் பிரயோகஞ் செய்துவிடுவீர்களாயின் அதிகமாகப் பயப்படும்படி நேரிட்டுவிடுமென்று கூறினர்.

முஸ்லிம்களின் நிலைமை எவ்வாறிருந்தது?

ஹஸ்ரத் உப்பாத் (ரலி.) அவர்கள் அரசனை நோக்கி, உம்முடைய வார்த்தை யாவற்றையும் கவனத்தோடு கேட்டேன்; ஆனால் யான் கூறுவதை சற்று கவனத்தோடு செவியுறுவீராக. கேளும்! யான் யாரிடத்திலிருந்து வந்திருக்கிறேனென்பது உமக்குத் தெரியுமா? அவர்களில் 1000 கறுநிற முடையவர்களிருக்கின்றார்கள்; அவர்களுடையநிறமானது என் நிறத்தைவிட அபரிமிதமான கறுப்பாகயிருக்கும்; அவர்களுடைய தோற்றமானது அளவற்ற அச்சந்தரத்தக்கதாயிருக்கும்; ஒருக்கால் நீர் அவர்களைப் பார்க்க நேரிட்டுவிடுமாகில் உம்முடைய நிலைமை யாதாகுமென்பது எனக்குத்தோன்றவில்லை; யான் அவர்கள் யாவரிலும் விருத்தாபியதசையை அடைந்திருந்துங்கூட ஆண்டவனது கிருபையால் தனியே 100 விரோதிகளை எதிர்த்துப் போர்புரியும் சக்தியைப் பெற்றிருக்கிறேனாதலின் ஒருக்காலும் பகைவர்களுக்குப் பயப்படமாட்டேன்; இதேபோன்றுதான் அவர்களும் என்னைப்பார்க்கினும் அபார தைரியமுடையவர்களாய்த் திகழ்கின்றார்கள். இதற்குக்காரணம், ஆண்டவனது பாதையில் யுத்தம்புரிய வேண்டுமென்பதும், அவனது விருப்பத்தைப்பெற வேண்டுமென்பதுமே எங்களின் முழுநோக்கமாக இருப்பதேயாம். எனவே, யாங்கள் ஒருக்காலும் உலகாதாயத்தைப் பெறுவதற்காக யுத்தம்புரிவதில்லை; ஆண்டவனதுகட்டளையை நிறைவேற்றுவதற்காகவே யுத்தம் புரிகின்றோம்; யுத்தங்களில் கிடைக்கும் முதல்களை ஆண்டவனால் சன்மானமாக அளிக்கப்பட்டிருக்கிறதென்று கருதி அதனை பாகித்துக்கொள்கிறோம். இதுவன்றி உலகாதாயமான எவ்விதச் சொத்தின் மீதும் யாங்கள் விருப்பங்கொள்வதில்லை; எங்களிடம் ஒரு லக்ஷநாணயமும் ஒருகாசும் சரிசமமான அந்தஸ்திலேயே இருக்கின்றது; உலகசம்பந்தமான சாமான்களில் எங்களுக்கு மிகமிக விருப்பமுடையது ஆகாரமேயாகும். அதாவது, பசி தணிவதற்குள்ள ஆகாரமும், மானத்தை மறைத்துக்கொள்வதற்காக ஒரு துப்பட்டியும் எங்களுக்குப்

போதியனவாக இருக்கின்றது. ஆதலால், எங்களிடம் எந்த வஸ்து இல்லாதுபோயினும் அதனைப் பொருட்படுத்துவதே கிடையாது; இலக்ஷ ரூபாய் கிடைத்தபோதிலும் அதனை அல்லாஹ்வின் விருப்பத்திற்காக உடனே செலவுசெய்து விடுவோம்; உலகத்தின்கண் காணப்படும் பலவாறான சுவண்டிகளையும் ஆரோக்கியங்களையும் யாங்கள் ஒரு அற்ப வஸ்த்துவாகக்கூட மதிப்பது கிடையாது; எங்களுக்கு மனதிருப்தியைக் கொடுக்கக் கூடியது மறுஉலகவாழ்க்கையேயாகும். எனவே, பசியைத் தீர்த்துக்கொள்வதற்குப் போதிய உணவும், மர்மஸ்தானத்தை மறைத்துக் கொள்வதற்குப் போதிய உடையுந்தான் எங்களுக்குப் பிரதானமாகும். அதன்பின் எங்களுடைய முழுப்பிரயாசையும், சம்பாத்தியமும் அல்லாஹ்வின் விருப்பத்தைத் தேடிக் கொள்வதிலும் அவனின் பகைவர்களுடன் போர்புரிவதிலும் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றது.

அரசரின் பிரசங்கம்

இவ்வரும் மொழிகளை செவியுற்ற அரசர், தமக்குச் சூழால் வீற்றிருக்கும் மகாஜனங்களை நோக்கி, நீங்கள் எப்பொழுதாகிலும் இவ்வாறான பிரசங்கத்தைக் கேட்டிருக்கின்றீர்களா? யான் இவருடைய தோற்றத்தைப் பார்த்தவுடனேயே பெரும் பீதியடைந்து விட்டேன்; இவருடைய பிரசங்கமோ அப்பீதியை மென்மேலும் அதிகரிக்கச்செய்து விட்டது. ஆகவே இவரையும் இவருடன் வந்திருப்பவர்களையும்,பட்டணங்களை நாசப்படுத்துவதற்காகவே அல்லாஹ்தஆலா அனுப்பியிருக்கிறான்போலும் எனக்கூறிவிட்டு, ஹஸ்ரத் அவர்களை நோக்கி, தற்சமயம் என்னிடம் அளவற்ற உரோமப்படையினரிருக்கின்றனர்; அவர்கள் மகாபராக்கிரமம் பொருந்திய வீரர்களாகவும், எதிரிகளுடன் போர்புரிவதைவிட்டு சற்றும் பின்வாங்காதவர்களாகவு மிருக்கின்றார்களாதலின் ஒருபொழுதும் அவர்களுடன் எதிர்த்து நீங்கள் ஜெயம்பெற முடியாது; நீங்கள் சொற்பத்தொகையினராகவும் பலமற்றவர்களாகவும், மாதக்கணக்கில் பசியும் பட்டினியும் அடைந்தவர்களாய் இங்கு காத்திருப்பவர்களாயும், வறுமையால் பீடிக்கப்பட்டவர்களாயு மிருக்கின்றீர்கள். ஆகவே உங்களில் ஒவ்வொருவருக்கும் 2 தீனர் வீதமும், உங்கள் தலைவருக்கு 100 தீனரும், உங்கள் கலீபாவுக்கு 1000 தீனரும் கொடுத்துவிடுகிறோம். இதனைப் பெற்றுக் கொண்டு உங்கள் சுயதேசத்திக்குச் சென்று விடுவது மிக மிக உத்தமமாகும் எனத் தெரிவித்துக்கொண்டார்.

ஹஸ்ரத் உப்பாத் (ரலி.) அவர்களின் வீர மொழிகள்

ஒ அரசரே! நீரும் உம்மோடிருப்பவர்களும் ஏமாந்துபோகாதீர்கள்; உரோம சிப்பாய்களின் தைரியமானது உங்களுக்குப் பெரும் ஊக்கத்தை அளித்துவருகிறது; ஆண்டவன் மீது பிரமாணமாக யாங்கள் சற்றும் பயப்படுகிறவர்களாயில்லை; ஆனால் உங்கள் வார்த்தையானது எங்களுக்குப் பெரும் ஆத்திரத்தை யுண்டுபண்ணி, எங்களுக்கு யுத்த உணர்ச்சியை அபரிமிதமாய் உண்டுபண்ணி விட்டது. ஆகவே, இதுசமயம் யாங்கள் இரு காரியங்களிலொன்றை அவசியம் செய்ய வேண்டியிருக்கிறது. அதாவது,நாங்கள் ஜெயபேரிகை அடைந்து விடுவோமாகில் அநேகக் கொள்ளை முதல் எங்களுக்குக் கிடைத்து விடும்; நீங்கள் மிகைத்துவிடுவதுகொண்டு யாங்கள் ஷஹீதாய் விடுவோமானால் எங்களுக்கு மறுமையில் அளவில்லா நற்பயன்கள் கிட்டும். எங்களில் ஒவ்வொருவரும் ஆண்டவனது பாதையில் இனிய உயிரைத் திகாயஞ் செய்வதான பாக்கியம் கிட்டவேண்டுமென்றே பிரார்த்தனை புரிந்துகொண்டிருக்கிறார்கள்; யாரும் வீடு சென்று பெண்டீர் பிள்ளைகளுடன் காலங் கழிப்பதை விரும்புவது கிடையாது; யாங்கள் யாவரும், குடும்பத்தினர் சந்ததிகள் யாவரையும் ஆண்டவன் பக்கத்தில் சாட்டி வந்திருக்கிறோம்; ஆகவே யாங்கள் மிக்கவறுமையில் பீடிக்கப்பட்டிருப்பதாக நீங்கள் கருதிக்கொண்டிருப்பது தவறாகும்; அளவற்ற ஆனந்த மகிழ்ச்சியுடனிருக்கிறோம்; உலகமுழுதும் எங்களுக்குக் கிடைத்தபோதிலும் இதுபொழுது ஏற்பட்டிருக்கும் சந்தோஷத்தைப் பார்க்கினும் ஒரு இம்மியும் அதிகப்படமாட்டாதென்பது திண்ணம். எனவே, இதுபொழுது உங்களிடம் மூன்று நிபந்தனைகளை எடுத்துக் காண்பிக்கிறோம். அது விஷயமாகவுள்ள உங்களது அபிப்பிராயத்தை உள்ளாலுள்ளபடி கூறி விடவேண்டும். அதாவது, நீங்கள் இஸ்லாம்

மார்க்கத்தைப் பின்பற்றிக் கொள்ளுங்கள் ;
அது மிக்க தூய்மைவாய்ந்த சன்மார்க்கமா
கும் ; அல்லாஹ்த ஆலாவிடம் ஒப்புக்கொள்
ளப்பட்ட மதம் இதுவன்றி வேறில்லை ; இது
ஆண்டவனால் அனுப்பப்பெற்ற நபிமார்களு
டையவும் மலக்குகளுடையவும் மார்க்கமா
கும் ; எவனொருவன் இதைவிட்டு முகத்தைத்
திருப்பிக்கொண்டு இதற்கு மாற்றஞ்செய்கின்
றானோ அவனுடன் எதிர்த்தே தீருவோம் ;
அவன் இச்சன்மார்க்கத்தைப் பின்பற்றிக்
கொள்வானாகில் அவனுக்கேற்படும் நஷ்டங்
களை எங்களது நஷ்டங்களென்றும், எங்கள்
சொத்து சுதந்திரங்களெல்லாம் அவனுடைய
தென்றும் கருதுவோம். இரண்டாவது, தலை
வரிக்கொடுங்கள். இந்நிலைமையில் உங்களுக்கு
மேதை மரியாதைகள் ஏற்பட்டுவிடமாட்
டாது. ஆனால் உங்களுடன் தக்கமுறையில்
விரும்பத்தக்க விதத்தில் நடந்துகொள்
வோம். எனவே, யாரும் உங்களை எதிர்த்துப்
போர்புரிவார்களாயின் அவர்களைத் தாக்கு
வோம்; நீங்கள் தலைவரி செலுத்திவரும்வரை
உங்கள் சொத்துக்களையும் உயிர்களையும் மிக்க
பேணுதலுடன் காப்பாற்றி வருவோம். இவ்
விரண்டிற்கும் நீங்கள் சம்மதியாதுபோனால்
வாளாயுதந்தான் பிரயோகிக்கப்படும். அது
காலை நமது உயிர்களை தியாகஞ் செய்யும்படி
நேர்ந்துவிடும். அல்லது நாம் நாடியதை
அடைந்து கொள்வோம் எனக் கூறிமுடித்
தார்கள்.

சம்பாஷணையின் முடிவு.

எங்களை சதாவும் அடிமையாக்கிவைத்துக்
கொள்ள நினைப்பது ஒருக்காலும் முடியாத
காரியமாகுமென்று 'முகவ்கஸ்' அரசர் கூறி
னார். அதற்கு ஹஸ்ரத் உப்பாத் (ரலி.) அவர்
கள், உமக்கு இவ்வாறான எண்ணமிருக்குமா
யின் நீர் நாடியதைச்செய்து கொள்ளலா
மென்று கூறிவிட்டார்கள். அதற்கு அர
சன் இம்மூன்று நிபந்தனைகளையுந் தவிர
வேறு ஏதாகிலும் சமாதானத்திற்கு வழி
யுண்டாவென வினவியமைக்கு ஹஸ்ரத்
அவர்கள், ஆண்டவன்மீது பிரமாணமாக
மேலே கூறப்பட்டுள்ள மூன்றுவழிகளைத்
தவிர வேறு யாதொருபாதையும் கிடையா
தெனக் கண்டிப்பாய்த் தெரியப்படுத்திவிட்
டார்கள். உடனே அரசன் தன்னோடிருந்த
வர்களை நோக்கி சமாதானப்பேச்சுகள் முடி
வடையாது போய்விட்டது. ஆதலின் இது
சம்பந்தமாய் உங்கள் அபிப்பிராயம் யாதா
கும் என்பதைத் தெரியப்படுத்திவிடுங்கள்
என வினவினார். அதற்கு அவர்கள் யாவரும்,
"அடிமைவாழ்க்கை நடத்துவதைவிட மரண
த்தை அனுபவிப்பதே மேலாகும்" எனத்
தெரிவித்து விட்டார்கள். இதற்குப் பின்
இருவரும் யுத்த முஸ்த்தீபுகளைத் தயாரிப்ப
தற்கு முயற்சிசெய்தார்கள். உடனே முகவ்
கஸ் அரசன் ஒரு பிரதானப் பாலத்தை
உடைத்து விடும்படி செய்துவிட்டார்.

உரோம சிப்பாய்களின் வருகை.

உரோம சிப்பாய்களுக்கு விரோதமாய்,
கிப்தியர்கள் சார்பாக முகவ்கஸ் அரசன்
சமாதானஞ் செய்து கொண்டு தலைவரி
செலுத்த ஒப்புக்கொண்டிருப்பதற் கிடையே
உரோம சிப்பாய்கள் அங்கு வந்து விட்டார்
கள். உடனே இஸ்கந்திரிய்யாவில் பெரும் யுத்
தம் ஆரம்பமாயிற்று.

முஸ்லிம்களின் சற்குணம்

பஸ்தாத்தின் ஜெயபேரிகைக்குப் பின்
முஸ்லிம்கள் அங்கு தங்கியிருக்கும்பொழுது,
இஸ்கந்தரிய்யாவின் மீது போர் தொடுக்க
வேண்டுமென்று ஹஸ்ரத் அம்ர் (ரலி.) அவர்
கள் உத்திரவு அனுப்பியிருந்தார்களாத
லின் உடனே யாவரும் அங்கிருந்து புறப்
பட முற்பட்டார்கள். அதுகாலை ஹஸ்ரத்
அவர்களின் கூடாரத்தைப் பிடுங்கும்போது,
கூடாரத்தில் ஒருபுறா கூடு கட்டியிருப்பதை
ஹஸ்ரத் அவர்கள் பார்த்தவுடன், கூடாரத்
தைப் பிடுங்காது அப்படியே விட்டுவிடுங்கள்;
நம்மிடம் வந்த விருந்தாளிக்கி எவ்வித கஷ்ட
முங் கொடுக்கலாகாதெனக் கூறியமையால்,
புறாவின் சௌகரியத்தையுன்னி கூடாரத்தை
அப்படியே விட்டுச் சென்று விட்டார்கள்.
பிறகு முஸ்லிம் சேனைகள் இஸ்கந்தரிய்யா
வின் பக்கல் செல்லவே யுத்தக்களத்தில்
அமளி ஏற்பட்டு விட்டது. முஸ்லிம்கள் வீர
பராக்கிரமத்துடன் எதிரிகளைத் தாக்கிக்
கொண்டே கோட்டைக்குள் பிரவேசித்து
விட்டார்களாதலின், உடனே உரோம சிப்
பாய்கள் கோட்டையின் வாசற் கதவை
அடைத்துக் கொண்டார்கள். எனவே ஹஸ்
ரத் அம்ரிப்னுல்ஆஸ் (ரலி.) அவர்கள் சில
ருடன் கோட்டைக்குள்ளாலேயே தங்கி விட்

டார்கள். இதனை தக்க சந்தர்ப்பமெனக் கருதிய உரோமர்கள், முஸ்லிம்களை உயிருட னேயே பிடித்துக்கொள்ள வேண்டுமென்று கருதினார்கள். ஆனால் முஸ்லிம்கள், ஆயிரக் கணக்கான எதிரிகளுடன் எதிர்த்து உயிரை தியாகஞ் செய்துவிட துணிபு கொண்டு விட் டார்கள். இதனைத் தெரிந்து கொண்ட உரோமர்கள், இரண்டு இரண்டு பேர் களாக யுத்தம் புரிந்து பார்ப்போம்; உரோம சிப்பாய் கொல்லப்பட்டுப் போவானாகில், நீங்கள் வெளியில் சென்றுவிட அனுமதி யளித்து அதற்கு வசதியும் செய்து கொடுக் கிறோம்; முஸ்லிம் கொல்லப்பட்டுப் போய் விடுவாராகில் உங்கள் ஆயுதங்கள் யாவற்றை யும் கீழே வைத்துவிட வேண்டுமென்று கேட் டுக் கொண்டார்கள். இதனை இயற்றுக் கொண்டு ஹஸ்ரத் அம்ர் (ரலி.) அவர்கள், தாங்கள் எதிர்ப்புச் செய்வதற்காக முதன் முதல் முன் வந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் முஸ்லிமா (ரலி.) அவர்கள், ஹஸ்ரத் அவர் களை நோக்கி, தாங்கள் படைத் தலைவராக யிருப்பதால் எதாகிலும் அசம்பாவிதம் நேரிட்டு விடுமாகில், பெருங்கஷ்ட மேற்பட்டு விடும் எனக் கூறிவிட்டு, தாங்களே உரோம சிப்பாய்களின் மீது பாய்ந்து ஒருவர்பின் ஒருவராகக் கொன்று அநேகரை சங்காரம் செய்துவிட்டதால், கோட்டை திறக்கப்பட் டுப் போயிற்று. உடனே முஸ்லிம்கள் ஜெய பேரிகையுடன் குதிரையை விரட்டிக்கொண்டு தங்கள் படைக்கு வந்து விட்டார்கள்.

நீண்டநாள் முற்றுகையிடப்பட்டிருந்ததால் கலீபத்துல் முஃமினீன் ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் ஒரு கடிதம் வரைந்தனுப்பியிருந் தார்கள். அதில், இவ்வளவு காலம் ஜெயமேற் படாதிருப்பதால், ஒருக்கால் முஸ்லிம் வீரர் கள், கிறிஸ்தவர்களைப் போன்று சுவண்டியை அனுபவிப்பதி லீடுபட்டு விட்டார்களோ வென்னும் சந்தேகம் தங்களுக்குத் தோன்று வதாகவும், வெகுகாலமாயும் முஸ்லிம்கள் ஜெயபேரிகை அடையாமலிருப்பதற்குள்ள காரணம் தங்களுக்குப்புலனாகவில்லை என்றும், குறிப்பிட்டிருந்தார்கள். மேலும் அக்கடிதம் கிடைத்தவுடனே வீரர்கள்யாவரையும் ஒன்று கூட்டி வற்புறுத்திக் கூறியும், ஒற்றுமையாக எதிரிகளைத் தாக்கும்படியும் உபதேசம் புரி யும்படி குறிப்பிட்டிருந்தார்கள். அக்கடிதம் வாசிக்கப்பட்டவுடன் அதில் குறிப்பிடப்பட் டிருந்தவாறே அமுல் நடத்தப்பட்டது. எனவே, ஹஸ்ரத் அம்ருப்னுல் ஆஸ் (ரலி.) அவர்கள் தங்கள் தலைப்பாகையைக்கழற்றி ஈட்டி முனையில் கட்டி அந்தக் கொடியை ஹஸ்ரத் உப்பாதிப்னுஸாமித் (ரலி.) அவர் கள் வசம் ஒப்புவித்தார்கள். அதுகாலை முஸ்லிம் வீரர்கள் பெரும் ஆவேசத்தோடு உரோமசிப்பாய்களைத் தாக்கமுற்பட்டதால், அவர்கள் நடுக்கமுற்று தோல்வியடைந்து விட்டார்கள். உடனே இஸ்கந்தரிய்யாவின் உயர்ந்த கட்டடத்தில் இஸ்லாமியக் கொடி பறக்க ஆரம்பித்தது.

ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களுக்கு இச் செய்தி தெரிந்தவுடன் ஸஜ்தாவில் தலையை வைத்து அல்லாஹ்தஆலாவுக்கு மிக மிக நன்றி செலுத்தினார்கள். தூதுகொண்டு வந்தவர் நேரே ஹஸ்ரத் அவர்களிடம் வராது தமது வீட்டுக்குச் சென்று விட் டதால், அவரை அழைத்துவரச் செய்து நேரே தங்களிடம் வராது வீடு சென் றமைக்குக் காரணம் யாதாகுமென வின வினார்கள். அதற்கு அத்தூதர், ஒருக் கால் தாங்கள் படுத்துத் துயில்புரியக்கூடு மென்று கருதி வீட்டுக்குச் சென்றுவிட் டேன் எனக்கூறினர். இதனைச் செவியுற்ற ஹஸ்ரத் அவர்கள், என் விஷயமாக உமக் கேற்பட்டுள்ள சந்தேகம் பெரும் ஆச்சரியத் தைத் தருகிறது; யான் பகலில் படுத்துறங்கு வேனாகில் கிலாபத்தின் சுமையை எவ்வாறு வகித்திருக்க முடியும்? என்று பதில் கூறி னார்கள்.

ஜெயம் பெற்றோர், தோல்வி அடைந்தோர்க்கிடையில் ஒற்றுமை

இஸ்கந்தரிய்யா ஜெயபேரிகை கொண்ட பொழுது கணக்கற்ற கிப்தி, உரோமசிப்பாய் கள் சிறை செய்யப்பட்டிருந்தார்களாதலின் ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் அன்னோர் விஷயமாய், யார்பேரிலும் அதிக்கிரமம் புரியலாகாது; அவர்கள் இஸ்லாத்தைத்தழு வும் விஷயமாக தங்கள் இஷ்டப்படி நடந்து கொள்ளலாம்; யாதொரு வற்புறுத்தலுஞ் செய்யலாகாது எனக் கட்டளை பிறப்பித் திருந்தார்கள். உடனே ஹஸ்ரத் அம்ரிப்னுல் ஆஸ் (ரலி.) அவர்கள் ஒரு சபையைக் கூட்டி னார்கள். அச்சபையின்கண் முஸ்லிம்களும் உரோமர்களும் முகருபில் உட்கார்ந்தார்கள்.

அவ்விரு வரிசைக் கிடையில் கைதிகள் கொணர்ந்து நிப்பாட்டப்பட்டவுடன் கலீபத்துல் முஃமீனின் ஹஸ்ரத் உமரபாரூக் (ரலி.) அவர்களது கட்டளை அமைந்த நிரூபம் வாசிக்கப்பட்டு, ஒவ்வொருவருக்கும் சுதந்திரமளிக்கப்பட்டது. எனவே, இஷ்டப்படுபவர் இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொள்ளலாமென்றும், மன விருப்பமில்லாதவர்கள் கிறிஸ்தவ மார்க்கத்திலேயேயிருந்துகொள்ளலாமென்றும் அனுமதி யளிக்கப்பட்டது. உடனே ஒவ்வொருவரும் தம் மன விருப்பத்தை வெளியிட முற்பட்டார்கள். ஆனால் இஸ்லாம் மதத்தை ஒப்புக்கொள்வதாகச் சொன்னவுடன் முஸ்லிம்கள் யாவரும் உரத்த தொனியில் 'அல்லாஹ் அக்பர்' என்னும் சப்தத்தை உயர்த்தி அளவற்ற மகிழ்ச்சி கொள்வர். யாராகிலும் கிறிஸ்தவ மதத்திலேயே யிருப்பதாகக் கூறுவாராயின் கிறிஸ்தவர்கள் ஆரவாரஞ் செய்வார்கள். முஸ்லிம்கள் இதைக்கண்டு கண் தண்ணீர்விடுவார்கள்.

இத்தியாதி பிரயாசையோடு ஜெயபேரிகை கொண்ட மிஸர் தேசமானது இதுகாலையும் முஸ்லிம்களின் தேசமாக இருந்துவருகிறது. அங்கு முஸ்லிம்கள் அதிகமாய் வசித்து வருகின்றார்கள். இவ்வாறு ஜெயபேரிகை ஏற்பட்டதற்கு முஸ்லிம்களின் சற்குணம்தான் காரணமாகுமென்பதை நன்கு தெரிந்துகொள்கிறோம்.

தஞ்சை ஜில்லா முஸ்லிம் மகா நாடுகள்

ஜில்லா முழுதும் ஒரே பரபரப்பு ! காதியானிக் கொள்கைக்கு சாவு மணி !! தா. இ. விஷமப் பிரசாரத்திற்குத் தடை !!! பா. தா. வின் சூழ்ச்சி யாவருக்கும் நன்கு தெரிந்துவிட்டது.

பாவலரின் பாசாங்கு பலிக்காது போயிற்று

கூத்தானல்லூர்

6-8-33 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு இவ்வூர் பெரிய பள்ளிவாசல் தராவீஹ் மஹாலில் முஸ்லிம்களின் மாபெரும் மகாநாடுகூடிற்று. அதற்குப் பற்பல ஊர்களிலிருந்தும் அநேகப் பெரியார்களும் மார்க்காபிமானிகளும் விஜயஞ் செய்திருந்தார்கள். அம்மகாநாட்டுக்கு ஆலீ ஜனுப் அல்ஹாஜ் அ. ம. அப்துல்லாஹ் சாஹிப் அவர்கள் தலைமை வகித்தார்கள். முக்கியத் தலைவர்களும் உலமாக்களும் சபையினருக்கு அறிமுகஞ் செய்துவைக்கப்பட்ட பின், மௌலானா மௌலவி சையித் முர்தஜா சாஹிப் பஹாதுர் M. L. A. அவர்கள் தக்பீர் முழக்கத்துடன் எழுந்து, காதியானி இயக்க ஸ்தாபகரான மிர்ஸா குலாம் அஹ்மதின் பூர்வ சரித்திரங்களையும், அவ்வியக்கத்தாரின் ஆபாசக் கொள்கைகளையும் விளக்கிக் காண்பித்து அக்கொள்கைகள் நம் தேசத்தில் பரவாது தடுப்பது அத்தியா அவசியமாகுமெனக்கூறி அறிய சொற்பொழிவாற்றினார்கள்.

பின்னர் "மரணத்திற்குப்பின் மானிடர் எழுப்பப்படுவது இப்பூத சரீரத்துடனா? அல்லது ஆத்மா மாத்திரமா? என்பதைப் பற்றி மௌலானா மௌலவீ சையித் முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்களும், மௌலவீ முஹம்மது காஸிம் சாஹிபும் விளக்கிக் காண்பிக்குங்கால், இப்பிரபஞ்ச வாழ்க்கையைத் தொடர்ந்து மரித்தபின் ஆத்மாவுக்கு ஏற்படுகிற ஒரு சந்தோஷ நிலைமையையும் சலிப்பு நிலைமையுந்தவிர வேறல்லவென்றும், சுவர்க்கம், நரகம் என்பது கிடையாதென்றும், ஆன்மா அடையும் மேற்கண்ட இரு நிலைமைகள்தான் சுவர்க்கம் நரகமென்றும் வாதிக்கும் பதர்க்கூற்றுகளுக்கு தக்க பதில் குர்ஆன் ஹதீதுகளிலிருந்து தக்க மேற்கோள்களுடன் எடுத்துக் காண்பித்தார்கள்.

மேலும் ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் சிலுவையிலறைபட்டு மரணமடைந்து விட்டார்களென்றும், அவர்களுக்குத் தந்தையுண்டென்றும், அவர்கள் யூசுப் நஜ்ஜாருடைய குமாரரென்றும் பா. தா. எழுதியும் இயம்பி

யும் வருவதை மறுத்து மௌலானாமௌலவீ எ. எம். ஆர். அப்துற்றஹ்மான் சாஹிப் பாக்கவீ அவர்களும், மௌலவீ அம்ஜத் இப்ராஹீம் சாஹிபும் சபையினர் மனங்கள் கவரும்படி தக்க மேற்கோள்களுடன் இனிய பிரசங்கம் புரிந்தார்கள்.

இஸ்லாம் என்பது கலிமாவுமன்று, தொழுகையுமன்று, நோன்புமன்று, ஜக்காதுமன்று ஹஜ்ஜுமன்று என்பதாக 18-1-29ல் வெளியான தா. இ. ன் ஆசிரியர் குறிப்பில் "போலி இஸ்லாம்" என்னும் தலைப்பின் கீழ் வரையப்பட்டிருப்பதை மௌலானா மௌலவீ முஹம்மது சயீத் சாஹிப் பாக்கவீ அவர்கள் சபையினர் முன்னிலையில் படித்துக் காட்டி, பா. தா. நம் நாட்டில் சீர்திருத்தம் புரிந்துவரும் விபரீதப் போக்கையும், இதுபொழுது அவர் இஸ்லாத்தின் அடிப்படையான ஐம்பெரும் கடமைகளையே இல்லை என்று மறுப்பதையும், ஹாபிஸின் பாசாங்குகளையும், அவர் பா. தா. வின் வாலைப்பிடித்துத் திரியும் இரகசியத்தின் உண்மையையும் தக்க முறையில் எடுத்துக்கூறி சொற்பெருக்காற்றியதானது, சபையோர்களின் மனதை பெரும் கவர்ச்சியிலாக்கிவிட்டது. பின்னர், ஜனாப் கு. இ. முஹம்மது காஸிம் சாஹிப் இதை ஆதரித்துப் பேசினார்.

பிறகு மௌலானா மௌலவீ அல்ஹாஜ் ச. அ. முஹம்மது அலீ சாஹிப் பாக்கவீ அவர்கள் பேசுகையில், இதுவரை பேசிய மௌலவீகளும், தலைவர்களும் பா. தா. செய்த தவறுகளில் நான்கு விஷயங்களை மாத்திரமே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்; இதுவன்றி அவரால் இழைக்கப்பட்டுள்ள இன்னும் பல பெருந்தீங்குகளை எடுத்துக் கூறுவதற்குப் போதிய அவகாசமில்லை. அத்தீங்குகளை ஒன்று திரட்டிப் புத்தக ரூபமாய் அச்சிட்டுக் கொடுக்கும்படி பலர் வேண்டிக்கொண்டும் சமய சந்தர்ப்பத்தால் அவை முடியாமலே இருந்து வருகிறது; இன்ஷா அல்லாஹ் கூடிய சீக்கிரம் அவ்வேண்டுகோள் பூர்த்தி செய்யப்படுமென்பதை அன்பர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன் எனப் பேசினார்கள். பின்னர் தலைவர் அவர்கள் சார்பாக மௌலானா மௌலவீ செய்யித் முர்தஜா சாஹிப் பஹாதுர் அவர்களால் முடிவுரை கூறப்பட்டு வந்தனோபசாரத்துடன் பாத்திஹாவுக்குப் பின் கூட்டம் இனிது கலையும் தருவாயில், பாவலர் சி. மி. முஹம்மது யூசுப் சாஹிப் எழுந்து "மகா சபையில் 10 நிமிஷம் பேசுவதற்கு நான் வெகு நேரம் அனுமதி கேட்டு மன்றாடினேன்; எனக்கு உத்திரவு கிடைக்கவில்லை என்னும் விஷயத்தை மகா ஜனங்களுக்கு அறிவித்துக்கொள்கிறேன்; நாளை ஒரு சமயம் 'தாருல் இஸ்லாம்' விஷயமாக ஏதேனும் சொல்வேனாயின், அன்று மகா நாட்டில் சும்மாயிருந்துவிட்டு இதுபொழுது பேசமுற்பட்டிருக்கிறாய் என்று என்மீது யாரும் குறைகூறக்கூடாது" என்று கூறினார். மகா நாட்டில் பேசப்பட்ட மார்க்க விஷயங்களில் உமக்கு ஏதாகிலும் ஆக்ஷேபனை யிருக்கிறதா வென்று கேட்கப்பட்டபொழுது, "அவைகளில் ஒன்றும் ஆக்ஷேபனை கிடையாது" எனக்கூறினார். "அவ்வாறாயின் இங்கு பேசவேண்டிய அவசியமில்லையே" என்று சபையினர் பதில் கூறினர். இதற்கிடையே இஷா தொழுகைக்காக 'இகாமத்' சொல்லப்பட்டதால் தொழுகைக்குப் பின் பாவலரை வினவியபோது, தப்புச்சால் ஜாப்புக் கூறியதால் சபையோர் அனுமதிதர மறுத்துவிட்டனர். பிறகு பாவலர் பலட்டி அடித்து மகா நாட்டில் கூறப்பட்டுள்ள விஷயத்திலும் தமக்கு ஆக்ஷேபனை இருப்பதாய்த் தெரிவித்துக் கொண்டார். உடனே இஸ்லாத்தின் கேஸரியும், இந்தியா சட்ட சபை மெம்பரும், நம்தென்னாட்டிற்கே திலகம்போல் விளங்குபவரும், சென்னை மாகாண முஸ்லீம் லீக் தலைவரும், அனேக சங்கங்களின் ஸ்தாபகரும், மாபெரும் மகா நாடுகளில் தலைமை வகித்து அரும்பெரும் சொற்பெருக்காற்றி ஆங்காங்கு மக்களிடையே காணப்படும் பிணக்கு சச்சரவு முதலியவைகளை ஒழித்து சமுக ஒற்றுமையை நிலைபெறச் செய்து வருபவருமாகிய மௌலானா மௌலவீ சையித் முர்தஜா சாஹிப் பஹாதுர் அவர்கள் எழுந்து, அவ்வாறாயின் அவ்வாட்சேபனைகளை இவ்விடத்திலேயே தெரிவித்துவிடுமாறு கூறினார்கள். அதற்குப் பாவலர், "ஈஸா (அலை.) இன்னும் ஜீவித்திருப்பதாக சபையில் பேசப்பட்டது; ஆனால் அவர்கள் மரணமடைந்துவிட்டதாக புஸ்லுஹில் எழுதப்பட்டிருக்கிறது" என்றார். உடனே வீரகேஸரி அவர்கள் அவ்வாறு எழுதுவதற்கு நியாயமில்லையே; குர்ஆன் ஹதீதுகளில் அவர்கள் மரணமடையவில்லை என்று ஸ்ப

ஷ்டமாகக் கூறப்பட்டிருக்கும்பொழுது அதற்கு மாற்றமாக அக்கிரந்தத்தில் எவ்வாறு கூறியிருக்க முடியுமெனக் கூறவே, பாவலர் பதில் கூறமுடியாது பதைபதைத்து பதுங்கி நின்றார். சபையினர் யாவரும், வீண் குழப்பத்தை யுண்டுபண்ணியதற்காக அவர்மீது ஆக்ரோஷங் கொண்டு பலவாறு பேச ஆரம்பித்துவிட்டனர். பின்னர் நமது மாபெரும் தலைவராய வீரகேஸரி அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும்படி சபையினர் கூறவே, பாவலர் நமது தலைவர் மௌலானா அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு சபையினருக்கு உரத்த தொனியில் சலாமும் கூறியபின் சபை இனிது கலைந்தது.

பிறகு இரவு $10\frac{1}{2}$ மணிக்கு ஆலீ ஜனாப் அ. மு. முஹம்மது இஸ்மாயீல் ராவுத்தர் அவர்களது சதுக்கத்தில் மௌலானா மௌலவீ சையித் முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள் தலைமையின்கீழ்மாபெரும் மகாநாடு கூடிற்று. அதில் மௌலவீ ஷ. கு. முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் (சிங்கையில் பா. தா. வைதோற்கடித்து வெற்றிமாலை சூட்டிக்கொண்ட வீரசிங்கம், பா. தா.வின் கொட்டத்தை அடக்கி காதியானிக் கொள்கை பரவச் செய்யாமல் பாதுகாக்கும் பேரன்பர்) அவர்கள் தங்கள் பிரசங்க வன்மையால் மகா ஜனங்களை பரவசமடையச் செய்தார்கள். அப்பால் தீய பிரசாரம் புரிந்துவரும் பா.தா. வின்மீது தடையுத்தரவு பிறப்பிக்கக் காரணஸ்தர்களாயிருந்த விருதுநகர் முஸ்லிம் மகா ஜனங்களையும், மார்க்க பக்தரான ஆலீ ஜனாப் P. N. A. முஹம்மது இப்ராஹீம் சாஹிப் பஹாதுர் அவர்களையும் பாராட்டியும், அந்நகர் போலீஸார் சமாதானத்தை விரும்பி 144-வது பிரிவை உபயோகித்ததைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு இரவு 2 மணிக்கு மகாநாடு முடிவு பெற்றது.

புதக்குடி

(நூரே ஆபாத்)

இவ்வூர் மிஸ்பாஹுத்தீன் முஸ்லிம் ராத்திப் சங்கத்தின் 18-ம் ஆண்டு பூர்த்தி விழா மகாநாடு 7-8-33 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு 'அமானுல்லுலா ஹாலின்' முன்புறம் அமைக்கப்பெற்றிருந்த நேர்த்தியான பந்தலில் மௌலானா மௌலவீ செய்யித் முர்தஜா சாஹிப் பஹாதுர் அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது. ஆரம்பமாக மௌலவீ அம்ஜத் இப்ராஹீம் சாஹிப் அவர்கள் திருக்குர்ஆனிலிருந்து சில வசனங்கள் ஓதியபின், கூத்தானல்லூர் சன்மார்க்கத் தொண்டர் சபையினரால் நபிகள் நாயகத்தின்மீது புகழ்பாக்கள் பாடியது மிக்க ரம்பியமாக இருந்தது. பிறகு ஜனாப் செ. ந. முஹம்மது ஷரீப் அவர்கள், மௌலானா மௌலவீ சையித் முர்தஜா சாஹிப் பஹாதுர் அவர்களை அக்கிராசனம் வகிக்கும்படி கேட்டுக்கொள்ள, ஜனாப்களான கொ. செ. அப்துல்லா, கு. மி. அபுல் காஸிம் ஆகியவர்கள் முறையே ஆமோதித்து ஆதரிக்க, தலைவரவர்கள் ஆசனத்திலமர்ந்தார்கள். உடனே ஜனாப் சி. அ. செ. முஹம்மது அபூபக்ர் அவர்களால் தலைவருக்கும், ஜனாப் ந. ப. முஹம்மது அலி அவர்களால் மகாநாட்டின் கண் குழுமியிருக்கும் உலமாக்களுக்கும் உபசாரப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டது. கனம் அக்கிராசனரவர்கள் பத்திரங்களுக்குப் பதில் கூறிவிட்டு, முன்னுரையாக சங்கங்களின் ஐக்கியத்தைப்பற்றிப்பேசினார்கள். உலமாக்கள் சார்பாக மௌலானா மௌலவீ முஹம்மது சயீத் சாஹிப்பாக்கவீ அவர்கள் பதில் கூறிவிட்டு 'ராத்திப்' என்பது யாதாகுமென்பதை தக்க முறையில் விளக்கிக் காண்பித்தார்கள். பின்னர் ஜனாப் சி. அ.சே. முஹம்மது அபூபக்ர் அவர்களால் சங்கத்தின் வருஷாந்திர ரிபோர்ட் வாசிக்கப்பட்டது. சங்கம் ஆற்றிவரும் அரும் சேவைகளை தலைவர்கள் சிலாக்கித்துப் பேசியபின் மௌலவீ அம்ஜத் இப்ராஹீம் சாஹிபவர்கள் சங்கம் ஆற்றவேண்டிய தொண்டுகள் என்னும் விஷயமாய் அரும் சொற்பெருக்காற்றினார்கள். இதனை ஆதரித்து மௌலவீ ஷ. கு. முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள் பேசினார்கள். பிறகு,

"தஞ்சை ஜில்லாவிலுள்ள எல்லா சங்கங்களும் ஒன்று சேர்ந்து ஓர் ஐக்கியத்திட்டம் தயார்செய்து அதன்படி எல்லா சங்கங்களும் ஒற்றுமையாக நடத்தப்படவேண்டும். அதன் முதல் மகாநாடு கூத்தானல்லூரில் நடத்தப் படவேண்டும். இதை அமுலில் கொண்டு வருவதற்கான முயற்சியை இப்பொழுதே எடுத்துக்கொள்ளல் வேண்டும்

என்று இம்மகாநாடு எல்லா சங்கங்களையும் கேட்டுக் கொள்கிறது''

என்னும் தீர்மானம் ஜனாப் ச. இ. சி. முஹம்மது இஸ்மாயில்கனி ருவுத்தர் அவர்களால் பிரரேபிக்கப்பட்டு, மௌலவீ அல்ஹாஜ் ச. அ. முஹம்மது அலீ சாஹிப், ஜனாப் கு. இ. முஹம்மது காஸிம் சாஹிப், மௌலவீ நா. அப்துல் வஹ்ஹாப் சாஹிப் ஆகியவர்களால் ஆமோதித்து ஆதரிக்கப்பட்டபின் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

பின்னர் தொழுகைக்கும் இடைவேளை போஜனத்திற்கும் பிறகு மகாநாடு ஆரம்பமாயிற்று. அதுபொழுது "இஸ்லாமும் ஒற்றுமையும்'' என்பதுபற்றி மௌலவீ ஷ. கு. முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப், மௌலவீ முஹம்மது காஸிம் சாஹிப் ஆகியோர் பிரசங்கம் புரிந்தார்கள். மாலை $5\frac{1}{2}$-மணிக்கு வந்தனம் கூறப்பட்டு மகா நாட்டின் நடவடிக்கைகள் முற்றுபெற்றன.

ஏற்கனவே அறிக்கை செய்திருந்ததற்கேற்ப, இராபோஜனத்திற்குப்பின் 'அன்னூருல் முஹம்மதிய்யு' மத்ரஸா முற்றத்தில் வேலூர் மத்ரஸா பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்தின் ஆசிரியரும் பிரதம முப்தியுமான ஆலீ ஜனாப் மௌலானா மௌலவீ ஷேக் ஆதம் சாஹிப் அவர்கள் தலைமையின்கீழ் மகாநாடு ஆரம்பமாயிற்று. அதற்கு ஏராளமான முஸ்லிம்கள் விஜயஞ் செய்திருந்தனர். அதில் முஸ்லிம்கள் தங்கள் மதக்கொள்கையைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டியதின் அவசியத்தையும், வழிகெட்டவர்களும் விதண்டாவாதிகளும் திருக்குர் ஆன் வாக்கியங்களுக்கு கூடார்த்தங்கள் செய்து ஜனங்களை வழிகெடுத்து வருவதையும் விளக்கி அக்கொள்கைகளைத் தடுப்பதற்கு முஸ்லிம்கள் பெரும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தலைவரவர்கள் $1\frac{1}{4}$-மணிநேரம் வரை பேசினார்கள். பின்னர் மௌலவீ ஷ. கு. முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள், நமது நாட்டில் பரவிவரும் காதியானி அஹ்மதிய்யா பார்ட்டியினரின் தீயக்கொள்கைகளையும், அதனை நம் நாட்டில் பிரசாரம் செய்துவரும் தா. இ. பத்திராசிரியர் பா. தாவூதுசாவின் மூடப்பிரயாசையையும் குறித்து இரவு $1\frac{1}{2}$-மணிவரை பேசினார்கள். பின்னர் கூட்டம் கலைந்தது.

அத்திக்கடை

8-8-33 மாலை $2\frac{1}{2}$ மணிக்கு முஸ்லிம் மகா நாடு ஆரம்பமாயிற்று. வேலூர் மத்ரஸா பாக்கியாத்துஸ் சாலிஹாத்தின் பேராசிரியரும், பிரதம முப்தியுமான மௌலானா மௌலவீ அல்லாமா ஷேக் ஆதம் ஹஸ்ரத் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். ஆலீ ஜனாப் அல்லாமா அவர்கள் தங்களது அக்கிராசனப் பிரசங்கத்தில், வேலூர் மத்ரஸாவின் மகிமையையும் அதன் ஸ்தாபகரான மௌலானா மர்ஹூம் அவர்களின் நன்னோக்கங்களையும், அந்தரங்க சுத்தியான எண்ணங்களையும் எடுத்துக்கூறி அம்மத்ரஸாவில் 6, 7 வருடம் வரை இருந்து இறுதியில் வழிகெட்ட காதியானி அஹ்மதிய்யா பார்ட்டியாருடன் சேர்ந்து கொண்டு தின்ட உப்புக்கு இரண்டகம் செய்த ஹாபிஸ் முஹம்மது யூசுபின் வரலாறுகளையும், அஹ்மதிய்யா காதியானிக் கொள்கைகளின் வரலாறுகளையும் எடுத்துக் கூறி இவ்வியக்கம் நம் நாட்டில் பரவாமல் தடுப்பதற்காக, வேண்டிய முயற்சிகளை யாவரும் செய்யவேண்டிய அவசியத்தை வற்புறுத்திக் கூறினார்கள்.

பின்னர் 'மரித்தவரின் மறு உலக வாழ்க்கை' என்னும் விஷயமாய் ஆலீஜனாப் மௌலவீ அல்ஹாஜ் ச. அ முஹம்மது அலீசாஹிப் பாக்கவீ அவர்கள் பேசுகையில், "மரித்தவர்களின்மறு உலகவாழ்க்கையானது இப்பிரபஞ்சத்துடன் தொடர்ந்து செல்கிற ஆத்மாவின் இருவித நிலைமைகளே என்றும், சுவர்க்கமென்றும் நரகமென்றும் எவ்வித குறிப்பிட்ட இடங்கள்கிடையாதென்றும்'' வாதிப்பதானது, மரித்தவர்களை ஒரு நாளில் ஒன்று சேர்க்கப்பட்டு கேள்வி கணக்குக் கேழ்க்கப்படுவதையே இல்லை என்று ஒருவகையில் மறுப்பதாக இருக்கிறதென்பதை சபையினருக்கு விபரமாக எடுத்துக்கூறி, அஹ்மது தாவூத் நூல்கள் பலவற்றிலும் இவை வற்புறுத்தி எழுதப்பட்டுவருவதைக் கண்டித்துப்பேசினார்கள். இதை மௌலவீ S. S. முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் பாக்கவீ அவர்கள் ஆமோதித்துப் பேசுங்கால், அல்லாஹ்தஆலாவுக்கு மறுமையில் மானிடர்களை பூத உடலுடன் எழுப்புந்திறன் கிடையாதென்னும்கருத்துடைய வியாசங்களை வரைந்து வெளியிடுவது முழுமுட்டாள் தனமாகுமென்று விரிவாகப்

பேசினார்கள். பிறகு "இஸ்லாமென்பது கலிமாவுமன்று தொழுகையுமன்று..........." என பா. தா. பிதற்றியிருப்பதை மௌலவீ முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள் விளக்கிக் கூறி, தா. இ. வின் விஷமப்பிரசாரத்தைதக்க முறையில் விளக்கிக் காண்பித்தார்கள். பீபி மர்யம் அவர்களின் பரிசுத்தத் தன்மையைப் பற்றி மௌலவீ முஹம்மது காஸிம் சாஹிப் பாக்கவீ அவர்கள் கூறுகையில், திருக்குர்ஆனின் அநேக வசனங்களை மேற்கோளாக எடுத்துக்காட்டி பா. தா. கூறுவது பெரும் அபாண்டமாகுமென விளக்கிக் காண்பித்தார்கள். பிறகு மௌலவீ அம்ஜத் இப்ருஹீம் சாஹிப் அவர்கள் தொழுகை, நோம்பு முதலிய மார்க்க அனுஷ்டானங்களின் மகத்துவங்களையும், அவைகளை மானிடர்கள் எடுத்தாளக் கடமைப் பட்டிருப்பதன் அவசியத்தையும் தக்க முறையில் கூறி பிரசங்கம் புரிந்தார்கள்.

பின்னர், ஹஸ்ரத் ஈஸா (அலை) சிலுவையிலறையப்பட்டார்களா இல்லையா? என்பது பற்றி மௌலானா மௌலவீ எ. எம். ஆர். அப்துற்றஹ்மான் சாஹிப் பாக்கவீ அவர்கள் பேசுகையில், நபி அவர்கள் சிலுவையிலறைபடவுமில்லை, கொலை செய்யப்படவுமில்லை என்னும் திருக்குர்ஆன் வாக்கியங்களை ஓதிக் காண்பித்து, திருக்குர்ஆனின் பஹிரங்க அறிவிப்புக்கு நேர் விரோதமாய் பா. தா. என்பார் தமது ஜவாஹிருல்புர்கானில் வரைந்து வைத்திருப்பதை சபையினருக்குப் படித்துக்காட்டி அதனைக் கண்டித்துப் பேசினார்கள். பிறகு அடியில் கண்ட தீர்மானங்கள் பிரரேபிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது:—

(1) சென்னை தாருல் இஸ்லாம் பத்திரிகையும் அவரது பிரசுரங்களும் மக்களை வழி கெடுப்பதாக இருப்பதால் அதை பஹிஷ்கரிக்க வேண்டுமென்று இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

(2) விருதுநகர் முஸ்லிம்கள் தாவூதின் வழிகெட்ட பிரசாரத்தைத் தடுக்க எடுத்துக்கொண்ட முயற்சியை இம்மகாநாடு பாராட்டுகிறது.

பின்னர் இஷா தொழுகைக்குப்பின் மௌலவீ ஷ. கு. முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் தலைமையின் கீழ் மகாநாடு ஆரம்பமாயிற்று. அதில் பலஅறிஞர்கள் இஸ்லாத்தின் உன்னத சத்தியத்தையும் அஹ்மதீ, காதியானீ, மிர்ஸாயீ, தாவூதீ முதலிய வழிகெட்ட கொள்கைகளைப்பற்றியும் சவிஸ்தாரமாய் இரவு $1\frac{1}{2}$ மணி வரை பேசியபின் மகாநாடு இனிது கலைந்தது.

பூதமங்கலம்

சத்தியப்பிரசாரகர்களான ஹிஸ்புல்லாஹ் திருக்கூட்டத்தினர், 9-8-33 மாலை 5-மணிக்கு பூதமங்கலம் வந்து சேர்ந்தனர். அசர் தொழுகைக்குப்பின் மௌலானா மௌலவீ செய்யித் முர்தஜா சாஹிப் பஹாதுர் அவர்கள் தலைமையின் கீழ் மகாநாடு ஆரம்பமாயிற்று. மௌலவீ எ. எம். ஆர். அப்துற்றஹ்மான் சாஹிப் பாக்கவீ அவர்கள் 'மரணத்திற்குப் பின் மரித்தவர் நிலைமை' என்பதுபற்றி விளக்கமாகப் பேசினார்கள். மௌலவீ அல்ஹாஜ் எஸ். எ. முஹம்மது அலீ சாஹிப் பாக்கவீ அவர்கள் இதனை ஆதரித்துப் பேசுங்கால் தக்க மேற் கோள்களுடன் விளக்கிக் காண்பித்தார்கள். பிறகு 9-மணிக்கு மீண்டும் மகா நாடு ஆரம்பமாயிற்று. அதில் மௌலவீ S. K. முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள் அற்புத நிகட்சிகளின் மகிமைகளை வெகு விளக்கமாய் எடுத்துக் கூறினார்கள். பின்னர் மௌலவீ அப்துல் ஹமீது சாஹிப் நூரிய்யீ அவர்கள் தாவூதின் சிலுவைக் கொள்கையைக் கண்டித்து, "ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்களை யூதர்கள் கொல்லவுமில்லை; சிலுவையி லறையவுமில்லை; அவர்களை இறைவன் தன் பக்கல் உயர்த்திக் கொண்டான்" என்று திருகுர்ஆனில் பஹிரங்கமாகக்கூறப்பட்டிருக்க, ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் மூன்றுமணி நேரம் சிலுவையில் அறைபட்டிருந்தார்களென்று பா. தா. எழுதியிருப்பது முற்றமுற்ற விரோதமான தவருகுமென்றும், இவ்விதம் கருதுபவர் முர்தத்தாக எண்ணப்படுவர் என்றும் சவிஸ்தாரமாகப் பேசினார்கள். பிறகு தாருல் இஸ்லாம் பஹிஷ்காரமும், விருதுநகர் முஸ்லிம்களைப் பாராட்டுந் தீர்மானமும் ஏகமனதாய் நிறைவேறியபின் இரவு 12 மணிக்கு மகாநாடு முடிவுற்றது.

கொடிக்கால்பாளையம்

10-8-33 வியாழக்கிழமை காலை 10- மணிக்கு கொடிக்கால்பாளையம் புதுப்பள்ளிவாசலுக்கெதிரில் அமைக்கப்பட்டுள்ள பந்தலில் 'மிஸ்பாஹுல் குலூப் பீ மஜ்லிஸிற்றுத்திப்

சங்கத்தாரின் ஆதரணையின்கீழ் "முஸ்லிம் மகாநாடு" சென்னை 'ஸைபுல் இஸ்லாம்' ஆசிரியர் ஆலீ ஜனுப் மௌலானு மௌலவீ S. S. அஹ்மத் சயீத் சாஹிப் அவர்கள் தலைமையின்கீழ் ஆரம்பமாயிற்று. ஹாபிஸ் முஹம்மது அலீ சாஹிப் அவர்கள் திருக்குர்ஆனிலிருந்து சிலவசனங்கள் ஓதியபின் கூத்தானல்லூர் சன்மார்க்கத்தொண்டர் சிலரால் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள்மீது புகழ்க்கீதங்கள் பாடப்பட்டது. அப்பால் சங்கத்தின் சார்பாக ஜனுப் செ. மு. முஹம்மது நத்தர் அவர்களால் கனம் அக்கிராசனரவர்களுக்கு உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. ஆலீ ஜனுப் தலைவர் அவர்கள் ஆரம்பத்தில் தங்களுக்களிக்கப்பெற்ற பத்திரத்திற்கு பதில் கூறிவிட்டு, உர்தூவின் மேன்மைகளைச் சிலாக்கித்துக் கூறினுர்கள். பின்னர் மௌலவீ ஹாஜீ ச. அ. முஹம்மது அலீ சாஹிப் அவர்கள், முஸ்லிம்கள் இஸ்லாமிய சட்டதிட்டங்களை எடுத்து நடக்காததினுலேயே க்ஷீண திசைக்கு வந்துகொண்டிருக்கிறுர்களென்றும், காதியானி இயக்கம் மகா கொடியதென்றும், ஒற்றுமை மிக மிக அவசியமென்பதையும் தக்கமுறையில் விளக்கிக் காண்பித்தார்கள். பிறகு மௌலவீ சையித் முர்தஜா சாஹிப் பஹாதுர் அவர்கள் பேசுகையில், அல்லாவுக்குகந்த மார்க்கம் இஸ்லாமே என்றும், அவ்விஸ்லாத்தை உன்னத நிலைமைக்குக் கொண்டுவர எம்பெருமானுர் (ஸல்.) அவர்களும், சஹாபாக்களும், தாபியீன்களும், தபஅத்தாபியீன்களும், பெரியார்களும் எடுத்துக்கொண்ட முயற்சிகளை நன்கு விளக்கிக் காண்பித்து, இவ்விஸ்லாத்தைக் கெடுக்க காதியானிகளும் தாவூதிகளும் இதுகாலை முற்பட்டிருப்பதைக் கண்டித்துப் பேசினுர்கள்.

பின்னர் லுஹர் தொழுகை, இடைவேளை போஜனம் இவைகளுக்குப் பின் மகாநாடு ஆரம்பமாயிற்று. மௌலானு மௌலவீ முப்தி ஷேக் ஆதம் ஹஸ்ரத் அவர்கள், இஸ்லாத்தின் கொள்கைகள், இஸ்லாத்தின் சட்டதிட்டங்கள் என்பது பற்றி பேசுகையில் 'ஈமான்' என்பதன் மகத்துவத்தைப் பற்றி சவிஸ்தாரமாய் விளக்கிக் கூறினுர்கள். ஜனுப் மௌலவீ S. K. முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள் 'இஸ்லாத்தின் உண்மை சமத்துவம்' என்பது பற்றி அரிய சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்குங்கால், தாவூதிய்யா கோஷ்டியைச் சேர்ந்த பேடியொருவன் "முஸ்லிம்காள்! கவனியுங்கள்" என்னும் தலைப்புள்ள துண்டுப் பிரசுரத்தைப் போட்டுவிட்டு ஒட்டம் பிடித்துவிட்டான். அப்பேடியை பலர் தேடிப்பார்த்தும் அவன் அகப்படவில்லை. அசத்தியப் பெயர்வழிகள் எந்த இடத்திலும் ஒளித்துக்கொண்டு தலைமறைவாக நோட்டீஸ் கொடுத்துவிட்டு ஓட்டம் பிடிப்பதே அவர்கள் வழக்கம். பின்னர் மௌலவீ முஹம்மது சயீத் சாஹிப் பாக்கவீ அவர்கள் பேசுகையில், நமது ஜில்லா வாசியான படித்தவரெனக் கூறிக்கொள்பவரான ஒரு பத்திரிகைக்கு ஆசிரியராகவுள்ள ஒருவர், புதிய கொள்கையை ஏற்படுத்தியிருக்கிருரென்று யான் கூறவில்லை. ஆனல் அவர் தீய- அநாகரீக- அசத்தியக் கொள்கையைப் பின்பற்றி வருகிறுர் என்றே கூறுகிறேன். எவரையும் நாங்கள் காபிராக்கத் தயாராகயில்லை; நீங்களும் காபிராக்கவேண்டாம்; ஆனல் தாவூதுசா எழுதி வைத்திருக்கிற எழுத்துக்களை களங்கமற்ற மனதுடன் படித்துப் பார்த்து நீங்களே அதன் தவறை உணர்ந்துகொள்ளுங்கள்; இஸ்லாம் மதமானது புத்திக்கொத்த மதமென்பதை நான் அங்கீகரிக்கிறேன்; என்றுலும் இஸ்லாம் மதச் சட்டங்களின் தத்துவமானது நம்முடைய புளியங்கொட்டை மூளைக்கு எட்டிவிட வேண்டுமெனக் கருதிவிடலாகாது என பல உதாரணங்களோடு எடுத்துக் கூறினுர்கள். மக்ரிப் தொழுகைக்காக மகாநாடு ஒத்தி வைக்கப்பட்டது.

ஸைபுல் இஸ்லாம் ஆசிரியர் மௌலானு அவர்கள், தங்கள் அலுவல்நிமித்தம் சேலத்திற்குப் பிரயாணமாகிவிட்டதால், ஆலீ ஜனுப் மௌலவீ அல்ஹாஜ் ச. அ. முஹம்மது அலீ சாஹிப் பாக்கவீ அவர்கள் தலைமை வகித்தார்கள். அதுபொழுது மௌலவீ ஷ. கு. முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் "சஹாபாக்களின் தியாகம்" என்பதுபற்றி சொற்பெருக்காற்றுங்கால், மகான்கள் தீனுல் இஸ்லாத்தை அரும்பாடுபட்டு உன்னத ஸ்திதிக்குக் கொண்டுவந்த வரலாறுகளை எடுத்துக் கூறி, இவ்வாறு தியாகஞ்செய்து வளர்த்த இஸ்லாத்தைக் கெடுக்க முற்பட்டிருப்பவர்களைத் தடுப்பது பொதுஜனங்களின்மீதுள்ள முக்கியக் கடமையாகுமெனக் கூறினுர்கள்.

பின்னர் தலைவரவர்கள், ஹஸ்ரத் மூஸா (அலை.) அவர்களுக்கு இறைவன் கடலைப் பிளக்கச்செய்து இஸ்ரவேலர்களைக் காப்பாற்றிய விபரத்தையும், மூஸாவின் ஊற்றுக் கண்களைப்பற்றியும் திருக்குர்ஆன் ஷரீபிலிருந்து விபரமாக எடுத்துக்கூறி பா. தா. ஜவாஹிருல்புர்கான் என்னும் நூலில் இதற்கு விரோதமாய் கூடார்த்தங்கள் செய்திருப்பதை விளக்கி, தாவூதுசாவின் இவ்வியாக்கியான உரை இஸ்லாத்தின் கொள்கைகட்கு மாறாக இருக்கிறதென்றும், நபிமார்களுக்கு நிகழ்வுற்ற முஃஜிஜாக்களை மறுப்பதாகயிருக்கிறதென்றும் விபரமாகக் கூறினார்கள். பின்னர் மௌலவீ முஹம்மது காஸிம் சாஹிப் பாக்கவீ அவர்கள் 'மரணத்திற்குப்பின் மரித்தவரின் நிலை' என்பது பற்றிப் பேசுங்கால், பா. தா. வின் குதர்க்க வாதங்களை தக்கவாறு விளக்கிக் காண்பித்தார்கள். பிறகு மௌலவீ S. S. முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் பாக்கவீ அவர்கள், "தாருல்இஸ்லாம் பத்திரிகையையும் அவரது இதர பிரசுரங்களையும் பஹிஷ்கரிப்பதுடன் இதரர்களும் அவைகளைப் படிக்காதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும்" என்னும் தீர்மானத்தை பிரரேபித்து சவிஸ்தாரமாய்ப் பேசினார்கள். இதனை மௌலவீ ஷ. கு முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் ஆமோதித்துப் பேச, தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

பின்னர் விருதுநகர் முஸ்லிம்கள் காதியானிப் பிரசாரத்தை தடை செய்வதற்காக 144-வது பிரிவின்கீழ் தடையுத்திரவு வாங்கியதைப் பாராட்டியும் அவ்வூர் சுன்னத்து வல்ஜமா அத்து முஸ்லிம்களின் வெற்றியைச் சிலாக்கித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்று தலைவரின் முடிவுரைக்குப்பின் இரவு 1-மணிக்கு மகாநாடு முடிவடைந்தது.

மறுநாள் நடவடிக்கை

11-8-33 வெள்ளிக்கிழமை ஜும்ஆவிற்குப் பின் மௌலானா மௌலவீ சையித் முர்தஜா சாஹிப் பஹாதுர் அவர்கள் தலைமையில் மகாநாடு ஆரம்பமாயிற்று. தலைவர் அவர்கள் அரபி மத்ரஸாவின் அவசியத்தை வற்புறுத்திக் கூறியபின், ஜனாப்களான மௌலானா மௌலவீ அல்ஹாஜ் ச. அ. முஹம்மது அலீ சாஹிப், மௌலவீ அம்ஜத் இப்ருஹீம் சாஹிப் ஆகியோர் காதியானி மத இயக்கத்தைப்பற்றி வெகு தெளிவாகப்பேசினார்கள். அதன்பின் சபை கலைந்தது. இம்மகா நாட்டு அனுபவத்திலிருந்து யுவர் உலகத்தைக்கைப்பற்ற பா. தா. செய்துவரும் சூழ்ச்சிகளெல்லாம் வெறும் ஹம்பக் என்றே நிதர்சனமாய் விட்டது.

விஜயபுரம்

11-8-33 இரவு 10-மணிக்கு அரபி மத்ரஸாவுக்கு எதிரில், ஆலீ ஜனாப் மௌலானா மௌலவீ சையித் முர்தஜா சாஹிப் பஹாதுர் M.L.A. அவர்கள் தலைமையின் கீழ் மகாநாடு ஆரம்பமாயிற்று. அதில் ஜனாப்களான மௌலவீ அல்ஹாஜ் ச. அ. முஹம்மது அலீ சாஹிப், மௌலவீ ஷ. கு. முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் மௌலவீ முஹம்மது காஸிம் சாஹிப், மௌலவீ நா. அப்துல்வஹ்ஹாப் சாஹிப் ஆகியவர்கள் இஸ்லாத்தின் மேன்மையையும், காதியானி இயக்கம் ஆரம்பித்த வரலாறுகளையும், சென்னை தாருல் இஸ்லாம் ஆசிரியரான நறையூர் பா. தாவூதுசாவின் பிரசாரப்போக்கையும், அவரது தூர்க்கொள்கைகளையும் கண்டித்துப் பேசினர். இதற்கிடையில் மு. முஹம்மது தாவூத் என்பார் தமக்கு சில விஷயங்களில் ஆக்ஷேபனை யிருப்பதாகக் கூறவே, மகா நாட்டின் முடிவில் அவ்வாக்ஷேபனைகளுக்கு மௌலவீ ஷ. கு. முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்களால் தக்க பதில் கூறப்பட்டது. பிறகு ஜனாப் S. S. முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் பாக்கவீ அவர்கள் பேசுகையில், பா. தா. தாம் காதியானியுமல்ல, அஹ்மதியுமல்லவென்று கூறிக்கொண்டாலும் அவர் அஹ்மதிதான் என லாகூர் அஹ்மதிய்யா அஞ்சுமன் காரியதரிசி எழுதியிருந்த கடிதத்தின் நகலைச் சபையினருக்குப் படித்துக் காட்டி அஹ்மதிய்ய சங்கத் தலைவரான முஹம்மத் அலீ, எம். ஏ., எல். எல். பீ., எழுதிய ஆங்கிலக் குர்ஆனுக்கு தமிழில் உரை எழுதும் பொறுப்பை தாம் ஏற்றுக்கொண்டிருப்பதாகவும், வேறு எவரும் மொழிபெயர்க்க முன் வந்தால் காபிரைட் சட்டப்படி கோர்ட்டில் தாவாச்செய்து விடுவேன் என்றும் பா. தா. தமது தத்துவ இஸ்லாத்தில் அறிக்கை வெளியிட்டிருப்பதை வாசித்துக் காட்டி, அவர் அஹ்மதிதானென்றும், அவர் அஹ்மதியப் பிரசாரந்தான் செய்து வருகிறு

ரென்றும் தக்க விதமாக விளக்கிக் கூறினர்கள். பிறகு மௌலவீ அல்ஹாஜ் ச. அ. முஹம்மது அலீ சாஹிப் பாக்கவீ அவர்கள், பா. தா. சம்பளம் பெற்று லண்டன் சென்று பிரசாரம் செய்த விபரத்தைக் கூறினர்கள். கனம் அக்கிராசனரவர்களின் முடிவுரைக்குப் பின் இரவு $3\frac{1}{2}$-மணிக்கு துஆ ஓதப்பெற்று கூட்டம் கலைந்தது.

அடியக்கமங்கலம்

12-8-33 சனிக்கிழமை காலை 10-மணிக்கு முஸ்லிம் பொதுஜன மகாநாடு ஆரம்பமாயிற்று. ஆரம்பத்தில் ஹாஜீ முஹம்மது கவ்துசாஹிப் அவர்களால் குர்ஆன் ஷரீபின் சில ஆயத்துகள் ஓதப்பெற்றபின், குத்பாப் பள்ளி பிரதிநிதி சபையாராலும், நூருல் இஸ்லாம் சொஸைட்டி சார்பாகவும், அஹ்மதுல் இஸ்லாம் மௌலிது சங்க சார்பாகவும், இஸ்லாமிய முன்னேற்ற சங்க சார்பாகவும், குத்பாப்பள்ளி பேஷ் இமாம்கள் சார்பாகவும் 5 உபசாரப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டன. அப்பத்திரங்களுக்கு தலைவர் தங்கள் சார்பாகவும், மௌலவீ அல்ஹாஜ் ச. அ. முஹம்மது அலீ சாஹிப் அவர்கள் காதியானி சம்ஹாரிகளான உலமாக்கள் சார்பாகவும் பதில் கூறினர்கள். பிறகு தலைவர் முகவுரைப் பிரசங்கந்கத்தில், "சுன்னத்துவல் ஜமாஅத்து" என்பது இன்னது, அஹ்மதியாக் கொள்கையின் கெடுதி இதுவாகும், இக் கொள்கையை ஆரம்பத்திலே ஒழிக்க முன் வராதிருந்தது உலமாக்களின் தவறாகும் என்று தக்க முறையில் விளக்கிக் காண்பித்தார்கள். ஜனாப் மௌலவீ ஷ. கு. முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள் சத்தியப் பிரசாரஞ் செய்ய வேண்டிய அவசியத்தைப்பற்றி சுமார் 1 மணி நேரம்வரை பிரசங்கமாரி பொழிந்தார்கள். மௌலவீ அல்ஹாஜ் ச. அ. முஹம்மது அலீசாஹிப் பாக்கவீ அவர்கள் 'மரித்தவர் நிலை' என்பதுபற்றி சொற்பெருக்காற்றுங்கால், மரித்தவர்களுக்கு ஸ்தூல சரீரத்துடன் தான்மறு உலக வாழ்க்கை ஏற்படுமென்று குர்ஆன் ஹதீதுகளின் தக்க மேற்கோளுடன் விளக்கிக் காண்பித்தார்கள். அது பொழுது தா. இ. அபிமானிகளிற் சிலர், சில கேள்வி கேட்டனர். அதற்குத் தலைவராய வீரகேஸரி அவர்கள், அஹ்மதியர்களை காபிர்களென்று இந்துஸ்தான மென்ன? எகிப்து என்ன? மக்கா மதீனாவிலுள்ள உலமாக்களுங்கூட பத்வாக் கொடுத்திருக்கின்றனர். சுருங்கச் சொல்லுமிடத்து உலகத்திலுள்ள சகல உலமாக்களும் அஹ்மதியர்கள் காபிர்களென்றே பத்வாச் செய்திருக்கின்றார்கள் என்பதை எடுத்து விளக்கி, பா. தா. காஜா கமாலுத்தீனுடன் வோக்கிங் சென்று வந்த வரலாறுகளை விளக்கினர்கள். மௌலவீ அல்ஹாஜ் ச. அ. முஹம்மது அலீ சாஹிப் பாக்கவீ அவர்கள். பா. தா. அஹ்மதிதான் என்பதை அவருடைய எழுத்துக்களிலிருந்தே நிரூபித்துக் காட்டினர்கள். மௌலவீ ஷ. கு. முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள், ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் உயிருடனிருக்கிறார்கள் என்பது பற்றி பேசுகையில், "வானத்தில் ஒட்டையில்லையே எங்கிருந்து வானத்திற்குச் செல்லக்கூடும்" என ஒருசிலர் சந்தேகிக்கின்றனர்; நாம் உண்மை விசுவாசிகளாகயிருந்தால் இத்தகைய சந்தேகத்திற்கே இடமில்லை என பல ஆதாரங்களுடன் பேசினர்கள். பின்னர் அசர்தொழுகைக்குப் பின் மௌலவீ அப்துல் மஜீது சாஹிப் அவர்கள், ஹஸ்ரத் ஈஸா (அலி.) அவர்களின் மாதாவான நாயகி மர்யம் அவர்களின் பரிசுத்தத் தன்மையையும் மேன்மையையும் எடுத்துக்கூறிப் பேசுகையில், தாவூத்சாவால்வெளியிடப்பட்டுள்ள 'இயேசுவின் இரகசியம்' என்ற நூலின் 50-ம் பக்கத்திலிருந்து சில வசனங்களைப் படித்துக் காட்டி, "பீபி மர்யம் அவர்கள் யூஸுப் நஜ்ஜாருடன் திரேக சம்பந்தம் வைத்திருந்ததால் ஹஸ்ரத் (அலை.) அவர்களை ஜனித்தார்கள்" என்று கூறப்பட்டிருப்பதை விளக்கிக் காட்டினர்கள். (நஊதுபில்லாஹ்)

பின்னர் தலைவரவர்கள், அரபி தெரியாதவர்கள், திருக் குர்ஆனுக்கு வியாக்கியானஞ் செய்யப் புகுவது எவ்வாறிருக்கிறதென்றால், ஆங்கிலக் கல்விச் சாலையையே அறியாத ஒருவன் ஆங்கில பாஷையில் எழுதப்பெற்ற நூலைத் தமிழில் மொழிபெயர்க்க முன்வருவது போலாகயிருக்கிறது; அவ்வாறு ஒரு மனிதன் செய்வானாகில் அவனை யாவரும் முழு பயித்தியகாரனென்று மதிக்கமாட்டீர்களா? அதுபோலவே அரபியை ஒரு சிறிதும் அறியாத தாவூத்சா திருக்குர்ஆனுக்கு வியாக்கியானம் செய்ய முன் வந்தது பெருந்

தவரல்லவா? வழிகேட்டில் கொணர்ந்து சேர்த்துவிடு மல்லவா? என்பதை சிந்தனை செய்து பாருங்கள்! எனக்கூறி முடித்தார்கள். பின்னர் இரவு $10\frac{1}{2}$-மணிக்கு பள்ளிவாசலின் சதுக்கத்தில் 'வஅஜ் மஜ்லிஸ்' ஆரம்பமாயிற்று. ஏராளமான ஆண்களும் பெண்களும் குழும்பியிருந்தனர். பெண்களுக்குத் தனியே பிரத்தியேகமான இட வசதிசெய்து வைக்கப்பட்டிருந்தது. மௌலவீ S. K. முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்களும், மௌலவீ அம்ஜத் இப்ருஹிம் சாஹிபும் சொற்பெருக்காற்ற வேண்டுமென்று ஊர் தலைவர்கள் வேண்டிக்கொண்டதற்கிணங்க, இரு மகான்களும் சக்கரைப் பந்தலில் தேன்மாரி சொரிந்தாப்போல் பிரசங்கம் புரிந்தபின் இரவு 1-மணிக்கு கூட்டம் கலைந்தது.

காதியானி-அஹ்மதிய பார்ட்டிக்கு தஞ்சை ஜில்லாவில் உறைவிடமெனக் கருதும்படி பத்திரிகையில் பினாத்தி படாடோபம் செய்யப்பெற்றிருந்த அடியற்கைமங்கையானது இம் மகாநாடு கூட்டப்பட்டதன் மூலம், காதியானி அஹ்மதியர்களை ஆதரிப்பவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய நாலைந்து நபருக்குமேல் இல்லாத ஊரென நன்கு புலனாய் விட்டது. இந்நாலைந்து பேரும் தாவூத்சாவைப்பற்றி படாடோபமாய்ப் பேசிவந்ததால், தாருல் இஸ்லாமும், தாவூத்சாவும் மார்க்கத்திற்குழைப்பவர்களென்று கருதியிருந்தவர்களுக்கு பா. தா. வின் குட்டு வெளிப்பட்டு பொது ஜனங்கள் உண்மையை அறிந்துகொள்ள ஹேதுவேற்பட்டுவிட்டது.

மதுக்கூர்

13-8-33 மாலை $9\frac{1}{2}$ மணிக்கு மௌலானா மௌலவீ சையித் முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள் தலைமையின்கீழ் மகாநாடு ஆரம்பமாயிற்று. ஜனாப் மௌலவீ இஸ்ஹாக் சாஹிப் நூரிய்யீ கிராஅத்ஓதியபின் இவ்வூரிலுள்ள இரு சங்கத்தாரும் தலைவர் அவர்களுக்கும், உலமாக்களுக்கும் உபசாரப் பத்திரங்கள் படித்துக் கொடுத்தார்கள். தலைவரின் முகவுரைக்குப்பின், மௌலவீ ஷ. கு. முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள் சத்தியப் பிரசாரம் என்பதுபற்றி பேசுகையில், இதுகாலை நம் சத்திய இஸ்லாத்தில் காதியானி அஹ்மதிகள் தோன்றி யுக்திக்குச் சரியாய் மார்க்கத்தை எடுத்துக் காட்டுவதாகக் கூறி, மார்க்கத்தின் அடிப்படையான கொள்கைகளையே மறுத்து நூல்கள் இயற்றி வருவதை விளக்கி அந்த தீயக்கொள்கைகளை பரத்த தாருல் இஸ்லாம் ஆசிரியர் பா. தா. செய்துவரும் பஹீரதப் பிரயாசையையும், சூழ்ச்சிகளையும் விளக்கி சுமார் $1\frac{1}{2}$ மணி நேரம்வரை பேசினார்கள். பின்னர் மௌலவீ அல்ஹாஜ் ச. அ. முஹம்மது அலீ சாஹிப் பாக்கவீ அவர்கள் 'மரித்தவரின் மறு உலக வாழ்க்கை' என்பதுபற்றி திருக்குர்ஆன் ஹதீதுகளிலிருந்து தக்க மேற்கோள்கள் எடுத்துக் காட்டிப் பேசினார்கள். இரவு $12\frac{1}{2}$ மணிக்கு கூட்டம் கலைந்தது.

மறுநாள் இரவு $9\frac{1}{2}$ மணிக்கு உள்ளூர் மௌலவிகளும் பெரியார்களும் புடைசூழ, மௌலானாக்கள் பைத்து முழக்கத்துடன் மகாநாடு கூடுமிடத்திற்கு அழைத்துவரப்பட்டார்கள். மௌலானா மௌலவீ சையித் முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள் தலைமை வகித்தார்கள். தலைவரின் முகவுரைக்குப் பின் மௌலவீ ஷ. கு. முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள், "ஹஸ்ரத் ஈஸா (அலை.) சிலுவையி லறைபடவுமில்லை, யூதர்களால் கொல்லப்படவுமில்லை, சாதாரண மரணத்தினால் மரிக்கவுமில்லை" என்னும் விஷயங்களை திருக்குர்ஆனிலிருந்தே தக்க ஆதாரங்களுடன் விளக்கிப் பேசினார்கள். ஜனாப்களான மௌலவீ இஸ்ஹாக் சாஹிப் நூரிய்யும், மௌலவீ அப்துல் வஹ்ஹாப் சாஹிப் பாஜில நூரிய்யும் இதனை ஆதரித்துப் பேசுகையில், காதியானி தாவூதிகள் கூறுவது சுத்தப் பொய்யாகவும் வழிகெட்ட கொள்கையாகவு மிருக்கிறதென்றும், அதனை எவரும் நம்பவும் பின்பற்றவும் கூடாதென்றும்வெகு அழுத்தமாகப் பேசினர். மௌலவீ S. S. முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் பாக்கவீ அவர்கள், தா. இ ஆசிரியர் பிதற்றித் திரியும் சில பொய்க்கூற்றுக்களை மறுத்து தக்க ஆதாரத்துடன் பேசினார்கள். பின்னர் ஜனாப்களான அபுல்ஹஸன் சாஹிபும், பஜ்லுத்தீன் சாஹிபும் முஃஜிஸாக்களென்னும் அற்புத நிகழ்ச்சிகளின் மகுத்துவங்களை எடுத்து விளக்கி, முஃஜிஸாக்களை மறுத்துவரும் பா. தா. வின் மாயவலையில் சிக்கிக்கொள்ள வேண்டாமென்று சபையினரைக் கேட்டுக் கொண்டார்கள். ஜனாப் மௌலவீ அல்ஹாஜ்

ச. அ. முஹம்மது அலீ சாஹிப் பாக்கவீ அவர்கள், இஸ்ரவேலர்கள் கடலைக் கடந்து சென்ற வரலாற்றையும், அவர்களுக்காக அல்லாஹ்த ஆலா கடலைப் பிளக்கச் செய்ததையும் கூறி, பா. தா. தமது ஜவாஹிருல் புர்கானில் அதற்குச் செய்திருக்கும் குடார்த்த வியாக்கியானங்களை எடுத்துவிக்கிக் கூறினார்கள். தலைவர் அவர்கள் முடிவுரை கூறியபின் ஜனாப் மௌலவீ அப்துல் காதிர் சாஹிப் நூரிய்யி அவர்களால் வந்தனங்கூறப்பட்டு இரவு $2\frac{1}{4}$ மணிக்கு கூட்டம் முடிவுபெற்றது.

மன்னார்குடி

15-8-33 செவ்வாய்க்கிழமை இரவு $9\frac{1}{2}$ - மணிக்கு இவ்வூர் டவுன் மேல ராஜவீதி பள்ளிவாசலுக் கெதிரில் முஸ்லிம்களின் மா பெரும் மகாநாடு ஆரம்பமாயிற்று. மாஜி முன்ஸிபல் சேர்மெனும், ஹிம்மத்துல் இஸ்லாம் கமிட்டியின் மாஜித் தலைவரும் பிரபல்ய வியாபாரியுமாகிய ஆலீ ஜனாப் முஹம்மது அலீ ருவுத்தர் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். தலைவரின் முன்னுரைக்குப் பின் 'சத்தியப் பிரசாரம்' என்பதுபற்றி மௌலவீ ஷ. கு. முஹம்மது ஷர்புத்தீன் சாஹிபும், மௌலானா மௌலவீ செய்யித் முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்களும் தக்க முறையில் சொற்பெருக்காற்றினார்கள். ஜனாப் மௌலவீ S. S. முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் பாக்கவீ அவர்கள் சிலுவைப் பிரச்சினையைப்பற்றியும் "மரணத்திற்குப்பின் மரித்தவர் நிலை" என்பதுபற்றி மௌலவீ அல்ஹாஜ் ச. அ. முஹம்மது அலீ சாஹிப் பாக்கவீ அவர்களும், பீபி மர்யமின் பரிசுத்தத்தைப்பற்றி மௌலவீ அப்துல் மஜீது சாஹிபும் பிரசங்கம் புரிந்தபின் இரவு 2-மணிக்கு தலைவரின் முடிவுரைக்குப்பின் மகாநாடு இனிது முற்றுபெற்றது.

இவ்வூருக்குச் சத்தியப் பிரசாரகர்கள் வந்துவிட்டதையும், மகாநாடு நடைபெறப் போவதாகத் துண்டுப் பிரசுரம் வழங்கப் பட்டு வருவதையும் கண்ட பாவலர் கோஷ்டியினர், பதைபதைத்தனர்; துடிதுடித்தனர்; மட்டிலாய் பிரயாசைகளோடு பலவாறான சூழ்ச்சிகள் புரிந்து பார்த்தனர்; கடைசியில் தங்கள் மனோரதம் பலியா தென்பதைக் கண்டு மௌனவிரதம் பூண்டு கொண்டனர். என்னே இக்குழாத்தினரின் சூழ்ச்சி! முடிவில் கூட்டத்திற்கு வந்திருந்தோர் யாவரும் தாவூதின் பிரசாரத்தின் வழி கெட்ட போக்கை உணர்ந்து, பாவலர் கோஷ்டியினர், தாவூத்சாவின் பொய்ப் பிரசாரத்தில் வீழ்ந்துழல்வதைப் பற்றி வருந்தி மௌலானாக்களுக்கும்— ஹிஸ்புல்லாக்களுக்கும் நன்றி செலுத்திச் சென்றது பாராட்டத்தக்க விஷயமாகும். சத்தியம் ஜொலிக்க! அசத்தியம் வீச்சியடைய!! சத்தியத்திற்கு ஜே!!!

N.B.—ஒவ்வொரு இடங்களிலும் நடைபெற்ற மகாநாடுகள் சம்பந்தமான முழுவிபரங்களடங்கிய நிருபங்கள் நமக்குக் கிடைத்திருந்தும், இடமின்மையைக் கருதி சுருக்கத்தைமட்டும் பிரசுரிக்க நேர்ந்தமைக்கு மிகமிக வருந்துகின்றோம். ஆகவே நிருபங்கள் விடுத்தனுப்பிய அன்பர்களும் சங்க அங்கத்தினர்களும் பொதுஜமா அத்தார்களும் இதனை பொருட்படுத்த மாட்டார்களென்று எதிர்பார்க்கிறோம். (ப—ர்.)

தஞ்சை ஜில்லாவில் யான் கண்ட காக்ஷி

(தா. இ. அபிமானி வரைவது)

சென்னை தாருல் இஸ்லாம் ஆசிரியர்கள் இவ்வருட மீலாத்ஷரீபுக்கு தஞ்சை ஜில்லாவின் பல ஊர்களுக்கும் வீரத் பிரசங்கம் புரிய அழைக்கப் பட்டிருந்தார்கள். அவ்வழைப்புக்கிணங்க அவர்களும் பலயிடங்களுக்கும் சென்று பிரசங்கம் புரிந்தார்கள். அவர்களை அழைத்த ஒவ்வொருசங்கத்தாரும் மிக்க ஆடம்பரமாகவே வரவேற்றனர்; புஷ்ப ஹாரஞ் சூட்டினர்; உபசாரப்பத்திரம் படித்துக்கொடுத்தனர். கூட்டங்கள் அவ்வளவு பிரமாதமானதாக யில்லாதபோதிலும் சுமாரான கூட்டமென்பதில் சந்தேகமில்லை. தா. இ. அபிமானிகளில் சிலர், ஆவேசங் கொண்டவர்களே போன்று அவர்களை வர

வேற்று உபசரிப்பதற்காக வென்றே ஊர் ஊராய் அலைந்ததும், அவ்வவ்விடங்களில் பண வசூல் செய்ததும், வாலிப உலகமே தா. இ. வுக்குக் கீழ்படிந்துவிட்டதோ எனக் கருதிக் கொள்ளுமாறு என்னை சந்தேகத்திலாகிவிட்டது. இன்னோரின் பஹீரதப் பிரயத்தனத்தினால் கூடிய கூட்டங்களைக் கண்ட தா. இ. ஆசிரியர் தமது மதுரை அபிமானியுள்பட பல வாலிபர்களைப் பத்திரிகையில் படாடோபமாய் எழுதவேண்டியதாயிற்று. அக் கோஷ்டியார் கூட்டங்களில் கண்ட காக்ஷி மெய்யேயாயினும் அவர்களின் நினைப்புச் சரியில்லை என்பது பின்னர் யான் கண்ட கண் கொள்ளாக் காக்ஷிமூலம் நன்கு புலனாய் விட்டது.

தா. இ. ஆசிரியர்களுக்குப் போட்டியாக உலமாக்கள் மகாநாடுகள் நடத்தப்போகிறார்களென்று யான் கேள்விப்பட்டபோது என் மனதில் சற்று வருத்தந்தான் தோன்றிற்று. எனவே, இவர்கள் பா. தா. வையும் அவரது கொள்கைகளையும் அநியாயமாய் திட்டப்போகிறார்களே என்று நினைத்து விசனமுற்றேனாகையால், இந்த உலமாக்கள் தா. இ. வை எவ்வளவு தூரம் தூற்றுகின்றனர்; ஏசுகின்றனர்; பேசுகின்றனர் என்பதை அறியவேண்டுமென்னும் அவாவோடு அவர்களின் அபிமானிகள்போல் நடித்து, அவர்களுடன் சேர்ந்துகொண்டு அவர்கள் சென்றவிடங்களுக்கெல்லாம் யானும் சென்றேன். அவர்கள் பிரசாரம் 4-8-33-ல் முஹம்மத் பந்தரில் ஆரம்பமாயிற்று. போட்டி மகாநாடு என யான் நினைத்திருந்ததற்கு மாறாக ஒரு சங்கத்தின் ஆண்டு பூர்த்திவிழா மகாநாடாகவும், அம்மகாநாட்டிற்கு அநேக உலமாக்களும் ஜில்லாவின் பிரபலஸ்தர்களும் அழைக்கப்பட்டிருப்பதையுங் கண்டு முதலெடுப்பிலேயே என் எண்ணம் பொய்யாய் விட்டதைக் கண்டு வருந்தினேன். மகாநாட்டிற்காக அமைக்கப்பட்டிருந்த பந்தல் மிக்க விசாலம் பொருந்தியதாக இருந்ததால், அக்கொட்டகை நிரம்ப ஜனங்கள் வந்து கூடுவார்களா என்று முதலில் ஐயமடைந்தேனாயினும், பிறகு பார்க்குங்கால் அக்கொட்டகையும் நிரம்பி வெளியிலும் ஏராளமான ஜனங்கள் கூடியிருப்பதைக் கண்டேன். இக்காக்ஷியை யான் பார்த்தவுடன் யுவர் வுலகம் தா. இ. வுக்குக் கட்டுப்பட்டிருக்கிறதென யான் நினைத்தது தவறு என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். ஒருவர் பிரசங்கம் புரியவந்தால் அபிமானியோ அபிமானியல்லாதவரோ எல்லோரும்தான் வருவார்களென்பதையும், பிரசங்கம் கேட்கவரும் யாவரும் அபிமானிகள்தாம் என நினைப்பது தவறு என்பதையும் உணர்ந்தேன்.

பின்னர் உலமாக்களின் பிரசங்கங்கள் நிகழ்ந்தன. சங்கத்தின் மகாநாடாகையால் வழக்கப்படி வரவேற்புத் தலைவர், மகாநாட்டுத் தலைவர் பிரசங்கங்கள், சங்க அறிக்கை ரிபோர்ட்டு முதலியவைகள் நிகழ்பெற்றன. அப்பால் உலமாக்கள் நம் சமுகத்தினரின் முக்கிய விஷயங்களைப்பற்றி பொதுவாகவும், இஸ்லாம் தோன்றிய வரலாறுகளையும் ஆரம்ப காலத்தில் இஸ்லாத்திற்காக முன்னோர்கள் செய்த தியாகங்களையும் பற்றிச் சிறப்பாகவும் பிரசங்கம் புரிந்தார்கள். அம்மகாநாட்டிலும் அதன்பின் துயர்படியாய்—இராப்பகலாய் 15 தினங்கள் வரை தஞ்சை ஜில்லாவின் பற்பல இடங்களிலும் நடைபெற்ற மகாநாடுகளிலும், இஸ்லாத்தில் புதுக்கொள்கைவந்து நுழைந்து கொண்ட விதத்தையும், பற்பல வகுப்புகள் இஸ்லாத்தில் ஏற்பட்ட வரலாறுகளையும் எடுத்துக் கூறி, பஞ்சாப் காத்யானில் சமீபத்தில் ஏற்பட்ட காதியானி மதத்தையும், அதனை ஸ்தாபித்தவர் செய்த அட்டகாசங்களையும் விளக்கமாய் எடுத்துக் கூறினர். இப்புதிய கொள்கை நம்நாட்டில் எவ்விதம் பரவிவருகிறது, அதனைப் பிரசாரஞ் செய்பவர் யார்? என்ற விபரத்தையும் கூறி, இப்புதிய கொள்கைக்காரர்கள் எதெதை மறுக்கின்றனர் என்பதை, அக்கொள்கைக்காரர்களால் வரையப்பெற்றிருக்கும் புத்தகங்களிலிருந்தும் பத்திரிகைகளிலிருந்தும் படித்துக் காட்டினர். பின்னர் இப்புது கொள்கைக்காரர்களின் கூற்றுக்கள் சன்மார்க்கத்திற்கு முரணானவை, இக்கூற்றுகளுக்கு தக்க ஆதாரங்கள் கிடையாவென்பதை திருக்குர் ஆன் வாக்கியங்களிலிருந்தே நிரூபித்துக் காட்டினர். பா. தா. சொல்வதுதான் சரி, உலமாக்கள் கூறுவதற்கு குர் ஆன் ஹதீதுகளில் ஆதாரங்கிடையாதென மனப்பால் குடித்துக்கொண்டிருந்த எனக்கு இந்த உலமாக்கள் திருக் குர்ஆனை கையில் வைத்துக் கொண்டு பா. தா. எழுதியுள்ள ஜவாஹிருல் புர்கானிலுள்ள ஒவ்வொரு

தவறுகளையும் எடுத்துக்கூறி அவைகளுக்கு திருக்குர் ஆனின் வசனங்களைக் கொண்டே மறுப்புக்கூறி வந்ததானது, என்னை பிரமிக்கச்செய்துவிட்டது. ஆகவே உலமாக்கள் குர்ஆன் ஹதீதுகளைப் புரம்பே தள்ளிவிட்டு தங்கள் பௌராணிகக் குப்பைகளையே பிரசாரஞ் செய்து விடாப்பிடியாய் போதித்து வருகின்றார்களென்று பா. தா. கூறுவது சுத்தத்தவறு; உலமாக்கள் கூறுவது தான் சத்தியமென்பதை நன்கு தெரிந்து கொண்டேன். இவ்வாறு உலமாக்கள் பிரசங்கம் புரியுங்கால், தா. இ. அபிமானிகள் மனம் பட்டபாடு சொல்லத்தரமன்று. தாங்கள் கொண்டிருந்த எண்ணத்திற்கு மாறாக, உலமாக்கள் திருக்குர்ஆனைக்கையில் வைத்துக்கொண்டு கூறுவதைப் பார்க்கும்போது, உலமாக்கள் பொறாமைக்காரர்கள், குர்ஆன் ஹதீதுகளைப் புரக்கணித்துவிட்டு சுயமேகதைகள் கூறுபவர்கள் என்று நினைத்து மனப்பால் குடித்துக் கொண்டிருந்த தெல்லாம் மண்ணாய்ப்போய் விட்டதைக் கண்டு கொண்டார்கள். தவிர உலமாக்களிடம் எதிர்த்துப் பேசவோ அவர்களைக் கேள்விகேட்கவோ இடமில்லாமையைக் கண்டு, தாங்கள் கொண்ட கொள்கை தவறென்பதை சில யுவர்கள் உணர்ந்து கொண்டாலும் தங்கள் தவறை திடீரென ஒப்புக்கொண்டு சத்தியத்திற்கு ஐக்கியப்பட வெட்கித்து மௌனம் சாதிக்க முற்படுவதையுங் கண்டேன்.

தா. இ. அபிமானியல்லாத பொது ஜனங்கள், உலமாக்களின் பிரசங்கத் தோரணையையும் அவர்கள் எடுத்துக் காட்டும் ஆதாரத்தின் பலத்தையும் நோட்டமிட்டு, தா. இ. வின் தீய கொள்கையால் சன்மார்க்கத்திற்கு ஊறு வந்து விடுமே, இக்கொள்கைகளைப் பரவவிடாது தடுப்பது நமது கடமையல்லவா! இவ்வளவு காலமாக தா. இ. பத்திரிகையின் போக்கை கவனியாது இருந்துவிட்டது மார்க்கத்தில் பெரும் ஆபத்துக்கல்லவோ இடமாய்விட்டது எனக் கூறி வருந்துபவராயினர். தவிர, உலமாக்களின் திருக்கூட்டம் ஆங்காங்கு செல்லுங்கால், தாவூதுசாவை வாய்கொண்டமட்டும் திட்டுவர், பேசுவர், ஏசுவர் என தப்பாக சிலர் நினைத்துக் கொண்டு சில ஊர்களில் யுவர்களின் தூண்டுதலின்மீது "யாரையும் தாக்கிப் பேசவேண்டாம்" என உலமாக்களை வினயமாய்க் கேட்டுக் கொண்டனர். ஆனால் உலமாக்களின் அரும்பிரசங்கங்களைக் கேட்டபின் இம்மாதிரி குற்றங்களையும் தவறுகளையும் பஹிரங்கமாய் தக்க ஆதாரத்தோடு எடுத்துக் காண்பிப்பதை யாரும் ஆக்ஷேபிக்க மாட்டார்களே, விஷயத்தை யுணராமலன்றோ 'ஒருவரையும் தாக்கவேண்டாம்' எனக் கேட்டுக்கொண்டோம் என்று வருந்தியதுடன் வெளிப்படையாக தங்கள் வருத்தத்தை அறிவிக்கவும் செய்தார்கள்.

பிரசாரஞ் செய்வதற்குப் புறப்பட்டிருக்கும் பெரியார்கள், பல சங்கங்களின் மகாநாடுகளுக்குச் சென்று அச்சங்க சம்பந்தமாக தக்க சொற்பெருக்காற்றியதுமன்றி அவ்வூரைப் பொறுத்த பொதுக் காரியங்களிலும் கவனஞ் செலுத்தினர். முஹம்மது பந்தரில் வெகுநாளாய் இரண்டு தலைவர்களுக்கிடையில் ஏற்பட்டிருந்த மனஸ்தாபத்தைப் போக்கி ஒற்றுமையை நிலைநாட்டினர். இதனால் அவ்வூர் பொதுக் காரியங்கள் தக்க முறையில் நடைபெறுவதற்கு ஹேதுண்டாய் விட்டது; ஆயிரக்கணக்கான ரூபாய் செலவில் 15-வருட காலமாய் நடைபெற்று வந்த வம்பு வழக்குகள் யாவற்றும் ஒழிந்துபோவதற்கு ஹேதுவும் ஏற்பட்டுவிட்டது. உலமாக்களும் தலைவர்களும் அங்கு திரளாகக்கூடி இவ்வாறான மார்க்கப் பிரசங்கம் புரிந்திராவிடில் இந்த சமாதானம் ஏற்பட்டிராதென திண்ணமாய்க் கூறுவேன். தஞ்சாவூரில் மூன்று பெயர்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவிக் கொண்டார்கள்.

கூத்தானல்லூர் மகா நாட்டிலும் முறையே பிரசங்கங்கள் புரியப்பட்டன. ஆனால் இவ்வூரில் குறிப்பிட்ட ஒரு சங்கத்தின் மூலம் மகாநாடு நடைபெறாததால், சன்மார்க்க உபன்னியாசமே முதல்முதலாக ஆரம்பிக்கப்பட்டது. மகாநாடு நடைபெறுங்கால் மன்னார்குடி பாவலர் முஹம்மது யூசுப் என்பவர் தாம் பிரசங்கம்புரிய இடமளிக்கவேண்டுமென வேண்டிக் கொண்டார். உலமாக்கள் புரியும் பிரசங்கத்தில், தா. இ. ஆசிரியர் இழைத்த தவறுகளை அவருடைய நூற்களிலிருந்தும் பத்திரிகைகளிலிருந்தும் எடுத்துக் காண்பிக்கப்படும் விஷயங்களில் ஏதாகிலும் ஆக்ஷேபனை இருந்தால் அவைகளைக்கூற இடமளிப்பதாகச் சொல்லப்பட்டது. அதற்குப் பாவலர் பின்வாங்கிக் கொண்டு தமக்குப்பிர

சங்கம் புரிய இடமளிக்கவில்லை எனப்பிதற்றுவதும், புலம்பிக் கொண்டலைவதும், உண்மைக்கு மாறாக விஷயத்தைத் திரித்துப் புரட்டி கட்டுரை வரைவதும் பொருத்தமற்றதாக இருக்கிறது. அச்சபையில் இவர் நடந்துகொண்ட மாதிரியைக்கண்டு, இவர்மீது சற்றும் அனுதாபமுள்ளவர்களும் வெறுப்புற்றனரென்றால், இதுவிஷயமாய் அதிகம் எழுதவும் வேண்டுமோ? இவரது தாவா உண்மையானதாக—நியாயமானதாக இருந்தால், அந்த மகாநாட்டில் இவருக்கு ஆதரவு காட்டுபவர் முன் வந்திருப்பரே! ஒருவரும் அவ்வாறு ஆதரிக்க முன்வராதிருந்து விட்டதே இவரது செய்கை கண்டிக்கத்தக்க தென்பதை எண்பித்துக் காட்டுகின்றது.

இனி புதக்குடி மகாநாட்டை கவனிப்போம் இங்குமகா நாட்டை நடத்தவிடலாகாதென தா. இ. அபிமானிகளாகிய சிலர், அவ்வூரிலுள்ள ஒரு சங்கத்தைத் தூண்டி விட்டனர். அச்சங்கத்தாருக்கும் புதக்குடியில் மகா நாட்டைக் கூட்டியவர்களுக்கும் சொந்த ஹோதாவில் ஏதோ மனஸ்தாபமிருந்து வந்ததால், முட்டுக்கட்டை போடப் பிரயத்தனப்பட்டார்கள். ஆனால் அது பயனடையாது மகாநாடு நடக்க ஆரம்பிக்கவே, மகாநாட்டுத் தலைவர் அவர்களிடஞ்சென்று தாவூதுசாவைத் தாக்க வேண்டாமென்று கேட்டுக் கொண்டனர். சங்கத்தின் 18-ம் வருடப் பூர்த்தி மகாநாடாகையால், முஹம்மது பந்தரில் நடைபெற்றதைப்போல் முதலில் சங்க நடவடிக்கையும், அப்பால் சமுகப் பிரசாரமும் பிறகு காதியானி அஹ்மதி தாவூதி கண்டனப் பிரசாரமும் நடைபெற்றது. அத்திக்கடையிலும் ஸ்பெஷலாய் தயாரிக்கப்பட்ட பந்தலிலேயே அதிவிமரிசையாய் மகாநாடு நடைபெற்றது. ஏற்கனவே இவ்வூரிலும் தாவூதுசாவின் அபிமானி ஒருவரின் முயற்சியால், களங்கமற்ற சில வாலிபர்கள் தாவூதுசா கோஷ்டியாரை அழைத்துப் பிரசங்கம் செய்ய ஏற்பாடு செய்துவிட்டனர். ஆனால் உலமாக்களின் மகாநாட்டை ஊர் தலைவர்களும் பிரமுகர்களும் வாலிபர்களும் கூட்டினர். ப. தா. சுமார் 1மணிநேரம்வரை இருந்துவிட்டுப் புறப்பட்டுவிட்டார்; உலமாக்களோ பிற்பகல் 3 மணிமுதல் இரவு 2 மணிவரை பிரசங்கம் புரிந்து பா. தா. இழைத்த தவறுகள் ஒவ்வொன்றையும் சாங்கோபாங்கமாய் எடுத்து விளக்கி, அதற்கு திருக்குர் ஆன் ஹதீதுகளிலிருந்து தக்க மேற்கோள்களையும் எண்பித்தனர். இறுதியாக "பா. தா. ஒரு மணிநேரம் பேசிவிட்டு ரூபாய்கள் வாங்கிக் கொண்டு போய்விட்டார்; உலமாக்களோ இராப் பகலாய்ப் பேசுகின்றனர்; இதனால் எத்தனையோ மஸ்அலாக்களைத் தெரிந்து கொள்ள ஹேதுவாயிருக்கிறது; பா. தா. வினுடைய பேச்சில் அவ்வாறு ஒன்றும் தெரிந்துகொள்ள முடியவில்லையே" என்று அநேகர் பேசிக்கொண்டார். பின்னர் பூதமங்கலம் மகாநாட்டில், தாவூதுசாவைப் புதக்குடியில் ஆதரித்துப் பேசியதாகக் கூறப்பட்ட ஒரு மௌலவீ, தாவூதின் கொள்கையைக் கண்டித்துப் பேசியது குறிப்பிடத்தக்கதாகும். இம்மௌலவீ சாஹிபை சில தா. இ. அபிமானிகள், தங்கள் பார்ட்டியைச் சார்ந்தவரென நினைத்திருந்தனர். அந்த எண்ணம் தவறென்பதை மௌலவீ அவர்கள் பூதமங்கலம் மகாநாட்டில் விளக்கிக் காட்டிவிட்டது விசேஷமாகும்.

கோடிக்கால்பாளையம் மகாநாட்டில் உலமாக்களுக்கு ராஜோபசாரம் நடைபெற்றதென்றே கூறவேண்டும். இம்மகாநாடு காங்கிரஸ் மகாநாடுகளே போன்று பல ஊர் வாசிகளையும், 30, 40 மௌலவிமார்களையும் கொண்டதாக இருந்தது. வழக்கம்போல் முதலில் பொது உபதேசமும், அப்பால்காதியானி சம்ஹாரப் பிரசாரமும் நடைபெற்றது. இம்மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க அன்று காலை சென்னையிலிருந்து விஜயஞ்செய்த ஸை. இ. ஆசிரியர் மௌலானா மௌலவீ S. S. அஹ்மத் சயீத் சாஹிப் அவர்கள் தங்களுக்குச் சேலத்தில் முக்கிய அலுவலிருப்பதாக தலைமைப் பிரசங்கத்தில் கூறியும், மகாநாட்டுக்கு முன் தினம் வெளியான ஸை. இ. வில், 10-ந் தேதி கோடிக்கால்பாளையம் மகாநாட்டில் தலைமை வகித்துவிட்டு அன்று மாலை புறப்பட்டுச் சேலம் செல்லவேண்டுமென வெளிப்படுத்தியும் இருந்ததை மறைத்து, தலைவர் ஓடிவிட்டார் என தா. இ. பிதற்றியிருப்பது எவ்வளவு தூரம் முட்டாள்தனமாக யிருக்கிறதென்பதை நேயர்களுணரக் கடவர். இவை அண்டப்புழுகென்பதிலைய்யமுளதோ? இம்மகாநாட்டின்போது மாலை 5 மணிக்கு தா. இ. அபிமானியான அனாமதேயப் பேர்

வழி ஒருவர் சில நோட்டீஸ்களைக் கள்ளத்தனமாகக்கொண்டுவந்து மகாநாட்டு மைதானத்தில் போட்டுவிட்டு புலிவலம் ஓடிவிட்டார். இதுதான் அங்கு நடைபெற்ற விஷயம். இதனை மிகைப்படுத்தி தா. இ. நிருபர் பிதற்றி இருப்பது, அக்கோஷ்டியாரின் பொய்ப் பிரசாரத்தை அப்பிரதேசத்தவரும் உணரும்படி செய்துவிட்டது. அவ்வூரில் மறுநாள் நடைபெற்ற மகாநாட்டில் நமது உத்தமத்தலைவர் மௌலானா மௌலவீ செய்யித் முர்தஜா சாஹிப்பஹாதுர் M. L. A. தலைமை வகித்து, இளவாலிபர்களுக்கிடையே புத்துணர்ச்சியை உண்டுபண்ணியதும், அரபி மத்ரஸாவின் அபிவிர்த்திக்கு அடிகோலியதும் பாராட்டத்தக்கதாகும். தவிர ஜனாப் செ. முஹம்மது ஜகரிய்யயாராவுத்தர் அவர்கள் உலமாக்களுக்கும் ஏனையோருக்கும் டீ பார்ட்டி நடத்தி அங்கும் பிரசங்கம் நடைபெறச்செய்ததும், உலமாக்கள் பிரயாணமாகும் வரை வாலிபர்கள் அவர்களைச் சூழ்ந்துகொண்டு ஒப்பற்ற உபசாரம் புரிந்ததும் போற்றத் தக்கதாகும். இறைவன் இவர்களின் மார்க்க பக்தியை மென்மேலும் வளரச் செய்வானாக.

விஜயபுரம் முஸ்லிம் மகாநாடுக்கு முன் அவ்வூரிலுள்ள பலர் உலமாக்களைத் தருவித்துப் பிரசங்கம் கேட்பதா இல்லையாவென்னும் குழப்பத்திலிருந்தனர். இறுதியாய் முஸ்லிம் மகாநாட்டைக் கூட்டுவதென்று தீர்மானித்து, கொடிக்கால் பாளையத்திலிருந்த உலமாக்களை அழைத்து வந்தனர். சில வாலிபர்கள் தாவூதுசாவைத்திட்டி ஏசப்போகின்றனரெனக் கருதியதால், கடைத்தெருவில் பலவாறாகப் பேசிக்கொண்டிருந்தனர். குறிப்பிட்ட நேரத்தில் ஆலீஜனாப் மௌலானா மௌலவீ சையித் முர்தஜா சாஹிப் பஹாதூர் M. L. A. அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் மகாநாடு ஆரம்பமாயிற்று. உலமாக்கள் வழக்கம்போல் பிரசங்க மாறி பொழியச்செய்தனர். ஒன்றை நினைக்கின் அஃதொழிந்திட்டொன்றாகும் என்றபடி தாவூதுசா நிந்திக்கப்படுவார் என நினைத்திருந்ததற்கு மண்விழுந்ததே யாதுசெய்வதென வகையறியாது சிலர், ஒருவாலிபரைத் தூண்டி, பாலியர்கள் 98/100 கெட்டவர்களென்று தலைவர் கூறியதாக அவ்வாலிபருக்குச்சொல்லி, அவருக்கு ஆத்திரத்தை மூட்டி-சபைக்குக்கொண்டுவந்தார்கள். அவர், ஜனாப் மௌலவீ ஷ. கு. முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் பேச்சில் தமக்கு ஆக்ஷேபனையிருப்பதாகக் கூறி, தமக்குப்பேச சந்தர்ப்பம் வேண்டுமென அறிவித்தார். கடைசியில் சந்தர்ப்ப மளிப்பதாகக் கூறப்பட்டது. கூட்டத்தில் பேசாமல் தனிமையில் கேட்டுக் கொள்வதாக நண்பர் மறுமுறை தெரிவித்தார். “ஆக்ஷேபனைக்குரிய விஷயம் யாவருக்கும் தெரியவேண்டியதிருப்பதால் பஹிரங்கக் கூட்டத்திலேயே பேசவேண்டுமென” தலைவர் அவர்களால் பதில் கூறப்பட்டது. பிறகு ஆக்ஷேபனைக்குரிய வாலிபர் சபையில் பேசினார்; நன்றாய்ப்பேசினார்; இவரது தைரியம் உலமாக்களையும் தலைவரையும் பரவசப்படுத்திற்று. தங்களை எதிர்த்த யுவர்மீது இவர்கள் கோபமடைவரோ எனக்கருதினேன்; என் கருத்துக்குமாறாக உலமாக்கள் அவ்வாலிபரின் தைரியத்தைக் கண்டு புகழ்ந்தார்கள்; இவ்வாலிபர் பட்டதாரியாகிச் சட்டக்கல்வி பயின்று லாயராக—வக்கீலாக வருவாராயின் முஸ்லிம்களுக்குப் பெருமையாக இருக்குமே என்று கூறினர். தவிரவும் இவ்வாலிபர்கள் மார்க்கக் கல்வியைத்தெரிந்து கொள்ளாக் குறையினாலேயே இவ்விதம் ஆக்ஷேபிக்க வந்தனர்; இவர்களுக்குச் சரியான விதத்தில் மார்க்கக் கல்வி புகட்டப்பட்டிருக்குமாயின், யுவர்கள் முஸ்லிம் சமுகத்திற்கு பெரிதும் உதவியாக இருப்பர் என்று கூறினர். இவ்வுலமாக்கள் இவ்வாறு கூறியதிலிருந்து, இப்பிரசாரத்திற்கு இவர்கள் புறப்பட்டதானது தனிப்பட்ட நபரின்மீது குரோதங்கொண்டதினாலோ அல்லது துவேஷத்தினாலோ அல்ல என்பதையும், மக்களிடையே உண்மையான சத்திய மதக்கொள்கை பரவவேண்டும் என்னும் நல்லெண்ணம்தான் என்பதையும் தெற்றென விளக்கிக் காட்டுகின்றது.

தஞ்சைஜில்லாவில் பா. தா. வின் உறைவிடமெனவும், அவருச்குச் செல்வாக்கு மிகுந்த இடமெனவும் கூக்குரலிடப்பட்டு வந்த அடியற்கை மங்கலத்தில் நடைபெற்ற சம்பவங்களையும் அரும்பெரும் காக்ஷிகளையும் கூறுகின்றேன். மேன்மைதங்கிய உலமாக்கள் அங்கு பிரசங்கம்புரிய வரப்போகின்றார்களென்னும் குதூகல மிகுதியால், அவ்வூர் வாசிகள்பெரும் ஆனந்தப் பரவசங்கொண்ட

வர்களாகத் திகழ்ந்து, உலமாக்களை வரவேற்புச் செய்வதற்காக புகைரத மன்றத்துக்கு அதிகாலையிலேயே திரள் திரளாக வந்துகூடிவிட்டனர். பிரபலஸ்தர்களும் தலைவர்களும் அன்னாரை தக்கமுறையில் வரவேற்று, அவர்களுக்காக வென்றே தயாரிக்கப்பட்டுள்ள ஜாகைக்கு அழைத்துச் சென்ற காக்ஷி கண்களைக் கவர்ந்து நின்றது. மகாநாடு கூடுமிடத்திற்கு உலமாக்கள் அழைத்துவரப் படுங்கால் அதிர்வேட்டுகள் கிளம்பியவண்ணமாகவே யிருந்தது. ஆனால் அவ்வேட்டுப் போடும் விஷயம் உலமாக்களுக்கு ஏற்கனவே தெரியாத்தலால் திகைத்து நின்றனர். இவ்வாறு ஆடம்பரத்தோடு வரவேற்கப்படுமென்பது உலமாக்களுக்குத் தெரிந்திருந்தால் ஏற்கனவே தடைசெய்திருப்பார்கள். என்றாலும் முந்திவிட்ட விஷயத்தில் தலையிட சந்தர்ப்பமில்லை போலும். பிறகு வழமை போல் மகாநாடு ஆரம்பிக்கப்பட்ட பொழுது, ஐந்து உபசாரப்பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பெற்ற காக்ஷியானது, ஊர்வாசிகள் யாவருக்கும் சத்தியப் பிரசாரகர்களான உலமாக்கள்மீதும், உண்மை பிரசாரத்தின்மீதுமுள்ள விருப்பத்தை தெற்றென விளக்கிக் காட்டிற்று. உலமாக்கள் சாங்கோபாங்கமாய் பிரசங்கமாரி பொழியச் செய்தனர். சிலர் கேள்விகேட்டு தக்க வாயாப்பும் பெற்றனர். பகல் முழுதும் பிரசங்கம் நடைபெற்றதுமன்றி இரவிலும் பிரசங்கம் செய்யப்பட்டது. இப்பிரசங்கங்களில் பா. தா. மார்க்க முரணாகக் கூறிவருபவைகளை எடுத்துக் காட்டி அவைகளைக் கண்டனமுஞ் செய்தார்கள். இக்கூட்டத்தில் புதுச்சேரியிலிருந்து வந்த ஹிந்து ஒருவர் இஸ்லாம் மார்க்கத்தில்சேர்க்கப்பட்டு ஷர்புத்தீன் என்னும் நாமமும் சூட்டப்பெற்றார்.

பின்னர், தாவூதின் அபிமானிகள் வதியும் ஊர் எனக் கூறப்படும் மதுக்கூரில் இரண்டு தினங்கள் மகாநாடு நடைபெற்றது. சில தா. இ. அபிமானிகள் பயந்தனர்; பீதியடைந்தனர். அவ்வூரிலுள்ள இரு சங்கத்தினரும் உபசாரப்பத்திரம் படித்துக் கொடுத்து பா. தா. வை திட்டவேண்டாமெனக் கேட்டுக்கொண்டனர். எந்த இடத்திலாவது தாவூதுசாவை திட்டியோ, ஏசியோ இருந்தாலன்றோ இங்கும் திட்டப்போகின்றனர்? எனவே வழக்கப்படி உலமாக்கள் தங்கள் பிரசங்கங்களை ஆரம்பித்து, பா. தா. இழைத்திருக்கும் தவறுகளை தக்கமுறையில் விளக்கி அதனை குர் ஆன் ஹதீதுகளின் ஆதாரங்களைக் கொண்டு மறுத்து வருவதைக் கண்ட வாலிபர்கள், மறுதினமும் பிரசங்கம் புரியவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்கள். இதன் பயனாய் தாவூதின்மீது அபிமானங் கொண்டிருந்த ஒரு சிலர், "சட்டி சுட்டது, கை விட்டது" என்று பா. தா. மீது கொண்டுள்ள அபிமானத்தை அகற்றிவிட்டனர். தவிர பா. தா.-வின் அபிமானி எனப் பிறர் கருதும்படியாக நடந்து கொண்ட மௌலவிகள் அங்கு நடைபெற்ற கூட்டத்தில் தா. இ.-வின் கொள்கையை மறுத்துப்பிரசங்கம்புரிந்ததிலிருந்து, தாவூது சாவை மௌலவிகளும் ஆதரிக்கின்றார்கள் என்ற மயக்கம் தெளிந்தது.

மன்னார்குடியில் மார்க்காபிமானிகளாகிய ஹிஸ்புல்லாக்களின் பிரசங்கம் நடைபெறாது செய்து விடவேண்டுமென்று சிலர் முயற்சித்தும், மார்க்காபிமானிகள் மகாநாட்டைகூட்டியே முடித்தனர். விரல் விட்டெண்ணக் கூடிய மூன்று நான்கு நபர்களால் என்ன செய்யமுடியும்? தங்கள் முயற்சியில் அயர்ந்து விலகி விட்டனர்; மகாநாடு சிறப்பாய் நடைபெற்று இனிய முறையில் முடிவு பெற்றது.

நிற்க, இந்த ஹிஸ்புல்லாக்களின் அமைப்பு மிக்க நன்றாய் இருந்தது. இதில் முக்கியமாக வேலூர் பாக்கியாத்துஸ் ஸாலிஹாத், புதக்குடி அந்நூருல் முஹம்மதிய்யு, கூத்தானல்லூர் மன்புவுல்உலா, அத்திக்கடை மத்ரஸா, நெய்வால் மத்ரஸா, பூதமங்கலம் மத்ரஸா முதலிய அரபிக்கலாசாலைகள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பியிருந்தது; மத்ராஸ், வேலூர், அய்யம்பேட்டை, பண்டாரவாடை, ஏனங்குடி, உத்தம பாளையம், குளத்தூர் முதலிய இடங்களிலிருந்து பிரபல உலமாக்கள் சமுகங் கொடுத்திருந்தனர். இவ்வுலமாக்களின் திருக்கூட்டத்தில் பிரசங்கிகள், பத்திராசிரியர்கள், நூலாசிரியர்கள், சங்கத் தலைவர்கள், விவேகிகளான தலைவர்கள், ஹாஜிகள் முதலியோர் கலந்திருந்தனர். எனவே, இந்த ஹிஸ்புல்லா திருக்கூட்டம், தென்னாட்டின் உலமாக்களினுடையவும் முக்கியஸ்தர்களினுடையவும் பிரதிநிதிக் கூட்டம் என்று கூறுவது முற்றிலும் பொருந்தும். இம் மகா நாடுகளில் உலமாக்களையும் தலைவர்களை

யும் ஹாஜிகளையும் வரவேற்றுஉபசரித்த விமரிசையான காக்ஷியைப் பார்க்கும்போது, சத்தியப் பிரசாரகர்களுக்கும், மார்க்காபிமானிகளுக்கும், உலமாக்களுக்கும் முஸ்லிம் உலகில் செல்வாக்குக்குன்றவில்லை என்பது நிதர்சனமாயிற்று.

தாவூதுசா வந்தபோதும் கூட்டம் நடைபெற்றதென்றால், சில யூவர்களின்முயற்சியால் மற்றவர்கள் கலந்து கொண்டனர் என்பதும், அக்கூட்டங்களுக்கு வந்திருந்தோர் யாவரும் தா. இ. அபிமானிகளல்லவென்பதும் தெற்றென விளங்கிவிட்டதுடன், பா. தா. வை ஆதரிப்போர் ஆங்காங்கு விரல்விட்டு எண்ணப்படத் தகுந்த விதமாய் இரண்டொருவர் (சாடேதீன்) தவிர வேறில்லை என்பதும் நன்கு ருசுவாயிற்று. தவிர பா. தா.-வின் பிரசாரம் அசத்தியத்தன்மை பொருந்தியதாகயிருந்ததால்தான் விருதுநகரில் 144 - ஐக்கொண்டு உபசாரம் பெற்றாரென்பது எனக்கு நன்கு புலனாய்விட்டது. ஆதலால் பா. தா.-வுக்கு வெற்றி, தா. இ. வுக்கு ஜேஎன்று பறைசாற்ற முற்பட்டிருப்பது வெறும் ஹம்பக்தான் என்பதை நிதர்சனமாய்த் தெரிந்துகொண்டு தாருல் இஸ்லாத்தின்மீது கொண்டுள்ள மூட அபிமானத்தை அகற்றி தௌபாச் செய்து மீண்டுவிட்டேன்.

வேலூர் மத்ரஸாவில் பரபரப்பு.

தா. இ. உண்மை யுணர்ந்தோனின் பிதற்றலுக்கு ஆப்பு.

பா. தா. பொய்க் கூற்றின் சாயம் வெளுத்து விட்டது.

(மாணவர்)

சோதரீர்! தாருல் இஸ்லாம் ஆபீசில் ஏற்கனவே மொழிபெயர்ப்பாளராகவும், சில காலம் முதன்மை ஆசிரியராகவுமிருந்து பல்ட்டி அடித்து, பிறகு இரண்டாவது ஆசிரியராக அமர்ந்திருக்கும் ஹாபிஸ் என்பார், வேலூருக்கு ஏதோ வேலையாக வந்தவர், அரபிக் கலாசாலையாம் நம் பாக்கியாத்துஸ்ஸாலிஹாத் மத்ரஸாவிற்குள் நுழைந்து யாருக்குந் தெரியாது அவரது நண்பரொருவரின் அறைக்குட் சென்று உட்கார்ந்து கொண்டார். அது சமயம் மாணவர்கள் யாவரும் பாடங்களுக்குச் சென்றிருந்ததால் ஹாபிஸின் வருகை, யார் மூலமாகவோ மத்ரஸாவிற் பரவிற்று. உடனே மாணவர் யாவரும் ஆவேசத்துடன் கிளம்பி வந்து யூசுப் நுழைந்து பதுங்கி யிருந்த அறையைச் சூழ்ந்துகொண்டார்கள். மாணவர்கள் பெரும் திரளாக வந்து கூடி நிற்பதைக் கண்ட ஆசிரியர், பூனையைக் கண்ட எலியேபோன்று திகைத்துத் திடுக்கிட்டுவிட்டார். தம்மை யாது செய்து விடுவரோ, எவ்வாறு தப்பி வெளி செல்வது! என்னும் சிந்தை கொண்டு விழித்தவராய் அங்குமிங்கும் பார்த்துக்கொண்டே இருந்தார். இதற்கிடையில் சில மாணவர்கள் ஆரவாரஞ்செய்ய முற்பட்டனர்; சிலர் ஆளை ந..................புத்தி கற்பித்து அனுப்பவேண்டுமென்று கூறினர்; 'இக்காதியானி அறிவிக்கி இவ்விடத்தில் என்ன வேலை, "சோம்பேறிகளை உற்பத்தி செய்யும் பாக்டரி" என்று எழுதிய இவ்வழி........ன் இங்கு எதற்காக வந்தான் என்று சிலரும், வேறு பற் பலர் பற்பலவிதமாகவும் கூறிக்கொண்டே பல கடாவுகள் விடுத்தனர். ஆனால் ஆசாமி எதற்கும் வாய்திறக்காது மௌனவிரதம் பூண்டும், சில கேள்விகளுக்கு "தாம் அவ்விதம் செய்யவில்லை, எழுதவில்லை" என்று பதிலும் கூறினார். சமயம் பார்த்து "யான் ஒரு விவாக சம்பந்தமாக வந்திருக்கிறேன்; அவசரமாகப் போகவேண்டும்; என்னை மன்னியுங்கள்; யான் மூன்றரை மணிக்கெல்லாம் திரும்ப வந்து உங்கள் யாவரின் கேள்விகளுக்கும் பதில் சொல்கிறேன்" எனக் கூறிவிட்டுமெள்ள வெளிப் புறப்பட உத்தேசித்தார். இதனை சிலர் ஒற்றுக்கொண்டார்கள்; சிலரோ "ஆளை விடாதீர்கள்; போனால் திரும்ப வரமாட்டான்" எனக்கூறி

ஆரவாரஞ் செய்தார்கள். இதுதான் தக்க சமயமென்றெண்ணிய ஹாபிஸ் "தப்பித்தது தம்பிரான் புண்ணியம்" என்றவாறு எடுத்தார் ஓட்டம். திரும்ப வந்திருப்பாராயின் சரியான சன்மானம் அடைந்திருப்பார். அந்தோ! பரிதாபம்! பரிதாபம்!! பரிதாபம்!!!

இந்நிகழ்ச்சி சம்பந்தமாகவும், ஏற்கனவே ஹாபிஸின் பாக்கவீ பட்டம் பறிமுதலான விஷயமாய் தங்கள் மனதிலேற்பட்டுள்ள மனக்கவலையின் காரணமாகவும் தா. இ. ஆசிரியர்கள் மத்ர ஸாவின்மீது சீற்றங்கொண்டு பொய்யான — அபாண்டமான — அறவே நிகழ்பெறாத விஷயங்களைத் தங்கள் பத்திரிகையில் பத்திபத்தியாய் பிதற்றியிருக்கின்றார்கள். அப்பிதற்றலை நண்பர்களின் பார்வைக்குஅப்படியே தந்து, அதற்குப்பின் அவைகள் உண்மைக்கு முற்றும் மாறான பொய்க் கூற்றாகுமென்பதை நிரூபிக்கின்றேன்.

தா. இ. 11-8-33-ந் தேதி இதழ், 7-ம் பக்கத்தில் வரையப்பட்டிருப்பதாவது:

வேலூர் மத்ரஸாவில் சலசலப்பு

(உண்மை யுணர்ந்தவன்)

[வேலூர் மத்ரஸாவில் மாணவர்களை "தாருல் இஸ்லாம்" பத்திரிகையைவாங்கிப் படிக்கக் கூடாது என்று சில உஸ்தாதுகள் கட்டளையிட்டனரென்றும் அதனால் மாணவர்களிடையே உஸ்தாதுகளுக்கு விரோதமாய்ப் பெருங்கிளர்ச்சி தோன்றி, தா. இ. ஒன்றுக்குப் பத்தாய் ஆங்குப் பெருகிவருகிறதென்றும் அறிவிக்கும் ரசமான நிரூபம் வருமாறு.]

உஸ்தாதுகளின் அடக்குமுறை

வேலூர் மத்ரஸா பாக்கியாத் துஸ்ஸாலிஹாத் உஸ்தாதுகளிற் சிலர் போர்க்கோலங் கொண்டுவிட்டார்கள்! இஸ்லாத்திற்கு வேறு என்ன குறைவு இருக்கிறது! மத்ராஸாவின் லட்சியங்களும் மாணவர்களின் நோக்கங்களும் உடனே பூர்த்தியாய் விடுமல்லவா? வேலூர் உஸ்தாதுகள் கோபங்கொண்டு விட்டால், ஹிமயமலையும் தாழ்ந்துவிடும்; சூரியனும் திசைமாறி உதிப்பான்; உலக அறிஞர்களெல்லாம் இவர்களுக்கு அஞ்சலிசெய்ய வேண்டியதுதான் போலும்; என்னே இவர்களின் மனப்பான்மை!! நன்னடக்கைக்கு உறைவிடம் என்னும் மகத்துவம் தாங்கிய பெரியதோர் மத்ரஸாவில் இருந்து உபதேசிக்கும் பாக்கியம்பெற்ற இந்த உஸ்தாதுகள் அதன் கண்ணியத்தைக் காப்பாற்றும் சீரிய முறையை என்று கற்றுக்கொள்ளப் போகிறார்கள்? தங்க மகாமேருகிரியின்மேல் ஒரு காகம் உட்கார்ந்ததாம்; அதன் சாயல் பொன் நிறமாயிற்றாம்; இது என்ன தேவலோகப் பட்சியோ என்று பார்த்தவர்கள் பிரமித்தார்களாம்; ஆனால் அவர்களில் ஒருவர் அதைக்கத்தும்படி செய்தாராம்; அதன் குரலைக்கொண்டு அதன் யோக்கியதையைக் கண்டு கொண்டார்கள் என்று கதைசொல்லும். அக்கதையையொத்ததேபோல், வேலூர் மத்ரஸா உஸ்தாதுகளிற் சிலர் நல்ல இடத்திலிருந்தும், இடத்திற்கேற்ற பெருந்தன்மையைச் சம்பாதித்துக் கொள்ளாமல் வீண் சலசலப்புச்செய்து மாணவர்களை அனாவசியமாய் அடக்கியாளப் பார்க்கிறார்கள். கிழ அல்லது போலி வைதிக மிரட்டல்களைக் கண்டு அவர்கள் வீட்டுப் பூனைக்குட்டியும் பயப்படாது என்பதை அவர்களே விரைவில் உணர்ந்து வெட்கமடைவார்கள்.

"தாருல் இஸ்லாத்தை வாங்காதே"

உஸ்தாதுகளின் கோபம் எவ்வழிசென்றது? "தாருல் இஸ்லாத்தை வாங்காதே; படிக்காதே" என்று மாணவர்களுக்கு அவர்கள் உத்தரவு போட்டார்களாம். பின்வரும் சம்பாஷணை அவர்களுக்கும் அவர்களின் மாணவர்களுக்கும் அந்தரங்கமாய் நடந்ததாம்.

உஸ்தாதுகள்:—மாணவர்களே! நீங்கள் நல்லவர்கள்; கீழ்ப்படியும் தன்மை கொண்டவர்கள்; குருவாக்கிய பரிபாலனம் செய்ய வேண்டியது உங்கள் முக்கிய கடமையாகும். குருத்துரோகம் ....

ஒரு மாணவர்:—இந்தப்பூர்வபீடிகை எதற்கு? உங்களுக்கு என்ன ஆபத்து வந்து விட்டது? வேண்டுமானால் உங்களை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கொண்டு செல்ல நாங்கள் தயாராகத்தானிருக்கிறோம்.

உஸ்தாதுகள்:—அதற்காகவல்ல. ஒரு முக்கியமான விஷயத்தைக் குறித்துப் பேசவேண்டும். நாங்கள் கூறுவதை நீங்கள் ஏற்று நல்லபிள்ளைகளாக நடக்கவேண்டும்.

மற்றொரு மாணவர்:—மரம் பழுத்தால் வௌவாலைக் கூப்பிடவேண்டிய அவசியமே இல்லை. நீங்கள் சொல்வது நல்ல விஷயமாயின், நாங்கள் கட்டாயம் கேட்போம். எங்கள் உரிமைக்கும் ஆசைக்கும் பங்கம் விளைவிப்பதானால், 'குருவாக்கிய பரிபாலனம்' என்பது எங்கள் வாயில்தான் இருக்கும்; உள்ளத்தில் காணமுடியாது.

உஸ்தாதுகள்:—நாங்கள் சொல்வதை நீங்கள் விரும்பினாலும் வெறுத்தாலும், எங்கள் இஷ்டப்படி செய்தே தீரவேண்டும்.

மூன்றாவது மாணவர்:—இதுகூட என்னவிருதுநகர் போலீஸின் 144 பிரிவின்கீழ் தடையுத்தரவா? உஸ்தாதுகளுக்குப் போலீஸ் அதிகாரம் உண்டோ?

நான்காவது மாணவர்:—நாங்கள் என்ன ஒப்பந்தக்கூலியா நீங்கள் சொல்லுகிறபடி யெல்லாம் எங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாய் நடக்க?

5-வது மாணவர்:—உங்கள் கருத்து என்ன? அதையாவது சொல்லிவிடுங்கள் பார்ப்போம்!

உஸ்தாதுகள்:—நீங்கள் யாரும் 'தாருல் இஸ்லாத்தை' வாங்கிப் படிக்கக்கூடாது.

மாணவர்கள்:--(எல்லோரும் கோபங்கொண்டு ஏக கோஷத்துடன்) என்?

உஸ்தாதுகள்:—கூடாது. அவ்வளவுதான். என் என்று கேட்காதீர்கள்,

மாணவர்கள்:—வாங்கிப் படிக்கக் கூடாது என்றால், மத்ரஸாவிலேயே எங்களுக்கு அந்த உயர்ந்த பத்திரிகையை இலவசமாய்க் கொடுக்கப் போகிறீர்களா? அப்படியானால் உங்களுக்கு வந்தனம்!

உஸ்தாதுகள்:—இல்லை, நீங்கள் வரவழைக்கக் கூடாது. மத்ரஸாவுக்குள் எந்த மாணவர்கையிலாவது "தாருல் இஸ்லாம்" காணப்பட்டால், உடனே கழுத்தைப்பிடித்து வெளியில் தள்ளப்படுவர்.

மாணவர்கள்:—காரணங்கள் கூறுங்கள். யுவர்களுக்கு உயிர்போல் இருக்கும் அப்பத்திரிகையை, இஸ்லாத்தின் மேன்மைக்கு திரிகரண சுத்தியோடு உழைக்கும் அதை நாங்கள் பகிஷ்கரிக்க முடியாது.

உஸ்தாதுகள்:—"தாருல் இஸ்லாம்" உங்கள் நன்மைக்கு ஏற்றதாகாது. இளைஞர்களைத் தீய வழியில் நடத்திச் செல்கிறது, காதியானிகள் அதை நடத்துகிறார்கள். அது விஷத்திற்குச் சமானமானது, மார்க்கத்தைப் புரட்டுகிறது.

மாணவர்கள்:—நீங்கள் கூறுவதெல்லாம் விநோதமாயும் உண்மைக்கு மாறுபட்டதாயும் இருக்கின்றன. எங்களைப்போன்ற மாணவர்களுக்கு நம்பத்தக்க வழிகாட்டியாகவும் நல்லறிவுச் சுடர்கொளுத்தும் ஞானப் பிரகாசிகையாயும் இருக்கும் அப்பத்திரிகையையும், அதன் பிரசித்திபெற்ற ஆசிரியர்களையும் தாங்கள் குறைகூறுவது எங்கட்குப் பிடிக்கவில்லை. தீயவழிகளில் செல்லும் தடியர்களையும் மாயாவாதிகளையும் மூடநம்பிக்கையில் மூழ்கிக்கிடக்கும் மௌலவீகளையும் சீரிய சன்மார்க்கத்திற்குக் கொண்டுவரக் கூடிய பத்திரிகை "தாருல் இஸ்லாம்" ஒன்றே ஆகும். அதையும் அதன் ஆசிரியர்களையும் தாக்கி, எங்கள் மனதைப் புண்படுத்த வேண்டாம் என்று நாங்கள் வேண்டிக்கொள்கிறோம்.

உஸ்தாதுகள்:—உங்கள் அபிப்பிராயத்தைப் பற்றி எங்கட்குக் கவலையில்லை. மத்ரஸாவில் நீங்கள் இருந்து படிக்கவேண்டுமானால், தா. இ-த்தை வரவழைக்கக் கூடாது ஜாக்கிரதை. இஃதுடன் அந்தரங்கக் கூட்டம் முடிந்தது.)

அடக்குமுறை பலிக்காது

உஸ்தாதுகளின் சலசலப்பும் கட்டளையும் மாணவர்களிடையே பெருங் கோபத்தையும் ஆத்திரத்தையும் உண்டாக்கி விட்டனவாம். "தாருல் இஸ்லாம்" பத்திரிகையைப் படிக்கக் கூடாதென்று சொல்வதற்கு இந்த உஸ்தாதுகளுக்கு என்ன உரிமையிருக்கிறது? நான்கு சுவர்களின் மத்தியில் இருக்கும் 'அரசர்'களான இவர்களின் ஜம்பப் பேச்சும் மிரட்டல்களும் உருட்டல்களும் மத்ரஸாவின் காம்பவுண்டுக்கு வெளியில் செல்லுமா? இதில் பிரவேசிப்பது நியாயந்தானா? உசிதந்தானா? என்பதைக் கவனிக்காமல், வேலூர் உஸ்தாதுகள் ஆழந் தெரியாமல் இறங்கிவிட்டார்கள். அறிவு வளர்ச்சியைக் கண்டு இவர்கள் என் பயப்படுகிறார்கள்? 'அசடுகள்'தாம் அறிஞரையும் பத்திரிகைகளையும் வெறுக்கும். 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்; கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்.' மத்ரஸாவின் மாணவர்கள், இந்தத் தாக்கீது பிறந்த நிமிஷம் முதல், தாருல் இஸ்லாத்தை எங்குச் சென்றாலும், கூடவே எடுத்துச் செல்கிறார்களாம்? தா. இ. த்தின் அற்புதக் கட்டுரைகளை உரக்கக்கூவிப் படிக்கிறார்களாம்! இஃது உஸ்தாதுகளுக்குச் சகிக்க முடிய வில்லையாம். கண்களை மூடிக் கொண்டும், காதுகளை யடைத்துக் கொண்டும் உஸ்தாதுகள் மாணவர்களிடையே போக வேண்டிய நிலைமை அங்கு ஏற்பட்டு விட்டதென அறிகிறோம். குளிக்கப்போனவன் சேற்றைப் பூசிக் கொண்ட கதையாகவே ஓர்

மத்ரஸா உஸ்தாதுகளிற் சிலர் செய்த வேலை முடிந்து விட்டது. மனச் சாட்சிக்கு விரோதமாய், அடக்கு முறையால், மாணவர்கள் பிரியப்படும் பத்திரிகையைப் படிக்க வேண்டாம் என்று பலாத்காரம் செய்யப் புகுந்தால், அந்தப் பாணம் உஸ்தாதுகளின் தலை மேலேயே விழுந்ததாம். அடக்குமுறை, இவ் விஷயத்தில் பலிக்காது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டுகின்றோம்.

ஒன்று பத்தாயிற்று!

'ஒரு பத்திரிகை கூட மத்ரஸாவுக்குள் வரக்கூடாது' என்று உபாத்திமார்கள் கட்டளை யிட்டனர். ஆனால் இக்கட்டளைக்குப் பிறகு, "தாருல் இஸ்லாம்" ஒன்று பத்தாகப் பெருகி விட்டது. தா. இ.-யைப் படிக்காத மாணவன் மத்ரஸாவில் கிடையாது. தா. இ. ஆசிரியர்களைப் போற்றிப் புகழாத மாணவர்கள் இல்லை. இம்மட்டோ! "தாருல் இஸ்லாத்தை" ஒவ்வொரு மாணவனும் வாரப்பிரதிவாரம் கட்டாயம் படிக்கவேண்டும் என்று மாணவர்கள் பிரதிக்ஞை தங்களுக்குள் செய்து கொண்டு விட்டார்கள். மேலும் 'தாருல் இஸ்லாத்தின்' பிரசாரகர்களாக மாணவர்கள் அமைந்து, அதன் அபிவிருத்திக்கு உழைக்கவேண்டும் என்றும் தீர்மானித்திருக்கிறார்கள். பகைவர்களுக்குப் பயந்து, தலையை மணலில் புதைத்துக்கொண்டு இறக்கும் தென்னாப்பிரிக்கா தீப்பறவையே போன்று, தா. இ. ஆசிரியர்களிடத்தில் கொண்ட வெறுப்பை மாணவர்களிடத்தில் காட்டிய உஸ்தாதுகள்ஒன்று நினைக்க, அஃதொழிந்து, வேறொன்றாகி விட்டது! தா. இ. யைக் கையால் கிள்ளி எறிந்துவிடலாம் என்று இந்த உஸ்தாதுகள் எண்ணினர் போலும்! ஆனால், கோடறி கொண்டும் பிளக்க முடியாமல் "தாருல் இஸ்லாம்" வேலூர் மத்ரஸாவில் ஊன்றித் தழைத்தோங்க ஆரம்பித்திருக்கிறது.

உண்மையை வெல்ல முடியாது

பொதுவாக ஒன்று கூறலாம். உண்மையைப் பொறாமைக்காரர்களால் வெல்ல முடியாது. "தாருல் இஸ்லாம்" அறிவுஆராய்ச்சியை விருத்தி செய்கிறது. உண்மை மதப்பற்றை உண்டாக்குகிறது. புதியதோர் எழுச்சியைத்தருகிறது. வீராவேசத்தையும் வைராக்யத்தையும் புகட்டுகிறது. இஸ்லாம் மதக் கோட்பாடுகளை உள்ளதை உள்ளபடி உபதேசித்து, இஸ்லாம் உலக மதமென்பதை விளக்கிக் காட்டுகிறது. ஞான சூரியனை இதை எதிர்க்கும் மின்மினிப் பூச்சிகள் வேலூர் மத்ரஸாவில் இருந்தாலும் சரி, வேறு இடங்களில் கூக்குரலிட்டாலுஞ் சரி, மின்மினிகளால் சூரியனை ஒருநாளும் மறக்க முடியாதென்பது திண்ணம். (தா. இ.)

இதற்கு மறுப்பாய் வேலூர் மத்ரஸா மாணவர்கள் பா. தா. வுக்கு விடுத்த பஹிரங்க கடிதம்

தீய காதியானிக் கொள்கையை மக்களுக்குப் போதித்து வழிகெடுத்து வரும் தென்னாட்டுக் காதியானியாகிய பா. தா. வால் பிரசுரிக்கப்பட்டுவரும் தாருல் இஸ்லாத்தின் சந்தாதாரர்களாயிருந்த வேலூர் மத்ரஸா "பாக்கியாத்துஸ்ஸாலி ஹாத்தின்" மாணவர்கள், பா. தா. வுக்கு எழுதிய பஹிரங்க கடிதத்தின் சரியான நகல்:—

"சென்ற வாரம் 11-8-33-ல் வெளியான உங்கள் பத்திரிகையில் "உண்மையுணர்ந்தவன்" என்பவனால் "வேலூர் மத்ரஸாவில் சலசலப்பு" என்னும் தலையங்கத்தின் கீழ் வரையப்பட்டிருக்கும் விஷயம் இவ்விடம் (மத்ரஸாவில்) நடந்துள்ள உண்மைக்கு முற்றும் முரணாக இருக்கிறது. இவ்விடம் நடந்துள்ள உண்மை விஷயமானது: நாங்கள் ஐந்துபேரும் உங்கள் பத்திரிகையைப் படித்து வந்தோம். இதையறிந்த எங்கள் உஸ்தாதுகள், எங்களை அழைத்து "ஒ மாணவர்களே! நீங்கள் தருவித்துப் பார்க்கும் தா. இ. யானது இஸ்லாம் மதத்திற்கு முற்றும் முரணானதாக இருப்பதாலும் தீய காதியானிக் கொள்கையைப் பிரசாரஞ் செய்யக் கூடியதாக இருப்பதாலும் ஆரம்பக் கல்வியில் மூழ்கியிருக்கின்ற நீங்கள், அதில்காணப்படும் தீயக்கொள்கைகளை மறுப்பதற்கு போதிய கல்வி இல்லாதவர்களாயிருப்பதால் உங்கள் அகீதா-நிர்ணயம் சிதறுண்டுபோகாமலிருப்பதற்காக வேண்டி ஷெ பத்திரிகையை நிறுத்திவிடுங்கள்! எனக்கூறினார்கள். நாங்கள் ஏக மனதுடன் அவர்களின் போதனையை ஒப்புக் கொண்டு உங்கள் பத்திரிகையை நிறுத்திக்கொள்ளும்படி நாங்கள் ஐந்துபேரும் உங்

களுக்குத் தெரிவித்திருக்க, வீண்புரட்டாக உங்கள் பத்திரிகையை நாங்கள் ஆதரித்தது போல் உளறிக்கொட்டி இருக்கிறீர்கள். மேலும் இவ்விடமிருந்து ரஸமான நிருபம் வந்ததுபோலும் எழுதியுமுள்ளீர்கள். பத்திரிகையை நிறுத்திக்கொள்ளும்படி எழுதியதை தவிர வேறுவிதமாக ஆதரித்த வண்ணம் நாங்கள் எழுதக்கிடையாது. எங்களுக்கும் எங்கள் ஆசிரியர்களுக்கு மிடையில் நீர் எழுதியதுபோல் யாதொரு சம்பாஷணையும் நிகழ்ந்தது கிடையாது. "ஒன்றுக்குப் பத்தாய் பத்திரிகை பெருகிவருகிறது" என்று எழுதியதை கவனிக்குமிடத்து, நாங்கள் ஆசிரியர்களுக்குக் கீழ்படியாத மாணவர்களாய் இருப்பதாகக் காட்டியுள்ளீர்! இவ்விடம் உம்முடைய பத்திரிகைக்கு ஒரு சந்தாதார்கூட கிடையாதென்பதை யாங்கள் உமக்குத்தெரியப்படுத்துகிறோம். நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் சுயபதிக்குச் சென்றபின் உமது தீய பிரசாரமாகிய "தாருல் இஸ்லாத்திற்கு" எதிர்ப்புப் பிரசாரர்களாக இருப்போமென்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். இதரர்கள் போலிகளென்றும் நீங்களிருவர்தாம் உண்மைக்குப் பாடுபடுபவர்களென்றும் இராப்பகலாய்ப் பறை சாற்றித் திரிவதும், மாயவலைவீச ஊர் ஊராய்ச் சென்று அவமானத்துடன் நீங்கள் திரும்பி ஓடிவரும் காக்ஷிகளும் மாணவர்களாகிய எங்களுக்கும், உலகபொது மக்களுக்கும் தெரியாத விஷயமன்று. இதுபோன்ற அபாண்டக் கட்டுரைகளை யாங்கள் கவனிக்குமிடத்து உங்கள் பத்திரிகைக்கு "நாசகாலம்" கிட்டிவிட்டதென்பதே வெள்ளிடைவிலங்கல்."

இங்ஙனம்,

அ. மு. ஷாஹுல்ஹமீது,
ம. அ. அப்துற்றஹ்மான்,
மு. முஹம்மது யாசீன்,
ஷா. ஷேகப்துல் காதிர்,
முஹம்மது இப்ருஹீம்.

பொதுமாணவர் கண்டனம்.

சன்மார்க்க முஸ்லிம் சோதரர்காள்!

பா. தாவூத்சா என்பார், சில காலமாக நம்மக்களிடையே காதியானிக்கொள்கையை மறைமுகமாகவும், சிலகால் வெளிரங்கமாகவும் வெளிப்படுத்தி பாமரர்களை வழிகெடுத்தும் ஆங்காங்கு பிளவுகளுண்டுபண்ணியும் வருவதைக் காதாரக்கேட்டும் கண்களால் பார்த்தும் வருகிறோம். அவர் கூறுவதில் பெரும்பாலும் பொய்யும் புரட்டுமாக யிருப்பது அவப்பொழுதே வெளியாகி அவரின் சாயம் வெளுத்துகொண்டே வருவது கண்கூடு. இதற்கு எண்ணிறந்த உதாரணங்கள்கூறலாம். அவைகள் இங்கெடுத்துக்கூற இடந்தராமைக் கருதிவிடுத்தனம். ஆனால் யாங்கள் கல்வி பயின்று வரும் கல்வியின் பொக்கிஷமாம், சீர்திருத்தம் பெறுவதற்கு உறைவிடமாம், தீயகொள்கைகளை அகற்றி ஒழிக்கும் மாசற்ற மருவாம் 'பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்' மத்ரஸாவில் கல்விபயிலும் எங்களைப்பற்றியும் எங்கள் ஆசிரியர்கள் விஷயமாயும் அவர் எழுதத்துணிந்துள்ள பொய்மூட்டைகளையும், மாணவர்கள் மீது அபாண்டமாய்ப் பிதற்றி மனப்பால் குடித்திருப்பதையும் பொதுமக்கள் அறிந்து கொள்வான் வேண்டி இங்கு சற்று விளக்குகின்றோம்.

11-8-33-ல் வெளியான தாருல் இஸ்லாம் பத்திரிகையில் 'வேலூர் மத்ரஸாவில் சலசலம்பு' என்னும் மகுடத்தின் கீழ் 'உண்மையுணர்ந்தான்' பேரால் வரையப்பட்டிருக்கும் கட்டுரையைக் கண்ணுறும் பொதுமக்களுக்கு பா. தா-வின் பொறுப்பற்ற தன்மையும், விபரீதப் பொய்யரைகளும் முற்றும் உண்மைக்கு விரோதமாய், தானே தனக்கு சூட்டிக் கொண்ட "ராமாயண சாயபு" என்னும் நாமத்திற் கேற்றவாறு இருக்கிறதென்பது நன்கு புலனாகும். கலாசாலையின் மாணவர்கள் யாவரும் அவருடைய கட்சியிலிருப்பதாகவும், தா. இ. யை ஒவ்வொரு வாரமும் படிக்கவேண்டுமென்று நாங்கள் பிரதிக்ஞை செய்து கொண்டதாகவும், இன்னும் என்னென்னவோ உண்மைக்கு மாறான பொய் மூட்டைகளை அபாண்டமாய் அளந்து கொட்டியிருக்கிறார்.

இதுவரை தா. இ. ஆசிரியர்கள் பொய்ப் புராண வசனங்களையும், ஆபாச அழுக்காறு கொண்ட பொய் மொழிகளையும் மௌலவிகள் மீதும், பெரியார்கள் மீதும், சன்மார்க்கத்திற் குழைக்கும் முஸ்லிம் பத்திராசிரியர்கள் மீதும் உபயோகித்து வந்து, இதுபொ

ழுது இந்தியாவிற்கே அணிகலமாய் - தென் ஞட்டிற்கே திலகமாய் - மத்ரஸாக்களுக்கே தாயகமாய் - மார்க்கக் கல்விக்கே உறைவிடமாய் கீர்த்திபெற்று விளங்கிவரும் வேலூர் பாக்கியாத்துஸ்ஸாலிஹாத் மத்ரஸாவின்மீது தங்கள் வசைப்புராணங்களைத் தொடுக்கத் துவங்கியிருக்கின்ருர்களென்பது அவர்களது ஆபாசக் கட்டுரையிலிருந்து நன்கு விளங்கக் கிடக்கின்றது. அன்னேரின் இவ்விழியசெயல் அவர்களின் "அழிவுகால அறிகுறி" யென்றே கூறவேண்டியிருக்கின்றது.

சூரியனைக்கண்டு சுணங்கன் குறைத்தால் சூரியனுக்கு எவ்விதக் குறைவும் உண்டாகாதென்பது உலகறிந்த உண்மையாகும். தா. இ. ஆசிரியர்கள் எங்கள் ஆசிரியர்களை இழிவான முறையில் தூஷித்தெழுதிவிட்டு, மாணவர்களாகிய நாங்கள் மத்ரஸாவின் சட்டதிட்டங்களுக்கும், ஆசிரியர்களின் நற்போதனைகளுக்கும் கட்டுப்படாதவர்களாகவும், கிளர்ச்சிக்கார விஷமிகளாகவும் இருப்பதுபோன்று குறிப்பிட்டிருப்பதானது, அவ்வாசிரியர்களின் முதல்தரமான 1-ம் நம்பர் முட்டாள்தனத்தையும், விஷம சூழ்ச்சிகளையும்தெற்றென விளக்கிக் காட்டுகின்றது. "இப்பாதகர்கள்" காணும் பகற்கனவு, மத்ரஸா பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்தில் ஒருக்காலும் நடைபெற மாட்டாதென்பதை பதடிகள் நன்குணர்ந்து கொள்வார்களாக!

தா. இ. ஆசிரியர்கள், இதுவரை முஸ்லிம் பத்திரிகாசிரியர்களையோ,மௌலவிகளையோ, வேறு சம்பந்த நிகழ்ச்சிகளையோ குறைகூறி எழுதி வந்த இழி வியாசங்கங்களில் நூற்றில் ஒரு பாகமேனும் $\frac{1}{100}$ உண்மையாக இருக்கலாமென்று கருதியிருந்த நாங்கள், எங்கள் மத்ரஸா விஷயமாக உளறிக் கொட்டியிருக்கும் பொய்க் கட்டுரையைப் பார்த்ததிலிருந்து, அவர்களால் வரையப்படும் விஷயங்களெல்லாம் முழுதும் $\frac{100}{100}$ புளுகும் கற்பனையுமாகவே இருக்குமென்பதை நன்கு தெரிந்துகொண்டோம். இவ்வாறே உலகமக்கள் யாவரும் தா. இ. ஆசிரியர்களின் பொய்ப் புரட்டுகளையும், பா. தா. வின் விபரீதப் போக்கையும் நன்குணர்ந்திருப்பார்களென்று கருதுகின்றோம்.

வேலூர் மத்ரஸாவின் நடைபெற்றதுதானென்னே !

தா. இ. பத்திரிகை மத்ரஸாவுக்குள் வருவதை அறிந்த மேன்மை வாய்ந்த எங்களாசிரியர்களான ஞானபிதாக்கள், மாணவர்களாகிய எங்களை அழைத்து பின்வரும் உபதேசமொழி புகன்ருர்கள். அதாவது :—

நீங்கள் யாவரும் மார்கக் கல்வி பயிலுவதற்காக, அதிலும் அரபிப் பாஷையைக் கற்றுக் கொள்ளும் நோக்கத்தோடு உங்கள் பெற்ருேர் உற்ருர் உறவினர்களை விட்டு இங்கு வந்திருக்கின்றீர்கள்; கோரி வந்த விஷயத்தில் முழு கவனத்தையும் செலுத்தி தக்க முறையில் தேர்ச்சியடைந்தால் நல்பதவி யடைவீர்கள்; பிற்காலத்திய வாழ்வும் இனிமையுடையதாகும்; சுகமடைவீர்கள்; நம் மத்ரஸாவிற்கும் நற்பெயரும் கீர்த்தியும் கிடைக்கும்.

உங்கள் தாய் பாஷையை எப்பொழுதும் கற்றுக்கொள்ள முடியும்; இதுபொழுது உங்களிற் சிலர், தாருல் இஸ்லாம் பத்திரிகையைப் பார்த்து வருவதாகக் கேள்விப்படுகிறேம்; அதன் ஆசிரியர்கள் காதியானிக் கொள்கைகளை ஆதரித்து அவைகளைப் பிரசாரஞ் செய்ய முற்பட்டிருக்கின்றனர்; அது விஷயங்களை நீங்கள் நன்கறியமாட்டீர்கள்; அவர்கள் பிரகடனப் படுத்திவரும் கொள்கைள் சுன்னத்துவல் ஜமாஅத்துக் கொள்கைக்கு முற்றும் மாறுனதாகயிருப்பதால், ஹிந்துஸ்தானில் வதியும் மேன்மை தங்கிய சிறப்புற்ற மகான்களான உலமாக்கள் யாவரும் அக் கொள்கையுடையவர்களை காபிர் என்றே (பத்வா) மார்க்கத் தீர்ப்பு அளித்திருக்கின்ருர்கள்; நீங்கள் ஆரம்பக் கல்வியுடையவர்களாயிருப்பதால் அக்கொள்கை உங்களையும் பற்றிக் கொண்டு நீங்கள் கெட்டுவிட நேர்ந்து விடலாம். (நஊது பில்லாஹ்) உதாரணமாக, 'இங்கு கல்வி கற்றுச் சென்ற ஹாபிஸ்யூசுப், பா. தா. வோடு சேர்ந்து வழிகெட்டுப்போனதை நீங்களறிவீர்கள்' எனக் கூறி இன்னும் இதுபோன்ற அநேக உபதேசங்கள் புரிந்து,தா.இ. யைப்பார்க்கவேண்டாமெனக் கூறினுர்கள். அவர்களின் திருவாக்கியங்களை யாங்கள் சிரமேற்கொண்டோம்; எங்களில் எவரும் மறுத்துக் கூறவில்லை. உண்மை விஷயம் இங்ஙனமிருக்க, உஸ்தாதுகளுக்

கும் மாணவர்களுக்கும் ஏதோ பிரமாதமாக நீண்ட சம்பாஷணைகளும் எதிர்ப்புகளும் நிகழ்பெற்றதாகவும், மத்ரஸாவில் தா. இ. ஒன்றுக்குப் பத்தாகப் பெருகி வருவதாகவும் ஒரு பெரும் அபாண்டப் புளுகை தா. இ. வில் கொட்டை எழுத்தில் முறத்தகலம் வெளியிட்டுள்ளீர்கள். அவ்வாறு தா.இ. யில் பிதற்றியுள்ளவைகளில் ஒரு சிறிதேனும் உண்மையுண்டா? முழுதும் பொய்யும் புரட்டுமேயன்றி வேறில்லை. பொய் புகலக் கற்றுக்கொள்வதற்கு வேறு எங்கும் செல்ல வேண்டிய அவசியமில்லை. துட்டுக்கு எட்டு மூட்டை வெகு சுலபமாய் இவர்கள் ஆபீசில் வாங்கலாம். பட்டப்பகலை இரவென்று பிரசாரஞ் செய்துவரும் இவர்களைப் பொது மக்கள் பின்பற்றி நடந்து வருவது கொண்டு எத்தகைய விபரீதங்களேற்படு மென்பதை நண்பர்களுணரக்கடவர். எனவே, இஸ்லாத்திற்குத் தொண்டு புரிவதாயும், உண்மையை போதித்து வருவதாயும் பறைசாற்றி வரும் "இப்பொய் பிரசாரகர்களின்" விஷமத்தனத்தை தெற்றென பட்டப்பகலே போல் நன்கு தெரிந்து கொண்டீர்கள். கெட்டிக்காரன் பொய் எட்டுநாள் மட்டுமென்பர். ஆனால் தா. இ. ஆசிரியர்களின் அபாண்டப் பொய்க் கூற்றுகள் மறுநாளே வெளுத்துவிட்டது. என்னே இவர்களின் மௌட்டீகம்! என்னே இவர்களின் பொய்க்கூற்று !! என்னே இவர்களின் பிதற்றல் !!!

இங்ஙனம்,

பாக்கியாத்துஸ்ஸாலிஹாத் மாணவர்கள்,

வேலூர்.

[சென்னைக்குச் சமீபமாக சுமார் 60 மைல் தூரத்திலுள்ள வேலூர் மத்ரஸாவில் ஏதோ நடைபெற்றதாக அபாண்ட கற்பனை செய்து உண்மைக்கு மாறாக பிதற்றியிருக்கும் இவர்கள், 400 மைலுக்கப்பாலுள்ள விருதுநகரில் நிகழ்பெற்றவிஷயங்களையும், 200 மைல்தூரத்திலுள்ள தஞ்சை ஜில்லாவின் நானாபாகங்ளில் சிறப்பாய் நடைபெற்று வெற்றியுடன் முடிவுபெற்ற மாபெரும் மகாநாடுகளின் அரும் நிகழ்ச்சிகளையும் திரித்தும் புரட்டியும் உண்மைக்கு மாறாகக் கூறிவருவதில் ஆச்சரியமொன்றுமில்லை என்பது யாவருக்கும் இனிது புலனாகும்.]

விருதுநகரில் 144 யாருக்கு ?

கண்டதைப் பிதற்றும் காதியானிகளின் கபோதித்தனம்
தண்டபாணியின் திண்டாட்டம்
பா. தா. குஞ்சுகளின் கெக்கரிப்பும் மௌட்டீகமும்

(நேரில் உணர்ந்தோன் வரைவது)

வழி கெட்ட காதியானிப் பிரசாரகராகிய பா. தா. வை சென்ற வருடம் அவரின் சகாக்களாகிய ஒரு சிலர், விருதுநகருக்குத் தருவிப்பதற்குள்ள நோக்கங் கொண்டிருக்கின்றார்கள் என்னும் செய்தி இந்நகர் முஸ்லிம்களுக்குத் தெரியவே, ஆலி ஜனாப் P. N. A. முஹம்மது இப்றாஹீம் சாஹிப் பஹாதுர் அவர்கள் தலைமையின்கீழ் ஒரு பொதுக் கூட்டத்தை நடத்தி, பா. தா. வின் கொள்கையைக் கண்டனஞ் செய்து அவரின் வருகையை பஹிஷ்கரிப்பதென்று ஏகமனதாய்த் தீர்மானம் நிறைவேற்றினார்கள். இதையறிந்த காதியானி பா. தா. வின் சிஷ்யரான ஜனாப் ஆ. யி. அ. இப்றாஹீம்ஷா என்பார், பெரிய பள்ளி ஜமாஅத்தார்களின் முன்னிலையில் வந்து "ஏதோ சிறுவர்களாகிய நாங்கள், பா.தா. வை தருவித்துவிட்டோம்; இனி நம் சமுகத்தைப் பிளவுபடுத்தும் ஷெ "மார்க்கப் புரட்டரை" எவ்வித முகாந்தரத்தைக்கொண்டும் தருவிப்பதில்லை என்றும், இப்போது தருவித்ததை மன்னிக்கவேண்டுமென்றும், தா.இ. ஆசிரியர் மார்க்க விரோதமாக எதுவும் பேசாமல் பார்த்துக்கொள்கிறோம்" என்றும் கூறி ஜமாஅத்தார்களின்

தலைவராகிய ஆலீ ஜனாப் P. N. A. முஹம்மது இப்றாஹீம் சாஹிப் அவர்களிடம் மன்னிப்பும் கேட்டுக்கொண்டார். அதற்கிணங்க, ஜமா அத்தார்கள் அதுபொழுது பா. தா. கோஷ்டியார்களின் தவறை மன்னிப்பதென்னும் தீர்மானத்திற்கு வந்தார்கள். அதுமுதல் ஜனாப் ஆ. இ. அ. இப்றாஹீம்ஷாபோலொற்றவர்கள்சேர்ந்து, பெரியார்களால் ஒற்றுமையுடன் நிறுவப்பட்டிருந்த கமாலிய்யா சங்கத்தில், தென்னிந்திய முஸ்லிம்களில் பிளவை உண்டுபண்ணி பல அரிய மார்க்க மேதாவிகளின் வெறுப்பையும் பிரபல முஸ்லிம் பெரியார்களின் நன்மதிப்பையும் இழந்து மார்க்கப் புறட்டில் ஈடுபட்டிருக்கும் ஆஷாடபூதியாகிய காதியானி புரோகிதரைப் பின்பற்றி அவரது வழிகேட்டை வாயாரப் போற்றியும் புகழ்ந்தும் போலிப்பிசாரஞ்செய்ய முற்பட்டார்கள். ஆகவே, விருதுநகர் பெரிய பள்ளிவாசல் சுன்னத்வல் ஜமாஅத்து முஸ்லிம்கள் எவரும் ஷெ காதியானிக் குஞ்சுகளால் சங்கத்தில் நடத்தப்படும் எவ்விஷயங்களிலும் ஈடுபட விருப்பமில்லாதவர்களாகவே இருந்து வந்தார்கள். மேலும் சென்றவருடம் பா. தா வந்து போனதிலிருந்தே ஜனாப் P. N. A. முஹம்மது இப்றாஹீம் சாஹிப் பஹாதுர் அவர்கள் தாவூதிய்யாக் குஞ்சுகளை அவர்களது முரண்பட்ட கொள்கைகளிலிருந்து சீர்திருத்திய பின்னரே கமாலிய்யா சங்கத்தில் ஈடுபட வேண்டுமென்னும் நன்னோக்கத்துடன் பெரிதும் முயற்சித்துவந்தார்கள். அக்குஞ்சுகள் அதற்கிணங்கி வராத்ததால் தலைவரவர்கள் சங்கத்தின் எக்காரியாதிகளிலும் ஈடுபடுகிறதில்லை.

இந்நிலைமையில், சென்ற 23-7-33உ கமாலிய்யா சங்கத்தின் சார்பாக பா. தா. வைத் தருவித்து "மீலாதேநபி" நடத்தப் போவதாகக் கேள்விப்பட்ட பெரிய பள்ளிவாசல் ஜமாஅத்தார்கள், மிகவும் பரபரப்படைந்து ஷெ தாவூதின் வருகையைத் தடுத்து, மற்ற மத பக்தர்களில் வேறு எவர்களைக் கொண்டாகிலும் ஷெ வைபவத்தை நடத்த வேண்டுமென்பதாக தலைவர்களைக் கேட்டுக்கொண்டார்கள். அதற்கு ஜமா அத்தின் பிரபலகனவான்கள் யாவரும், தாங்கள் "மார்க்கப் புறட்டராகிய" பா. தா. வைத் தருவிக்க விரும்பவில்லை என்றும், அதற்கும் தங்களுக்கும் யாதொரு சம்பந்தமுங் கிடையாதென்றும், ஊரில் நிரவி இருக்கும் ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிப்பவர்கள் காதியானிக்குஞ்சுகள் தாம் என்றும், அன்னோரை சரிப்படுத்தித்தான் தீயபிரசாரத்தைத் தடைசெய்ய வேண்டுமென்றும் கூறிவிட்டார்கள். மார்க்கபிமானிகளென பொய்ப்பறை சாற்றிவரும் விஷமிகளாகிய் தாவூதிய்யக் குஞ்சுகளுக்கு எவ்வளவோ நல்லுபதேசஞ்செய்து பார்த்தும், ஒற்றுமையுடனிருக்கும் சமுகத்திற்கிடையேபிளவை யுண்டுபண்ண வேண்டாமெனக் கூறியும் அசட்டுக் குணம்படைத்த அப்போலி பக்தர்கள் கொஞ்சமேனும் சமாதானத்திற் கிடங்கொடாமல் "தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றேகால்" என்று சாதித்து நின்றார்கள். அதுடனில்லாது என்ன செலவேற்பட்ட போதிலும், தங்கள் சொத்துக்களை விற்றாகிலும் பா. தா. வைத் தருவித்தே தீருவோம்; எவ்வகையிலும் கிஞ்சிற்றும் பின்வாங்கமாட்டோம் என்று பலவாறான அறுவறுக்கத்தக்க முறையில் தா. இ. குழாத்தினர் பிதற்றித்திரிந்தனர். பின்னர் அவர்கள் பிதற்றி அலைந்துகொண்டிருந்ததற்கேற்ப என்னென்னவோ செய்து "மதத்திற்காகப் பாடுபடுகிறோம்" என்று ஓலமிடும்....வுக்கு ரூ. 105-0-0 கைக்கூலி கொடுத்து ஒற்றுமைப்பங்கம் எவ்வளவு நேரிடினும் அதைப்பற்றி கொஞ்சமேனும் கவலைகொள்ளாது எவ்விதமும் 23-7-33-ல் தங்களூருக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். என்னே இவர்களின் மதியீனம்! தன்னை வளர்த்து கல்வி அறிவு புகட்டி முன்னுக்குக் கொண்டுவர அரும்பாடுபட்ட மூதாதைக்குப் பங்கம் விளைவிக்கக்கருதிய பதரின்யுக்தி! தன்னையும் தன் அனந்தர காரர்களையும் பஞ்சமா பாதகங்களுக்கு முக்கிய கர்மங்களாகிய பற்பல அடாச் செயல்களின்று தடுக்க வழியறியா தருதலை குணமுடைய தம்பிரானின் மதியீனம்!! தாம் பா. தா. வைப்போலாய் விடப்போகிறேன் என்று பாடிக்கொண்டிருக்கும் பதடியின் உழைப்புத் தானென்னே !!!

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளைப் பற்றியும், ஏவல் விலக்கல் விஷயமாயும், பொருளாதாரத்தைப் பற்றியும், சுகாதார சம்பந்தமாகவும், ஒற்றுமையைப் பற்றியும் எடுத்துக்கூறி தாங்களும் அனுஷ்டித்துக் காண்பிப்பதுடன் இதரர்களையும் அவ்வாறே

செய்யும்படி கற்பிக்கிறவர்கள் யாராயிருப்பினும் அவர்கள் தாம் நபிமார்களின் அனந்தரக்காரர்களென்று ஒப்புக்கொள்ள வேண்டுமென்றுகூறும் இவர்கள், எதற்காக இஸ்லாமென்னும் பெயரை வைத்துக்கொண்டு இஸ்லாத்தின் மூலக்கொள்கைகளைப் பின்பற்றுதிருக்கின்றனரோ தெரியவில்லை. விருதுநகரில் அடிப்பட்டு சென்னைக்குத் திரும்பி வந்து, "இஸ்லாத்தின் ஐங்கடமைகளைப்பின்பற்றி நடக்காமல் பொய், விபசாரம், குடி முதலியதுற்செய்கைளில் ஈடுபடுவதுகொண்டு தோஷமொன்றும் ஏற்படப் போகிறதில்லை என்று, தமது காதியானிக்குஞ்சுகள் மெச்சிக்கொள்ளும் விதமாகப் பிதற்றி வருவதுதான் உபதேசமோ ? பலே பேஷ் !

23-7-33௳ பகல் 12-30-க்கு விருதுநகர் வரப்போவதாக யிருந்த தாவூதுசா சுன்னத்துவல்ஜமா அத்து முஸ்லிம்களுக்கு பயந்து கொண்டு மதுரையிலிருந்தே சென்னைக்குத் திரும்பிப்போக முற்பட்டுவிட்டார். ஆனால் அவரது கோஷ்டியார், "அநேக ரௌடிகளைச் சேர்த்து வைத்திருக்கிறோம்" எங்களது செலவில்போதிய..........வாங்கிக் கொடுத்து ஊக்கங்கொடுத்து வைத்திருக்கிறோம்; எங்கள் சொத்து சாமான்களை விற்றாகிலும் தங்களைத் தருவிப்போம் என்று சம்பிரதாயஞ்செய்ததைக்காப்பாற்றவேண்டுமென்று" மிகவும் மன்றாடிக்கேட்டுக் கொண்டார்கள். அதற்குமேல் இரவு 10-30-க்கு இவ்விடம் வந்துசேர்ந்தார். இரயில்வேஸ்டேஷனிலிருந்து வரும் வழியில், முனிசிபல் சத்திரத்தில் தங்கியிருந்த கனம் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அவர்கள் பா. தா. வை அழைத்து, எவ்விதமான பிரசங்கமும்நடக்கலாகாது என்றும், மீறி நடந்தால் 151-வது செக்ஷன் பிரகாரம் அரெஸ்ட் செய்யப்படுமென்றும் கூறினார்கள். அதுகாலை ஆங்கு கூடியிருந்த ஏராளமான முஸ்லிம்களின் முன்னிலையில் ஆலீ ஜனாப் P. N. A. முஹம்மது இப்ராஹீம் சாஹிப் பஹாதூர் அவர்கள் பா. தா. வைப்பார்த்து "இவர் ஓர் உண்மை முஸ்லிம் அல்ல ; புலித்தோல் போர்த்திய ஆஷாடபூதியாகிய மார்க்கப் புரட்டர்; இவர் போகுமிடங்களிலெல்லாம் முஸ்லிம் சமூகத்தினருக்குள் பெரும் பிளவையும் ஒற்றுமைக் குறைவையும் ஏற்படுத்தி வருகிறார், இவரால் வெளியிடப்பட்டு வரும் மார்க்க முரண்பட்ட கூற்றுக்களைக் கண்டிக்கும் பொருட்டு, மார்க்க மேதாவிகளான மாபெருந் தலைவர்கள் பல இடங்களிலும் நேர்முகமாகவும் ரிஜிஸ்டர் கடிதங்கள் மூலமாகவும் பப்ளிக் நோட்டீஸ்கள் வாயிலாகவும் அழைத்ததற்கு இவர் கிஞ்சிற்றும் இணங்காது மார்க்கப் புரட்டுகளில் ஈடுபடுவதையே நமது நோக்கமெனக் கருதியிருந்துவிட்டார் போலும்; இவர் உண்மையாளராக இருக்கும்பக்ஷத்தில் இவ்விடம் வந்திருக்கும் காயல் பட்டணம் மௌலவிகள் கேட்கும் வினாக்களுக்குப் பதில் சொல்லட்டும் பார்ப்போம்..............." என்று பலவாறாகக் கேள்வி கேட்டார்கள். அதற்கு பா. தா. எவ்விதமான பதிலும் கூறாமல் மௌனம் சாதித்த வண்ணமே யிருந்துவிட்டு, தமக்கேற்பட்டுள்ள அவமானத்தை மறந்து தற்போது தாம் வெற்றிபெற்று விட்டதாக தமது தா. இ. வில் வாரந்தோறும் விடாது—மறந்துபோகாது—பக்கந்தவறாது பத்தி பத்தியாய் பொய்யும் புழுகையும் நிரப்பி முஸ்லிம்களுக்கிடையே வீண்கிளர்ச்சி செய்து வருகிறார். இவ்வாறான பேடித்தனத்தை என்னென்று கூறுவது ! மார்க்க மறியா இவருக்கும் மதிமயங்கித் திரியும் இவரின் குஞ்சுகளுக்கும் தான் காருண்ய கவர்ன்மெண்டார், சமாதானத்தை நிலைநாட்டும் சற்குணப்பிரியர்கள் 144 தடையுத்திரவு பிறப்பித்தார்கள்.

தமக்குக்கிடைத்த அந்த 144, நமது நாயகம் (ஸல்) அவர்களின் ஜனன ஜெயந்திக்குரியதென்று திரித்துக்கூறும் இவரின் போக்கேபோக்கு! தனக்குக்கிடைத்த அந்த 144 நபிஜயந்திக்கு என்று அர்த்தம் பிரிப்பதுதானோ இவரது பட்டப்படிப்பு !

பா. தா. வுக்கு 144 கொடுத்து அவரை வந்த வழியைப்பார்த்துக் கொண்டு போகும்படிசெய்த விருதுநகர் சுன்னத்துவல்ஜமாஅத்து முஸ்லிம்களையும், அவர்களது தலைவர் ஆலீஜனாப் P. N. A. முஹம்மது இப்ராஹீம் சாஹிப் பஹாதூர் அவர்களையும் போற்றிப் புகழ்ந்து, தென்னாட்டு முஸ்லிம் தலைவர்கள் பலரும் வாழ்த்துத் தந்திகள் கடிதங்கள் பல அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அநேக சங்கங்களும் பொது மகாநாடுகளும் தீர்மானங்களும் நிறை வேற்றிக் கொண்டிருக்கின்றன; இதைக்கண்டு பொறாமை

கொண்டு பா. தா. வும் அவரின் குஞ்சுகளும் வீணே கொக்கரித்துக் கொண்டு திரிகின்றனர். என்னே இக்கோஷ்டியினரின் விபரீதக்கூற்று! சூரியனைக்கண்டு சுணங்கன் குறைத்தால் சூரியனுக்கு யாதொரு கெடுதியும் நேரிட மாட்டாதைப்போல், ஆலி ஜனுப் P. N. A. முஹம்மது இப்ருஹீம் சாஹிப் பஹாதுர் அவர்களையும் அவர்களைச் சார்ந்த உண்மை முஸ்லிம் கனவான்களையும் வீணில் குறைகூறிக் கொண்டு பிணத்தித்திரியும் பொய்யுரையாளர்களுக்கே பங்கம்! பங்கம்!! பங்கம்!!! நீசத்தனமாய் அற்பர்களை போன்று பத்திரிகையில் பத்திபத்தியாய் எழுதிவரும் விஷயங்களுக்கு—உண்மையற்ற பொய்க்கூற்றுகளுக்கு பதில் சொல்லயாரும் விரும்பமாட்டார்கள்; சுணங்கள் குறைப்பதை சூரியன் ஒருபோதும் பொருட்படுத்துவதில்லை என்பதை இக்கோஷ்டியினர் இனியேனும் நண்குணர்வகர்களக!

23-7-33-ந் தேதியிலிருந்து ஒருமாதகாலத்திற்கு 144 ஏற்பட்டிருந்த காலத்தில் விருதுநகரில் எந்த முஸ்லிமேனும் ஒரு பொதுக் கூட்டம் நடத்தியிருப்பதாக எண்பிக்கமுடியாவென்று வாய்வேதாந்தம் பேசிய தண்டபாணி பிள்ளையின் பிதற்றல் யாதுவாயிற்று? ஏனெனில் 25-7-33-ந் தேதி பெரிய பள்ளிவாசல் தெருவில் ஜனுப் பெ. உ. உமர் பிள்ளை இராவுத்தர் & ஜனுப் பெ. நா. அ. முஹம்மது இப்ருஹீம் சாஹிப் இவர்களின் இல்லத்து முன்னிலையில் நடந்த கூட்டத்தையும், 18-8-33-ந் தேதி சென்னை பிரபலத் தலைவர்களான ஆலீஜனுப் கான்பஹாதுர் அல்ஹாஜ் மௌலானு மௌலவீ ஜியாவுத்தீன் முஹம்மத் சாஹிப், ஆலீ ஜனுப் சௌகார் C. அப்துல் ஹகீம் சாஹிப், ஆலீ ஜனுப் யஅகூப் ஹஸன் சேட் முதலியோர் இங்கு விஜயஞ் செய்தகாலை பெரிய பள்ளிவாசலில் ஜனுப் P. N. A. முஹம்மது இப்ருஹீம் பஹாதுர் அவர்களின் தலைமையின்கீழ் நடை பெற்ற மாபெருங் கூட்டத்தையும் இவர் அறியார் போலும். ஏற்கனவே பத்திரிகைகளில் ஷை கூட்டங்கள் நடைபெற்றதாக வெளிவந்திருப்பதைப் பார்த்தேனும் இவர் வெட்கமடைந்திருக்கக் கூடுமென்று கருதுகிறோம் ஆகவே, தீயப்பிரசாரஞ்செய்துவரும் தாவூது கோஷ்டியினரின் மாய வலையில் சிக்கிக் கொள்ளாமலிருக்கும்படி சகல முஸ்லிம்களையும் கேட்டுக்கொள்வதுடன், நேரான பாதையைக்காட்டி சீராக நடத்திவைக்கும்படி எல்லாம்வல்ல அல்லாஹ்வை இரஞ்சி நிற்கின்றோம். வஸ்ஸலாம்.

ஹிஸ்புல்லாக்களின் சுற்றுப் பிரயாண யாதாஸ்து

நேயன்மீர்!

சன்மார்க்கப் பிரசாரர்களாகிய மேன்மை தங்கிய உலமாக்களும், கனவான்களும், பிரமுகர்களும், தலைவர்களும் தஞ்சை ஜில்லாவின் பற்பல தாலூக்காக்களிலுள்ள முஹம்மது பந்தர், கூத்தாநல்லூர், புதக்குடி, அத்திக்கடை, பூதமங்கலம், கொடிக்கால் பாளையம், விஜயபுரம், அடியக்கமங்கலம், மதுக்கூர், மன்னார்குடி முதலிய ஊர்களுச்குச் சென்று சத்தியப் பிரசாரஞ்செய்து இஸ்லாத்தின் உன்னத மேன்மைகளையும், சத்தியப் பிரசாரத்தின் மகத்துவங்களையும் மக்களிடையே விளக்கிக் காட்டியும், சில காலமாக நந்தமிழ் நாட்டில் பரவிவரும் தீயவழி கெட்ட காதியானிக் கொள்கைகளின் மாறுபாடான முறண்பட்ட செய்கைகளை எடுத்து விளக்கி வருவதையும் ஒன்று திரட்டி புத்தகரூபமாய் வெளியாக்கத்தக்க முயற்சி நடைபெற்று வருகிறது. அவ்வரும் நூல் கூடியசீக்கிரம் அன்பர்களின் சமூகத்திற்குச் சேர்க்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சாத்தன்குளத்தில் சென்னைத் தலைவர்கள்

சில நாளைக்குமுன் சாத்தன்குளத்திலேற்பட்ட காதியானிக் குழப்பத்தினல் அவ்வூர் பொதுஜனங்களுக்கிடையே பலவாறான கிளர்ச்சிகளும் சச்சரவுகளும் ஏற்பட்டும், கமாலியா ஸ்கூல் நிருவாகிகளுக்கிடையே அபிப்பிராயபேதமேற்பட்டும் வந்ததின் பயனாக ஸ்கூல் அபிவிருத்திக்குப் பலவகையிலும் தடை ஏற்பட்டிருந்தது. இதுவிஷயம் சென்னை மாஜீ நகர ஷரீப் ஆலீ ஜனப் சவுகார் வி. அப்துல் ஹகீம் சாஹிப் பஹாதுர் அவர்களுக்குத் தெரியவே, ஏற்கனவே அந்த ஸ்கூல் திறப்புவிழாவின்போது தாங்கள் நன்கொடை அளிப்பதாக வாக்களித்து சென்னை பிரபல வர்த்தகர் ஆலீ ஜனப் அ. பி. மு. செய்யித் இப்ருஹீம் & பிரதர்களிடம் கொடுத்திருந்த ரூ. 5000-யும் ஸ்கூல் செலவிற்காகக் கொடுக்கக்கூடாதென்றும், ஊரில் ஒற்றுமை ஏற்பட்டு நிருவாகிகளுக்கிடையே காணப்படும் அபிப்பிராயபேதம் நீங்கும்வரை தாங்கள் கொடுத்த ரூபாய் ஐயாயிரமும், ஜனப் அ. பி. மு. செ. அவர்களிடமே இருக்கவேண்டுமென்றம் தெரியப்படுத்திவிட்டார்கள். இதுவிஷயம் ஏற்கனவே ஸ்கூல் கமிட்டி மானேஜருக்கும் தெரிவிக்கப்பட்டுப்போயிற்று. இப்பொழுது அந்த ஸ்கூல் கமிட்டியிலுள்ள ஜனப்களான அ. இ. சுலைமான் சாஹிப், ஷேகப்பா இவர்கள் சென்னைக்கு வந்து ஜனப் ஹகீம்ஜீயைக்கண்டு ஊரிலேற்பட்டுள்ள காதியானிக் கிளர்ச்சிக்கும் ஸ்கூலுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்று தெரிவித்துக்கொண்டார்கள். ஹகீம்ஜீ அவர்கள் கூடிய சீக்கிரம் சாத்தன்குளம் வந்து விஷயங்களை நேரில் விசாரித்து ஒழுங்கு செய்வதாகக் கூறி, அதன்படி ஜனப்களான மௌலானா மௌலவீ அல்ஹாஜ் கான்பஹாதுர் ஜியாவுத்தீன் முஹம்மது சாஹிப் மௌலானா யஅகூப்ஹஸன் சேட் இவ்விருவரையும் அழைத்துக்கொண்டு 16-8-33-ந் தேதி சாத்தன்குளம் விஜயஞ்செய்தார்கள். ஆரம்பமாக ஜாம்ஆப்பள்ளியிலிறங்கிவிட்டு ஜனப்களான அ. பி. மு. செய்யித் இப்ருஹீம் சாஹிப், எ. இ. சுலைமான் சாஹிப் ஆகியவர்களின் விருந்தினராகத் தங்கியிருந்தார்கள். அன்று மாலை சாத்தன்குளம் முஸ்லிம் ஜமாஅத்தார்களாலும், யூனியன் போர்டாராலும் வடக்குப்பள்ளி ஜமாஅத்தார்களாலும் உபசாரப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டது. மறுநாள் கமாலிய்யா ஸ்கூல் கமிட்டியாரால் உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டபின் ஸ்கூல் நிருவாகிகளுக்குள் ஏற்பட்டிருந்த அபிப்பிராயபேத விஷயங்களைத் தலைவர்கள் தெரிந்துகொண்டார்கள். விஷயங்களை நன்கு தெரிந்துகொண்ட கனம் ஹகீம்ஜீ அவர்கள், நிருவாகக் கமிட்டியைக் கலைத்துவிட்டு புதிதாக ஒரு கமிட்டியை அமைத்து டிரஸ்டிகள் ஏற்படுத்தி சென்னைக்குச் சென்று அதற்கு வேண்டிய சட்டதிட்டங்கள் தயார்செய்து அனுப்புவதாகவும், அதனை இருசாராரும் ஒப்புக்கொண்டால் ரிஜிஸ்டர் செய்து வைத்து தாங்கள் வாக்களித்திருந்த ரூபாய்க்கு சொத்து வாங்கிக் கொடுப்பதாகவும், ஸ்கூல் நிருவாகிகளில் காதியானிகள் யாருமிருக்கக்கூடாதென்றும் இனி யாரும் காதியானியாகிவிட்டால் அதைவிட்டு நீங்கிவிடவேண்டுமென்றும் கூறிவிட்டு, மறுநாள் காலை சென்னைக்குப் பிரயாணமாய்விட்டார்கள்.

இஷா அத்துல் ஹஸனாத்

பீதர்ஜுமத்தில் பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்

வேலூர் மத்ரஸயே பாக்கியாத்துஸ்ஸாலிஹாத் அராபிக் கலாசாலையின் ஸ்தாபகரும், ஷம்ஸுல் உலமாவுமாகிய அஃலா ஹஸ்ரத் கிப்லா மர்ஹூம் வ மக்பூர் அல்ஹாஜ் ஷாஹ் அப்துல் வஹ்ஹாப் சாஹிப் கிப்லா, அவர்களினது கட்டளைக்கேற்ப,ஷெ கலாசாலையின் ஆசிரியரும், கியாதிவாய்ந்த வாயிஜுமாகிய மௌலானா மௌலவீ அல்ஹாஜ்அப்துல் காதிர்பாதுஷா சாஹிப், மர்ஹூம் வ மக்பூர் அவர்களால் உர்தூவிலியற்றப் பெற்றுள்ள "அல்பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்" என்னும் அரும் நூலின் மகிமையை இவ்வுலகு நன்கறிந்திருக்கின்றது. ஆனால் அதன் அரும்பெரும் பிரயோசனங்களை உர்தூ பாஷை மட்டுங் கற்றுள்ள ஒரு சாரார் மட்டும் அடைந்து வருவதைக் கண்ட, அக் கலாசாலையின் நாஜிர் மௌலானா மௌலவீ அல் ஹாஜ் ஜிபாவுத்தீன் முஹம்மத் சாஹிப் கிப்லா அவர்கள், இவ்வரும் நூல் நந்தென்னாட்டில் மிகுதமாயுள்ள முஸ்லிம்களின் பழக்கத்திலுள்ள தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சிடப்படுமாயின், அளவற்ற பிரயோசனமேற்படுமெனக் கருதியதாலும், அதனைத் தமிழில் மொழி பெயர்த்து அச்சிடுமாறு பன்முறையும் பல கனவான்கள் வேண்டிக் கொண்டதற்கிணங்கவும் மொழி பெயர்த்து அச்சிடப் பட்டிருக்கின்றது.

இவ்வரும் நூலில், நம்மவரின் நித்திய அலுவல்களாகிய உணவு, உடை, கைத்தொழில், வர்த்தகம் முதலிய விஷயங்கள் சம்மந்தமாக நம் சன்மார்க்கம் என்ன சட்ட திட்டங்களை ஏற்படுத்தி யிருக்கிற தென்பதையும் அவைகளிலெது வஸ்த்து சன்மார்க்கத்திற்கு முரண்பட்டிருக்கிறதென்பதையும் நன்கு விளக்கப் பட்டிருக்கிறது. எனவே, இஃது நம்மவர்களுக்குத் தக்கப் பிரயோசன மளிக்கவல்ல நூல் எனத் தைரியமாய்க் கூறலாம். இதில் 2000-க்கு அதிகமான "மஸ் அலாக்கள்" அடங்கியிருக்கின்றன. இதனை ஒவ்வொருவரும் வாங்கிப் பார்த்து பயனடைவார்களென மிக மிக எதிர் பார்க்கின்றோம்.

கிரயம் ரூ. 1—8—0

கிடைக்குமிடம் :— மானேஜர்,

மத்ரஸா பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்,

அரபிக் காலேஜ், வேலூர்.

F. M. S. & S. S. ஏஜெண்டு,

மெஸர்ஸ். K. A. பகீர் முஹம்மது சாஹிப் & Co.,

27, ரம்பா ஸ்டீட், கிள்ளான்.

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.